[illegible]

ഭാഗങ്ങൾ 5–6.

[illegible] 4 മാർച്ച് 1953.

DIGITIZED

JL
Rm21193, [illegible]
N52:6.5–6.
199867

ஹிந்துபாஷிணீ

ஆசிரியர்: R. முத்துகிருஷ்ண சாஸ்திரிகள்

149

நந்தன ஹூ தை மீ மாசி மீ

1953 ஹூ பிப்ரவரி மீ மார்ச்சு மீ

Vol. VI No. 4 & 5

149 / 2.53

ஹிந்து விவாஹ சீர்திருத்த மசோதா	3
ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் அபிப்ராயம்	5
ஸ்ரீ ரகுவீரகத்யம்	9
தர்ம சாஸ்திரக் கிரந்தங்கள்	13
சிதம்பர க்ஷேத்திர மஹாத்மியம்	17
ஸ்ரீ மனுசேசு ச்லோகங்கள்	21
புயல் நிவாரண உதவி	24
பாராட்டுக்கூட்டத்தில்	28
கோபப்பிரஸாதம்	30
ஸூரிய கிரகணங்களும் நமது நாடிகளும்	33
மாணவர் ஸம்ஸ்கிருதம்	41
ஸமஸ்கிருத ஸம்பாஷணம்	42
தைத்திரீயோபநிஷத்காரிகா—முகவுரை	44
,, மூலமும் உரையும்	1-8
நயனரோக சிகித்ஸாதீபம்	13-20

MADRAS

ஆபீஸ் 1835/3 மேலவீதி தஞ்சை.

வருடச்சந்தா ரூ 3 . தனிப்பிரதி அணா 8

Hithabhashini.

Dharmarakshamani
R. Balasubramani Aiyar B. A, B.L. M. L. C
Advocate
HIGH COURT. MADRAS.
" Ashrama "
Luz
Mylapore Madras (4)
11—2—1953

The Hitabhashini is a montnly journal edited by Brahmasri Pandit Muthukrishna Sastrigal. It was started 6 years ago. It contains very useful and interesting articles on subjects of literary, religious and culturel interest, translation in Tamil of classical works in Sanskrit such as "SIVANANDA LAGARI." I was a life member of the journal.

It deserves every help and encouragement by lovers of Sanskrit and Tamil.

(Sd) *R. Balasubramania Aiyar*

V. RAGHAVAN, M. A., Ph. D.
Head of the department of Sanskrit, **UNIVERSITY OF MADRAS.**
TRIPLICANE, MADRAS.
12.2.53

Brahmasri Muthukrishna Sastrigal has left the beaten track of Sanskrit Siromanis and has planned to serve the cause of Sanskrit & Indian Culture by placing before the public popularexposition of these through a Tamil - Sanskrit periodical appropriately called Hitabhashini. The Journal has been doing sustained work and with increased public support can expand its scope and achieve its laudable objective in a more effective manner. His endeavour deserves the support of patrons of Indian Culture.

(Sd) V. Raghavan.

முக்கிய அறிவிப்பு

1953-ம் வருஷ பிப்ரவரி மீ மார்ச்சு மீ இரு மாதங்களுக்கும் சேர்த்து இந்த இதழ் வெளியிடப்பட்டிருக்கிறது. ஏப்ரல் மீ இதழ் மே மீ முதல் வாரம் வெளிவரும்.

மானேஜர் :
"ஹிதபாஷிணி"

நெ. 4 அக்ஷர சகுனம்

உங்கள் காரிய சித்தியைப்பற்றி அறிய இந்நூல் உங்களுக்கு மிக்க பயன்படும். இது தஞ்சை ஸரஸ்வதி மஹாலிலிருந்து எடுத்துப் புதிதாகப் பிரசுரம் செய்யப்பட்டது. சொற்ப பிரதிகளே பாக்கி இருக்கின்றன. விலை ரூ. 1

நெ. 6 ஸ்ரீ ராமசந்திர ஸ்துதி விலை அணா 6

நெ. 7 ஸ்துதி குஸுமமாலா

பாராயணத்திற்கு உரிய 13 சிறந்த ஸ்தோத்ரங்கள் கொண்டது. மூலம் தேவநாகரத்திலும் தமிழிலும். தமிழ் மொழிபெயர்ப்புடன் கூடியது. விலை ரூ. 1

நெ. 8 சிவானந்தலஹரி

ஸ்ரீ ஆதி சங்கரர் அருளிச் செய்தது. மூலம் தேவநாகரத்திலும் தமிழிலும். தமிழில் பதவுரை கருத்துரையுடன் கூடியது. பக்கங்கள் 100. விலை அணா 12

நெ. 9 ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேகம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில் உள்ள பல சிறந்த சம்பவங்களைச் சித்தரித்துக் கூறும் ஓர் சிறந்த தமிழ் நாடகம். விலை அணா 6

நெ. 10 கேநோபநிஷத்

மூலம் நாகரத்திலும் தமிழ் விரிவுரையுடனும், விலை அணா 4

மானேஜர் : ஹிதபாஷிணி ஆபீஸ், மேலவீதி, தஞ்சை.

கரூர் கட்டி வைத்திய நிபுணர்

வைத்திய வாசஸ்பதி

பண்டிட் **P. S. ராம சர்மா** அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவங்களால் கண்டு

பிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

199867

“[illegible] சஞ்சீவி”

(Regd)

குழந்தைகளுடைய குலைக்கட்டிகளை எக்நிலைமை யிலும் போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம். எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :—

ஸ்ரீ சக்திவிலாஸ வைத்தியசாலா,

கரூர் S. I. R.

N. B:—[வைத்ய வாசஸ்பதி பண்டிட் **P. S.** ராமசர்மா அவர்கள் பிரதி மாதமும் கோபிச் செட்டிப்பாளையம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், ஈரோடு, நாகபட்டி னம் முதலிய ஊர்களுக்கு விஜயம் செய்து நேரில் குழந்தைகளைப் பார்த்து தகுதியான மருந்துகளை கொடுத்து வருகிறார். தேதி, நேரம் முதலிய விபரங்களை “சக்தி விலாஸ் வைத்ய சாலா, கரூர்” என்ற விலாசத்திற்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.]

ஸ்ரீ:

ஹிந்து பாஷிணி

தொகுதி 6	நந்தன-ஞு தை—மாசி-மீ	1953 பிப்ரவரி—மார்ச்சு-மீ	பகுதி 4&5

ஹிந்து விவாக சீர்திருத்த மசோதா

டில்லி ராஜாங்க சபையில் இப்பெயர் கொண்ட மசோதா ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் ஷை சபை யில் இது விவாதத்திற்கு வரலாம். இச்சந்தர்ப்பத்தில் இதனால் ஏற்படும் தீமைகளையும், சொற்ப நன்மைகள்கூட இல்லை என் பதையும், ஆஸ்திகர்கள் ஆங்காங்கு நியாயமான முறையில் எடுத்துரைக்க வேண்டும். விவாதத்தில் கலந்துகொள்ளும் சட்டசபை அங்கத்தினர்கள் இதை நன்கு உணரும்படியும் செய்யவேண்டும்.

“எக்காரணம் பற்றியும் மதத்தில் சட்டசபை தலையிடக் கூடாது” என்று ஆஸ்திகர்கள் ஆதிமுதல் கூறிவருகின்றனர். தற்காலம் உள்ள சர்க்கார் மதசார்பற்றது என்று கூறிக் கொள்ளுகின்றபடியால் மதத்தில் தலையிடாமல் இருப்பதுதான் நியாயமாகும். ஹிந்து விவாகத்திற்கும் மதத்திற்கும் என்ன சம்பந்தம்? என்பது பலருக்குப் புலப்படாமலிருக்கலாம். அப்படியானால் அதன் உண்மையை அறிய அந்தந்த மத குருக் களை நாடவேண்டும். அல்லது அவர்கள் வெளியிட்ட அபிப் ராயங்களுக்காவது கௌரவமளிக்கவேண்டும். சமீபத்தில் நமது காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள் அவர்கள் இந்த மசோதா “சாஸ்திர விருத்தமானது, சமூகத்திற்குக் கெடுதி விளைவிக்கக்கூடியது” என்பதை ஆணித்தரமான பல யுக்தி களைக்கொண்டு ஸாங்கோபாங்கமாக நிரூபணம் செய்திருக்கின் றார்கள். தினசரிப் பத்திரிகைகளில் அவர்கள் அபிப்ராயம் முழு வதும் விரிவாகப் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இருந்தா லும் தினசரித் தாள்களில் வெளியாகும் மற்றும் பல செய்தி களைப்போல் இந்த அபிப்ராயத்தையும பாவித்து இரண்டொரு தடவை படிப்பதோடுமட்டு மிருக்கக்கூடாது. ஹிந்துக்கள் அனைவரும், ஸமஸ்த சாஸ்திரங்களின் ஸாரபூதமான அற்புத அருள் வாக்கை ஓர் புனித நூலாக பாவித்து குடும்பத்தில் காப் பாற்றி வைக்கவேண்டும். ஹிந்துயுவர்களும் யுவதிகளும் இந்த அபிப்ராயத்தை வரி வரியாகப் படித்து மனனம் செய்யவேண் டும். அவ்விதம் செய்தால் இம் மசோதாவின் முடிவு எவ்வித மிருப்பினும் அதனால் விளையும் தீமைகளுக்கு நிச்சயமாக

உள்ளாகமாட்டார்கள் என்றே நாம் நம்புகிறோம். இந்த நோக்கத்துடனேயே நாம் இந்த அபிப்ராயத்தில் ஒரு வரி கூட விடாமல் பிரசுரம் செய்திருக்கிறோம். இதில் அடியிற் கண்ட சில உருக்கமான அம்சங்கள் அனைவராலும் உற்று கவனிக்கப்பட வேண்டியவை :—

1. "சாஸ்திர முறையை அனுஷ்டித்தபொழுது எந்தப் பெண்ணும் விவாகமாகாமல் இருந்ததில்லை. ஆனால் இப்பொழுது சாஸ்திரங்களைப் புறக்கணித்து, சட்டஞ் செய்யப்பட்டதால் வயதான பெண்கள் கல்யாணமாகாமல் மனம் உடைந்து கண்ணீர் பெருகும் நிலையில் இருக்கின்றனர். பலர் கவனிப்பாரற்று துய்ரப்படுகின்றனர். பலர் கலியாணமாகுமென்ற நம்பிக்கையிழந்து கன்னிகளாகவே இருக்க நேரிடுகிறது."

2. "ஏகதார விவாகம், அத்துடன் வரும் விவாக ரத்து, இதனால் இந்துக்கள் ஜனத்தொகை குறைந்து இந்தியா பெரிய அரசியல் அனர்த்தத்திற்கே உள்ளாகலாம்."

3. "விவாக ரத்தால் சமூகங்களின் நிலை மிக துக்ககரமாக ஆகும். குடும்பங்களில் குழந்தைகள் கவனிப்பாரற்றுப் போக நேரிடும். விவாகம் வெறும் கேலிக் கூத்தாகவே முடியும். ஹிந்து வர்ழ்க்கையில் மிகப் புனிதமாகவிருக்கும் குடும்ப வாழ்க்கையும் பண்பும் சீர்குலைந்துவிடும்."

4. "ஹிந்து விவாகம் ஒரு ஸம்ஸ்காரம் என்பதையே இம் மசோதா தயாரித்தவர்கள் புறக்கணித்துவிட்டனர்."

5. "மசோதாவின் பிரிவுகள் சாஸ்திரத்தை மறுக்கின்றன. யுகம் யுகமாகப் பின்பற்றிய லக்ஷியங்களை சிதறடிக்கின்றன."

6. "தனிப்பட்டவர்கள் தங்கள் கருத்துப்படி நடக்க சுதந்திரம் வழங்குவதாகக்கூறி குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்களும் வைதிக மதாபிமானிகளும் சாஸ்திர விரோதமான சட்டங்களுக்கு உட்படும்படி செய்யக்கூடாது."

7. "ஹிந்து விவாக பந்தத்தை திருப்திகரமில்லாத இதர நாட்டுப் பழக்கங்களைக்கொண்டு இன்னும் தளர்த்த அவசியமோ, நியாயமோ, இல்லை."

8. "அரசாங்கம் எப்பொழுதுமே பிராசீன தர்மத்தை புறக்கணிக்க உரிமை கொண்டாடியதில்லை. முகம்மதிய ஆட்சியில் கூட ஸ்மிருதி சட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது."

9. "மசோதா நிறைவேறும் பக்ஷத்தில் ஹிந்து குடும்பங்கள் சீரழியும். நம் தேசத்தின் ஜீவநாடி, நிலைத்தால் துயருறும் உலகிற்கும் நன்மை பயக்கக்கூடும்."

ஸ்ரீ ஆசாரியஸ்வாமிகள் அபிப்ராயம்

ஹிந்து விவாக ரத்து மசோதா ஹிந்து பொதுமக்களின் மத சம்பந்தமான மனச்சாட்சியிலும் மதானுஷ்டானங்களிலும் குறுக்கிடுவது மாத்திரமல்லாமல் எதிர்கால ஹிந்து சந்ததியாரின் சமூக நலத்தையும் வெகுவாகப் பாதிப்பதாக விருக்கிறது. இந்த மசோதா 1. விவாக வயது, 2. இதர வரணத்தவருடன் விவாகம், இதர மதத்தினருடன் விவாகம், 3. ஏகதாரம், 4. விவாக ரத்து ஆகிய விஷயங்களை பொருத்ததாகவிருக்கிறது.

பெண்களின் விவாக வயதை நிர்ணயிப்பது சாரதா சட்டம் எனக் கூறப்படும் குழந்தைகள் விவாகத் தடைச் சட்டத்தில் ஆரம்பித்தது. இதன் அனர்த்தங்களை இப்போதுள்ள. சந்ததியார் வெகுவாக அனுபவித்து வருகின்றனர். ஹிந்து சாஸ்திரங்களில் ருதுவாகுமுன் பெண்களுக்குக் கலியாணமாகவேண்டுமென்றிருக்கிறது. ஆனால் சாரதா சட்டமும் இப்போது வந்துள்ள மசோதாவும் விவாக வயதைக் குறைந்தது 15 ஆகச் செய்திருக்கிறது. சாஸ்திர முறையை அனுஷ்டித்தபொழுது உயர்ந்த வயது கட்டுப்பாடு இருந்ததனால் நாம் அறிந்த வரையில் எந்தப் பெண்ணும் விவாகமாகாமல் இருந்ததில்லை. ஆனால் இப்பொழுது சாஸ்திரத்தைப் புறக்கணித்து சட்டஞ் செய்யப்பட்டதால் வயதான பெண்கள் கலியாணமாகாமல் மனம் உடைந்து கண்ணீர் பெருக்கும் நிலைமையில் இருக்கின்றனர். பலர் கவனிப்பாரற்று துயரப்படுகின்றனர். அது மாத்திரமல்ல. பல பெண்கள் கலியாணமாகுமென்ற நம்பிக்கையிழந்து கன்னிகளாகவே இருக்க நேரிடுகிறது. சந்தர்ப்பக் கோளாறுகளால் இதில் நேரக்கூடிய இதர அனர்த்தங்களைப் பற்றிக் கூறத் தேவையில்லை. குளிர் தேசங்களான இங்கிலாந்து அமெரிக்கா போன்ற தேசங்களின் வழியை நமது தேச சீர்திருத்தக்காரர்கள் காபி அடிக்கப்பார்க்கின்றனர். ஆனால் அத்தேசங்களில்கூட உயர்ந்த பக்ஷ விவாக வயதைத் திருத்தியமைக்கும் மனோபாவம் இப்போது ஏற்பட்டு வருகிறது. அதிக வயதான பின் விவாகமாவதன் கெடுதிகள் பற்றிய அனுபவமே அதற்குக் காரணம். நம்தேசத்தில்கூட நாள்பட்ட விவாகமாவதை ஆதரித்த சில சட்டசபையினரும் மேனாடுகளைப் பார்த்து அவ்விடத்து அனுபவங்களை அறிந்த பின்னர் தங்கள் அபிப்ராயத்தை மாற்றிக்கொண்டிருக்கின்றனர். இப்போது ரத்தாகியுள்ள ஹிந்து தொகுப்பு மசோதா பற்றி சென்ற பார்லிமெண்டில் நடந்த விவாதத்தில் இந்த தங்களது அபிப்ராயத்தையும் அவர்கள் வெளியிட்டிருக்கின்றனர். ருதுவாகுமுன் சாஸ்திர ரீதியாக விவாகமாவதனால் ஏற்படும் ஆத்மீய நலன்தவிர, அதனால் காம உணர்ச்சி ஏற்படு முன்னர் வாழ்நாள் முழுவதும் பிணைக்கப்படும் தம் கணவரிடம் ஆழ்ந்த விசுவாசம் பெண்களுக்கு உண்டாகிறது.

வர்ண ஸங்கரம்

ஹிந்து சாஸ்திரங்களை மீறி ஒருவருடைய வர்ணத்திற்குப் புறம்பாகவும் (வர்ண ஸங்கரம்) மதத்திற்குப் புறம்பாகவும் விவாகஞ் செய்து கொள்வது ஹிந்து கலாசாரம் பண்புக்கு முற்றிலும் முரணானது. அதாவது பரம்பரை சுபாவ குணங்களைப் பாதுகாப்பது, கடமைகளில் பிரிவினை, சமூக அத்யாத்ம நலங்களை ரக்ஷிப்பது ஆகியவற்றிற்கு விரோதமானது. மறைந்துபோன பல நாகரீகங்கள் அவ்வப்பொழுது தாக்கியும் இந்தப் பண்பின் பலத்தினாலேயே ஹிந்து மதம் பல்லாயிரக்

கணக்கான வருஷங்களாக நிலைத்திருக்கிறது. தவிர சீர்திருத்த விவாகங்கள் குடும்பங்களில் நடக்கும் மதச் சடங்குகளை பாதித்து சாஸ்திரத்தில் நம்பிக்கையுள்ள குடும்பத்தின் இதர நபர்கள் கலந்துகொள்ளக் கூடாமற் செய்யும்.

ஏகதார மணம்

ஏகதார விவாகம், அத்துடன் வரும் விவாக ரத்து இத்தருணத்தில் பல அனர்த்தங்களை விளைவிக்கும். முஸ்லிம்கள் இம்மசோதாவுக்குப் புறம்பாகச் செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்கள் நான்கு ஸ்திரீகளை மணந்து ஜனப்பெருக்கை உண்டு பண்ணி ஹிந்துக்களைவிட அதிகமாகலாம். மேற்கு வங்காளத்தில் சென்ற 50 வருஷங்களில் இவ்விதமே நேர்ந்திருக்கிறது. இதனால் ஹிந்துக்கள் ஜனத்தொகை குறைந்து இந்தியா பெரிய அரசியல் அனர்த்தத்திற்கே உள்ளாகக்கூடும். இருப்பினும் மசோதா ஹிந்துக்கள் நன்மைக்கு எனக் கூறப்படுகிறது. தவிர இத்தேசத்தில் ஆண்களைவிட பெண்கள் அதிகம் எனக் கூறப்படுகிறது. மலடு முதலிய எக்காரணங்களையும் கவனியாது எல்லோர் விஷயத்திலும் ஒரே மாதிரியாக ஏகதார விதியுண்டு பண்ணுவது விவாகமாகாத பெண்களின் தொகையை இன்னும் அதிகரிக்கச் செய்யும். இவர்கள் கவர்ன்மெண்டிற்கும் ஒரு பெரிய பிரச்னையாவார்கள். அதிலும் சீர்திருத்தக்காரர்கள் விதவா விவாகத்தை ஆதரிக்கும்பொழுது இப் பிரச்னை இன்னும் கடுமையாகப் போகும்.

புத்திரன் பிறப்பது ஆத்மீக சிரேயசுக்கு அவசியமென சாஸ்திரம் கூறுவதால் ஏகதார விவாக முறைக்கு விலக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஹிந்து புருஷர்கள் இரண்டாம் விவாகம் செய்து கொள்வது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

விவாக ரத்து ஏற்பாடு துக்ககரமானது

விவாக ரத்து சம்பந்தப்பட்டவரையில், மேனாடுகளைப் பார்த்து இம்மசோதாவில் இம்முறை கையாளப்படுகிறது. ஆனால் மேனாட்டு சமூகங்களின் நிலை இது பற்றிய வரையில் மிக துக்ககரமாகவிருக்கிறது. ஏராளமான விவாக ரத்து வழக்குகளை விசாரித்துள்ள அத்தேச அனுபவம்பெற்ற ஜட்ஜுகள் இந்த அனுபவமேயடைந்திருக்கின்றனர். கணவன் மனைவி தாம்பத்யம் தாற்காலீகமாகச் செய்யப்பட்டால் குடும்பங்களில் குழந்தைகள் கவனிப்பாரற்றுப் போக நேரிடும். பெற்றோர்கள் சண்டையிட்டு பிரியும் பக்ஷத்தில் குழந்தைகள் எதிர்காலம் பாதிக்கப்படும். அதனால் விவாகமென்பது வெறும் கேலிக்கூத்தாகவே முடியும். ஹிந்து வாழ்க்கையில் மிகப் புனிதமாக விருக்கும் குடும்ப வாழ்க்கையும் பண்பும் சீர்குலைந்துவிடும்.

கணவன் தீராத வியாதியினால் கஷ்டப்பட்டால் அவன் விவாக ரத்து செய்யப்படலாமென்பது தான் மசோதாவின் மிகக் கேவலமான பாகம். சாதாரணமாக அக்காலத்தில் தான் வாழ்நாள் முழுவதும் சேர்ந்து வசித்த மனைவியின் உதவியை கணவன் நாடவேண்டிவரும்.

ஹிந்து விவாகம் ஒரு ஸமஸ்காரமென்பதையே இம்மசோதா தயாரித்தவர்கள் புறக்கணித்துவிட்டனர், ஹிந்துக்கள் பாரமார்த்திக வாழ்வுக்கு இசைந்தாற் போலவே, தங்கள் சமூக லௌகீக முறைகளை அமைத்திருக்கின்றனர்., தர்மம் மதம் ஆகியவற்றில் சாஸ்திரங்களை

மறுதளிப்பதற்கில்லை. அப்படி மறுதளிப்பவர்கள் உண்மையாகப் பார்க்கப் போனால் ஹிந்துக்களல்ல. ஏனெனில் ஒரு ஹிந்துவென்றால் அவன் ஆஸ்திகனாகவிருக்கவேண்டும். அதற்கு சாஸ்திர நம்பிக்கை அடிப்படையானது. மதச் சடங்குகளை நடத்துவதற்கு தர்ம பத்னியெனக் கூறப்படும் மனைவி அவசியம். ஆகவே விவாகம் லௌகிக சவுகரியங்களுக்காக மட்டுமின்றி பாரமாரத்திக நலனுக்காவும் செய்து கொள்ளப்படுகிறது. (தர்ம பிரஜாஸம்பத்யர்த்தம்) இந்த வைதிக கர்மாக்களைச் செய்வதற்கு அதே வர்ணத்தவரை மணஞ்செய்து கொள்ளவேண்டும். ஸகோத்ரமாக விருக்கக்கூடாது. ஸபிண்டனாக விருக்கக்கூடாது. இதில் பெண்ணுக்கு எந்த அம்சத்திலேனும் குறைவிருந்தால் அது சாஸ்திரீயமான விவாகமாகமாட்டாது.

ஹிந்து விவாகம் பற்றிய மத அடிப்படை இவ்விதமிருப்பதால் இதன் மதரீதியைப் பாதிக்கும் எந்த ராஜாங்க சட்டமும் மதத்தில் தலையிடுவதாகும். ஹிந்து நம்பிக்கை அத்யாத்மத் தன்மை ஆகியவற்றைக் கெடுத்துவிடும்.

மசோதா வர்ணங்களுக்குப் புறம்பாக மாத்திரமல்லாமல் பௌத்தர், ஜைனர், சீக்கியர் ஆகியோரிடையே விவாகஞ் செய்வதையும் அனுமதிக்கிறது. ஹிந்துக்களும் மற்ற மதத்தினரும் விவாகஞ் செய்து கொள்ள அனுமதிப்பதால் இருவர் மதத்திற்கும் ஹானி உண்டு பண்ணுவதாகும். விவாக ரத்தை உண்டுபண்ணுவதால் கணவன் மனைவியை ஆயுள்பரியந்தம் பிணைக்கும் சக்தியும் குலைக்கப்படுகிறது. மதச் சடங்குகளைச் செய்யவென புனிதமான முறையில் நடத்தும் விவாகம் வெறும் சரீர போகத்தையே நாடுவதாக முடியும். கணவன் மனைவிகளுக்குள் உயிர்போகும் வரையில் பரஸ்பரம் விசுவாசமிருக்க வேண்டுமென்பது சிறந்த சாஸ்திரார்த்தம் என்று மனுவின் நிர்ணயம்.

மசோதாவின் பிரிவுகள் சாஸ்திரத்தை மறுக்கின்றன. யுகம் யுகமாகப் பின்பற்றிய லக்ஷியங்களை சிதறடிக்கிறது. தற்கால சந்தர்ப்பங்கள் இந்த உயர்ந்த லக்ஷியங்களை யடைவதைக் கஷ்டமாகச் செய்திருக்குமாயின், புத்திசாலிகளாகவும் மதப்பற்றுள்ளவர்களாகவும் இருப்பவர்கள் இந்த கெட்ட சக்திகளைப் போக்கடித்து சாஸ்திரீய முறையை ஸ்தாபிப்பதே சரியான காரியமாகும். எப்படியும் கவர்ன்மெண்டு இந்த கெட்ட சக்திகளுடன் சேர்ந்து இன்னும் அதிகக் கெடுதல் உண்டு பண்ணக்கூடாது. தனிப்பட்டவர்கள் தங்கள் கருத்துப்படி நடக்க சுதந்திரம் வழங்குவதாகக் கூறி குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்களும் வைதீக மதாபிமானிகளும் சாஸ்திர விரோதமான சட்டங்களுக்கு உட்படும்படி செய்யக்கூடாது. கட்டுப்பாட்டிற்கு மீறிய சிறுபான்மையோர் எந்த நியாயத்தைக்கொண்டும் உள் பிளவுகளினால் தன் சமூகத்தையே சிதறடிக்கவிடக்கூடாது. சீர்குலைக்கும் சக்திகளுடன் கவர்ன்மெண்டு சேர்ந்துகொள்வதற்கில்லை. மதம் சமூகம் பற்றிய விதிகள் சமூக அனைத்தின் நன்மையைக் கோரி ஏற்பட்டவை. எந்தவிதமான சமூக நியதி ஏற்படுத்தினாலும் அதில் சில நபர்கள் தங்கள் சந்தோஷம் சவுகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டித்தான் வரும். ஒரு சிலர் கஷ்டங்களைப் போக்குவதற்காக சமூக அமைப்பு விதிகளையே மாற்றுவதனால் முன்னைவிட அதிகக் கெடுதிகள் ஏற்பட்டு சமூகம் முழுவதுமே கெடுதியடையக்கூடும். அபூர்வமான சில சந்தர்ப்பங்களைக்கொண்டு பொது விதி செய்வது கொள்கையளவிலேயே தப்பு. கஷ்ட நிவர்த்தி

வேண்டிய எல்லா சந்தர்ப்பங்களுக்கும் ஸ்மிருதிகள் இடம் கொடுத்திருக்கின்றன. இப்போதுள்ள சட்டப்படியே இந்த கஷ்ட நிவர்த்தியைக் கோர்டுகள் அளித்து வருகின்றன. விவாக பந்தத்தை திருப்திகரமில்லாத இதர நாட்டு பழக்கங்களைக்கொண்டு இன்னும் தளர்த்த அவசியமோ நியாயமோ இல்லை.

தர்மம் அரசாங்கத்திற்கும் மேற்பட்டது

தர்மம் அரசாங்கத்திற்கும் மேம்பட்டதென்று இத்தேசத்தில் எப்பொழுதுமே கருதப்பட்டு வந்திருக்கிறது. ' அரசாங்கம் எப்பொழுதுமே பிராசீன தர்மத்தைப் புறக்கணிக்க உரிமை கொண்டாடியதில்லை. முகம்மதிய ஆட்சியில்கூட ஸ்மிருதி சட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்தியக் குடியரசுச் சட்டபடி மத மனச்சாட்சி விஷயத்தில் சுதந்திரம் எல்லோருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு லௌகிக சர்க்கார் மதத்தின் அடிப்படையைப் பாதிக்கக்கூடிய வழியில் ஒரு பிரிவினருக்காகச் சட்டம் செய்வது அனாவசியமானது. அரசியல் அமைப்புக்கே விரோதமானது,

சமூகத்திலுள்ள கெடுதிகளைப் போக்குவதற்காகச் சட்டஞ் செய்வதாகக் கூறப்படுகிறது. ஆனால் அனுபவத்தில் இத்தகைய முயற்சிகளெல்லாம் இன்னும் அதிக சமூகக் கேடுகளையே உண்டுபண்ணுகின்றனவென்பது ஏற்பட்டிருக்கிறது. இந்த மசோதாவினால் சில கெடுதல்கள் அகற்றப்படுமென்று வைத்துக்கொண்டால்கூட இத்தகைய சட்டம் நிறைவேற்றக்கூடாது. இதனால் வேறெந்த நாட்டிலும் காணாத வேத தர்மத்தினால் ஏற்பட்ட விவாகத்தின் சிறந்த லக்ஷியங்களை நாசஞ் செய்யக்கூடாது. சில கஷ்டங்கள் இருந்தாலும் லக்ஷியங்களை பாதுகாக்கவேண்டும்.

மசோதா நிறைவேறும் பக்ஷத்தில் ஹிந்து குடும்பங்கள் சீரழியும். இதன் விசேஷத்தன்மை, பண்பு, பாரமார்த்திகம் எல்லாம் அழியும். இப்போதும் இந்த லக்ஷியங்கள் சமூகக் கெடுதியைப் போக்கக்கூடியவையென பிற நாட்டினரால் கருதப்படுகிறது. நம் தேசத்தின் ஜீவனாடி நிலைத்தால் துயருறும் உலகிற்கும் நன்மை பயக்கக்கூடும். ஹிந்து சட்டத்தொகுப்பு என்பதே ஹிந்து சமூக அமைப்பில் வெறுக்கக்கூடியது. ஜாதிகளும், பிரிவினரும், குடும்பங்களும் அனுஷ்டிக்கும் வழக்கில் வந்துள்ள சட்டங்களை பின்பற்ற ராஜாங்கம் பாதுகாப்பளிக்க வேண்டும், ஜாதி தேச குல தர்மங்களை, வெற்றிபெறும் அரசன் அத்தேசத்தில் பாதுகாக்க வேண்டுமென மனு கண்டிப்பாகக் கட்டளையிட்டிருக்கிறார்.

இக்காரணங்களுக்காக இம்மசோதா சட்டசபையில் சட்டமாக்கப்படக்கூடாதென்பதும் இது கைவிடப்பட்டு சாஸ்திரீய வழக்கில் வந்துள்ளசட்டம் அப்படியே இருக்கச்செய்ய வேண்டுமென்பதும் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் அபிப்பிராயம்.

சென்னை "ஹிந்து" பத்திரிகை மானேஜிங் டைரெக்டர் K. கோபலய்யங்கார் அவர்களும், சென்னை ஹைகோர்டு ஜட்ஜ் T. L. வெங்கிட்டராமய்யர் அவர்களும், கொரநாடு ந. மயூரநாதவியாஸ் அவர்களும், நமது ஹிதபாஷிணிக்குப் போஷகர்களாகச் சேர்ந்து ஆதரவளித்திருக்கின்றார்கள் என்பதை நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மானேஜர் "ஹிதபாஷிணீ"

ஸ்ரீ ரகுவீரகத்யம்.

ஸ்ரீ வேதாந்ததேசிகர் அருளிச்செய்தது.

(டிஸம்பர் இதழ் தொடர்ச்சி)

கிஷ்கிந்தா காண்டம்

प्रभञ्जन तनय भावुक भाषित रञ्जितहृदय !

(ப-ரை) வாயுகுமாரனான ஹனுமானுடைய க்ஷேமகரமான இனிய ஸம்பாஷணத்தால் மிக்க ஆனந்தத்தை அடைவிக்கப்பட்ட மனதை உடையவனே!

வால்மீகி ராமாயணத்தில் கிஷ்கிந்தாகாண்ட ஆரம்பத்தில் காணப்படும் ஆஞ்சநேயனுடைய ஸம்பாஷணம் இராமாயணத்திலேயே தலை சிறந்து விளங்கும் ஓர் கட்டமாகும். ஆஞ்சநேயனுடைய பேச்சைக் கேட்டு பரவசமடைந்த இராமன் அதைப் பற்றி பலவாறாகப் புகழ்ந்துள்ளார்.

तरणिसुतशरणागति परतन्त्रीकृतस्वातन्त्र्य !

(ப-ரை) சூரியபுத்திரனான ஸுக்ரீவனிடம் சரணாகதி செய்ததால் பராதீனமாகச் செய்யப்பட்ட தன் ஸ்வாதந்திரியத்தையுடையவனே.

ஸ்வதந்திரரான ஸ்ரீராமர், சுக்ரீவனை சரணமடைந்தார். அதனால் தனக்குள்ள ஸ்வாதந்த்ரியத்தை இழந்தார். மனுஷ்ய பாவனையில் அம்மாதிரி செய்யப்பட்ட சரணாகதி அப்பெருமானுடைய ஸௌசீல்யம் என்ற சிறந்த குணத்தையே எடுத்துக் காட்டுவதாகும்.

दृढघटित कैलास कोटि विशङ्कट दुन्दुभिकङ्कालकूट दूरक्षेपदक्ष दक्षिणेतर पादाङ्गुष्ठ दरचलन विश्वस्तसुहृदाशय ।

கைலாஸமலையை திடமாக ஆலிங்கனம் செய்தவனும், மிக முரடனுமான துந்துபி என்கிற அசுரனுடைய உடல் இறும்பினாக் குவியல்களை வெகுதூரத்தில் எறியும் திறமை வாய்ந்த இடதுகால் கட்டவிரலை சொற்பம் அசைத்த மாத்திரத்தால் நம்பிக்கை அடைவிக்கப்பட்ட ஸுக்ரீவனுடைய மனதையுடையவனே?

अतिपृथुल बहु विटपि गिरिवर धरणिविवर युगपदुदयविवृत चित्रपुङ्ख वैचित्र्य !

மிகப்பெரிய ஏழு ஸால விருக்ஷங்கள், பெரியமலை, பூமியின் த்வாரம் இவற்றையெல்லாம்தொளைத்துக்கொண்டுஒரேகாலத்தில்

தோன்றியதால் வெளியிடப்பட்ட, ஆச்சரியகரமான பாணங்களின் விசித்திரத்தன்மையைப் பெற்றவனே!

विपुलभुज शैलमूल निबिड निपीडित रावणरणरणक जनक चतुरुदधि विहरण चतुर कपिकुलपतिहृदय विशाल शिलातल दारणदारुणशिलीमुख !

மிகப்பெரிய, மலைபோன்ற கைகளுடைய மூலத்தில் (கக்ஷத்தில்) நெருக்கமாக பீடிக்கப்பட்ட ராவணனுக்கு மரண பயத்தை உண்டுபண்ணினவனும், நான்கு சமுத்திரங்களிலும் விளையாடுவதில் ஸமர்த்தனுமுள்ள, வானர குலத்திற்குத் தலைவனான வாலியின், மார்பாகிற விஸ்தாரமான கற்பாறையை பிளப்பதில் மிகக்ரூரமான பாணத்தை யுடையவனே!

ஒரு ஸமயம் வாலி ஸமுத்திரத்தில் இருகைகளையும் தூக்கி அர்க்கியபிரதானம் செய்து கொண்டிருக்கும் பொழுது இராவணன் பின்புறமாக வந்து வாலியின் கக்ஷத்தில் கைகளைகொடுத்து அவனை தூக்க முயற்சித்தான். அப்பொழுது வாலி இரு கக்ஷங்களிலும் ராவணனின் இருபதுகைகளையும் இறுக இடுக்கிக்கொண்டு நான்கு சமுத்திரங்களுக்கும் சென்றான். அக்காலத்தில் மிகவும் பீடிக்கப்பட்ட ராவணன் தனக்கு மரணம் கூட நேர்ந்துவிடுமோ என அஞ்சினான். அப்படிப்பட்ட வாலியின் மார்பை ஸ்ரீராமர் ஒரேபாணத்தால் பிளந்து தள்ளினார். ஆதலால் இராவணனை ஜயித்த வாலியை வதம் செய்த இராமருக்கு இராவண வதம் மிகவும் சுலபம் என சூசனம் செய்யப்படுகிறது.

(கிஷ்கிந்தா காண்டம் முற்றிற்று)

ஸுந்தர காண்டம்.

अपार पारावार परिघा परिवृत परपुर दव दहन जवनपवन भव कपिवर परिष्वङ्गभावित सर्वस्वदान !

கரைகடந்தசமுத்திரமாகிற அகிழால் சூழப்பட்ட எதிரியின் நகரமான லங்கையாகிற காட்டிற்கு தீ போன்றவரும், மிக வேகமாகச்செல்லக்கூடியவரும், வாயுகுமாரனும், குரங்குகளுள் சிறந்தவருமான ஆஞ்சனேயனை ஆலிங்கனம் செய்துகொண்டதால் ஸமானமாக அளிக்கப்பட்ட ஸர்வஸ்வதானத்தை யுடையவனே!

இந்த ஒரே கத்யத்தில் சுந்தரகாண்டார்த்தம் முழுவதையும் சூசனம் செய்கின்றார் கவி. "கண்டேன் சீதையை" என்ற அமிருதம் போன்ற வார்த்தையைக்கூறி, இராமர் ஸீதை இருவருடைய பிராணன்களை இரக்ஷித்தவாயுகுமாரனுக்குஸர்வஸ்வதானம் செய்யவேண்டுமெனக் கருதினார் இராமர். உடனே ஆஞ்ஜனேயனை இறுகத்தழுவிக் கொண்டார். ஸ்ரீராமருடைய ஆனந்த மயமான உடலால் ஏற்படும் ஆலிங்கனம் ஸர்வஸ்வதானத்தை விடச் சிறந்ததன்றோ.

(சுந்தரகாண்டம் முற்றிற்று)

யுத்த காண்டம்.

विमत सहोदररक्षः परिग्रह विसंवादि विविधसचिवजन विस्रम्भणसमय संभ्रमविजृम्भित सर्वेश्वरभाव।

எதிரியான இராவணனுடைய ஸஹோதரனை விபீஷணனை ஏற்றுக் கொள்ளும் விஷயத்தில், விபரீதமாகப்பேசும் பலவித மந்திரிகளுக்கு நம்பிக்கை உண்டுபண்ணும் காலத்தில் ஏற்பட்ட பரபரப்பால் ஸர்வேச்வரனாக இருக்கும் தன்மையை வெளிப்படுத்தியவரே!

"எதிரியின் தம்பி. ஸ்வயம் இராக்ஷஸனுங்கூட. ஆகலால் விபீஷணனை ஏற்றுக்கொள்ளவேகூடாது" என்று பலவாறாக வாதம் செய்யும் சுக்ரீவன், அங்கதன் முதலிய மந்திரிகளுக்கு விரைவில் விபீஷணன் மேல் நம்பிக்கையை உண்டுபண்ணி அவர்களுடைய அநுமதி பெற்றே விபீஷணனை அங்கீரிக்கவேண்டுமெனக்கருதினார் ஸ்ரீராமன். அவ்விதம் நம்பிக்கை உண்டுபண்ணுவதற்காக பேசும் அவசரத்தில் "ஏ ஸுக்ரீவ! நான் நினைத்தால் என் ஒரே விரலின் நுனியாலேயே இவ்வுலகில் உள்ள பிசாசங்கள் அஸுரர்கள், இராக்ஷஸர்கள் அனைவரையும் கொன்றுவிடுவேன்." எனக் கூறினார். இதிலிருந்து ஸ்ரீராமருடைய ஸர்வேச்வரபாவம் வெளியாயிற்று.

सकृत्प्रपन्नजनसंरक्षणदीक्षित !

ஒருதடவை பிரபத்தி செய்த ஜனங்களை எவ்விதத்திலும் இரக்ஷித்தே தீருவது என்ற தீக்ஷை பெற்றவனே!

பகவதனுக் கிரஹத்தைப் பெறுவதற்கு ஒருதடவை பிரபத்தி செய்தால் போதுமானது என்றும் அவ்விதம் பிரபத்தி செய்

கின்றவன், பிரபத்திதான் மோக்ஷத்திற்கு சாதனம் என்ற அறிவுள்ள பிராணியாக இருந்தால்மட்டும் போதுமல்லாமல், பலிதன், அந்தணன், புருஷன், முதலிய விசேஷங்கள் எல்லாம் தேவை இல்லை என்றும், "ஸக்ருத்" "ஜந" என்ற சொற்களால் தெரியவருகிறது.

सत्यव्रत ।

ஸத்யமான வ்ரதத்தை உடையவனே!

எக்காரணம் பற்றியும் "சரணாகதஸம்ரக்ஷணம்" என்ற ஸ்ரீராமருடைய வ்ரதத்திற்கு பங்கமேஏற்பட்டதில்லை. விபீஷணனுக்கு அபயமளித்தவுடனேயே இலங்கா ராஜ்யத்தில் அவனுக்கு பட்டாபிஷேகமும் செய்து தன்னுடைய விருதத்தை பூர்த்தி செய்துகொண்டார் இராமர்.

प्रतिशयनभूमिकाभूषित पयोधिपुलिन ॥

ப்ராயோபவேச வேஷத்தால் அலங்கரிக்கப்பட்ட, சமுத்திரத்தின் மணல்குன்றுகளை யுடையவனே!

ஸமுத்திர ராஜனின் அருளை உத்தேசித்து ஸ்ரீராமன் கடற்கரையில் ப்ராயோபவேசம் செய்தார். அக்காலத்தில் கடற்கரையில் வேறு ஒருகடல்இருப்பதுபோல் தோன்றியபடியால் மணல் குன்றுகளெல்லாம் மிகவும் சோபையுடன் விளங்கிற்று. மனுஷ்ய பாவனையில் ஸ்ரீராமன் ப்ராயோபவேசத்தைக்கைகொண்டதால் அதை ஒருவேஷமென கவி குறிப்பிடுகின்றார்

प्रलयशिखिपरुष विशिखशिखा शोषिताकूपारवारिपूर ॥

ப்ரளயகாலத்து அக்னிபோல் மிகக்குரூரமான அம்பின் நுனியால் ஸமுத்ர ஜலத்தை வற்றவைத்தவரே

प्रबलरिपुकलहकुतुकचटुलकपिकुल करतलतुलितहृत गिरिनिकर साधित सेतुपथ सीमा सीमन्तितसमुद्र ।

மிக்கவலிமை பொருந்திய எதிரிகளுடன் போர் புரிவதில் ஆசை கொண்டதால் மிகப் பரபரப்புடன் கூடிய வானரக் கூட்டங்களின் கைகளால் பஞ்சுபோல் கருதி அனாயாசமாகக் கொண்டுவரப்பட்ட மலைக்குவியல்களால் கட்டப்பட்ட அணையின் எல்லையால் ஸமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தவனே!

द्रुतगति तरुमृग वरूथिनीरुद्धलङ्कावरोध वेपथु लास्यलीलोपदेश देशिक धनुर्ज्याघोष ॥

மிக வேகமாகச்செல்லும் திறமையுடைய, வானர சேனைகளால் முற்றுகையிடப்பட்ட, இலங்கையாகிற அந்தப்புரஸ்திரீகளுக்கு நடுக்கமாகிற நர்த்தனலீலையை உபதேசம் செய்யும் விஷயத்தில் ஆசார்யனாயிருக்கின்ற வில்லில் பூட்டப்பட்ட நாண் கயிற்றின் கோஷத்தை யுடையவனே?

வானரசேனைகள் இலங்கையை முற்றுகையிட்டவுடன் ஸ்ரீராமன் வில்லில் நாண் ஏற்றி டங்காரம் செய்யுங்காலத்தில் இலங்காவாசிகள் அனைவரும் நடுங்குகின்றனராம். இலங்கையை அந்தப்புரஸ்திரீயாகவும், இலங்காவாசிகளின் நடுக்கத்தை நர்த்தன லீலையாகவும், ஸ்ரீராமருடைய டங்காரசப்தத்தை, நாட்டியக் கலையை உபதேசிக்கும் ஆசார்யனாகவும், இங்கு கவி கற்பித்திருக்கிறார்.

गगनचर कनकगिरि गरिमधर निगममय निजरथ गरुड गरुदनिल लव गलित विषवदनशर कदन ।

ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் மேருபர்வதத்தின் கௌரவத்தை தரிக்கின்றதும் (அதாவது மேருபர்வதத்திற்கு ஒப்பானதும்) வேதமயமானதும், தனக்கு வாஹனமாயுமிருக்கின்ற கருடனுடைய இறக்கைகளின் சொற்ப காற்றினால், நழுவி ஓடிய, விஷத்தை முகத்தில்உடைய அஸ்திரங்களால் (நாகாஸ்திரங்களால்) உண்டான உபத்திரவத்தை உடையவனே!

இந்திரஜித்தால் பிரயோகம் செய்யப்பட்ட நாகாஸ்திரங்களால் இராமலக்ஷ்மணர்கள் கட்டுண்டிருக்குங் காலத்தில், போர்களத்தில் கருடன் தோன்றினார். அவருடைய இறக்கைகளின் சொற்ப காற்று பட்டவுடனேயே நாகாஸ்திரங்கள் எல்லாம் நழுவிவிட்டன என்பது பொருள்.

கருடன் மலைபோல் பெருமனாகவும் ஸுவர்ணமயமாகவும் இருப்பதால், ஆகாயத்தில் சஞ்சரிக்கும் ஸுவர்ணமயமான மேருபர்வதம்போல் இருக்கின்றது என்று இங்குவர்ணிக்கப் பட்டிருக்கிறது.

अकृतचर वनचर रणकरण वैलक्ष्य कूणिताक्ष बहुविध रक्षोबलाध्यक्ष वक्षः कवाट पाटन पटिम साटोप कोपावलेप ॥

வானரங்களுடன் இதற்கு முன்எங்கும் செய்யப் படாத யுத்தத்தை இப்பொழுது புதிதாக செய்வதால் ஏற்படும் லஜ்ஜையால் வக்ரமான கண்களையுடைய பலவித ராக்ஷஸ ஸேனாதிபதிகளின் கதவு போன்ற மார்புகளை பிளப்பதில் உள்ள திறமையால் ஆடம்பரக்கோபம் இவற்றுடன் கூடிய கர்வத்தை பெற்றவனே!

कटु रटदटनि टङ्कृतिचटुल कठोर कार्मुक विनिर्गत विशङ्कट विशिख विताडन विघटित मकुट विह्वल विश्रवस्तनय विभ्रमसमय विश्राणन विख्यात विक्रम।

குரூரமாக சப்திக்கின்ற, தநுஷ்கோடிகளின் டங்காரத்தால் மனோஹரமாயும், மிகக்கடினமாயுமிருக்கின்ற வில்லிலின்றும் கிளம்பிய உக்கிரமான பாணங்களால் பிளக்கப்பட்ட கிரீடங்களையுடையவனும், மிகக்களைப் புற்றவனாய், விச்ரவஸ்ஸின் புத்திரனுமான ராவணனுக்கு இளைப்பாறுவதற்கு அவகாசத்தை அளித்ததால், உலகம் முழுவதும் போற்றப்படும் சிறந்த பராக்கிரமத்தையுடையவனே!

कुम्भकर्ण कुल गिरि विदलन दम्भोलिभूतनिस्सङ्गकङ्कपत्र ॥

கும்பகர்ணன் என்ற குலபர்வதத்தை பிளப்பதில் வஜ்ராயுதம் போன்றதும், எங்கும் தங்குதடையற்றதுமான பாணத்தை யுடையவனே! (தொடரும்)

நமது தர்மக் கிரந்தங்கள்.

('கல்யாண்' மாசிகையில் வெளியானதின் மொழிபெயர்ப்பு)

தமிழாக்கம்-

(வித்துவான் **K. S. சிதம்பரம்.** M. A., 'பாரத்வாஜன்').

தர்மத்தின் ஒரு லக்ஷணமாவது- "**चोदनालक्षणो धर्मः**"- என்றபடி, கிரந்தங்களிற் கூறியிருப்பனவை அநுசரித்து நடப்பதுவேயாகும். உலகில் பரவியுள்ள தர்மங்கள் எல்லாவற்றிற்குமே உரியனவாய் மதிப்புமிக்க கிரந்தங்கள் பல உண்டு. எனினும் கடவுளைப்போலவே ஆதியந்தமில்லாத-நித்தியவஸ்துவான நம் சநாதனமான ஹிந்துதர்மத்தின் கிரந்தங்களினது அட்டவணையே ஒரு பெரிய நூலாய்விடும். அவற்றில் பல பற்றிய முழுவிபரங்களும் இனியும் தெளிவுறாததால், பூர்ணமான அவ்வகை அட்டவணை தயாரிப்பதுகூட சாத்தியமில்லை. நமது தர்ம நூல்களில் பெரும்பகுதி, நம் துர்ப்பாக்கியத்தால் அவ்வப்போது நேர்ந்த பல விதேசிய ஆக்ரமிப்புக்கள் காரணம் நாசமாயிற்று. பல விதேசியர்களின் கையில்சிக்கி அவ்வந்நாட்டிலுள்ள புத்தகாலயங்களில் இடம்பெற்றுள. நம் நாட்டிலேயே, யாருமறியக்கூடாத மூட்டில், மதிப்பறியாதவர் கையிற் சிக்கிப் பதுங்கிக்கிடப்பவை இன்னும் எத்தனையோ! அச்சிடப்பெற்றவற்றினும் பல இப்போது

கிடைத்தற்கரியனவாய்விட்டன. இருந்தும் இன்று நம் அறிவிற்பட்ட நூல்களின் பெயர்களை மட்டிலுமே விவரித்துச் சொன்னாலும், அது ஒரு கிரந்தமாய்விடும். அவ்வகைய நமது தர்ம நூல்களில் பிரதானமான சில பற்றிய சுருங்கிய விவரம் தருவதாகும் இக்கட்டுரை. நமதிளஞ் சிறுவர்கள், பெயரளவிலேனும் அவை பற்றி அறிந்திருப்பது நலம் பயப்பதாகும்.

வேதம், வேதாங்கம், உபவேதம், இதிகாச புராணங்கள் ஸ்மிருதி, தர்சனம், நிபந்தம், ஆகமம் என்பன நம் தர்மக்கிரந்தங்களின் முக்கிய விபாகங்கள். முதலாவதாக வேத நூல்களைப் பற்றிய விபரம் கூறுவோம்.

வேதமாவது ஐவேறு பகுதியிற்பட்டதாகும். மந்திரசம்ஹிதை, பிராம்மணம், ஆரண்யகம், சூத்திரம், அநுக்ரமணீ என்ற இவ்வைந்து பகுதியும் கொண்ட வேதத்தைச் 'சுருதி' (**श्रुति**) என்பர். ருக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வவேதம் என வேதம் நால்வகைப்படும். வேதம் ஒன்றேதான். அது யாகத்தில் நான்குவகையில் உபயோகப்படுவதைக்கொண்டு நால்வகைப்பட்டதாகக் கருதப்படுகிறது. யாகத்தில் 'ஹோதா' (**होता**) சொல்லும் மந்திரத்தொகுதி ருக்வேதமெனவும், 'அத்வர்யு' (**अध्वर्यु**) சொல்பவை யஜுர்வேதமெனவும், 'உத்காதா'(**उद्गाता**) இசையுடன் சொல்பவை சாமவேதமெனவும், 'பிரும்மா' (**ब्रह्मा**) வின் மந்திரபாகம் அதர்வவேதமெனவும் சொல்லப்படும். இவ்வாறாக, ஒரே வேதம், கார்யபேதமநுசரித்து நால்வகையாகப் பெயரிடப்பட்டுள்ளது. இவ்வேதமுழுமையிலும் வர்ணித்திருப்பது கர்மம், ஞானம், உபாஸனை இம்மூன்றினைப் பற்றியேயாகும்.

வேதங்களை இயற்றியவர் எவருமேயில்லை. அவை ஆதியந்தமேயில்லாத ஈசுவரீய ஞானமேயாம். சிருஷ்டியின் ஆரம்பத்தில், பிரும்மாவின் இதயத்திலுள்ளில் பகவான் அவற்றைத் தோற்றுவித்தார். அன்றுமுதல், ஒருவர்கூற மற்றவர் கேட்டு, அவ்வாறே பரவிவந்தவை வைதிக மந்திரங்கள், ஆதலால்தான் அவை 'சுருதி' (**श्रुति**) எனப்படுகின்றன. மனதை ஒருநிலைப்படுத்தி, சமாதிநிலையில் மனனம் செய்வோர்க்கே சுருதியின் உட்பொருள் விளங்குமாதலால், அவற்றை 'மந்திரம்' என்பர். வியாகரணம், நிருக்தம் போன்ற இலக்கண நூல்களின் உதவியால் அவற்றின் பொருளை உள்ளபடி அறிவதியலாது. ஒவ்வொரு மந்திரத்துக்கும் உரிய தேவதையும், சந்தமும் (**छन्दः**) ருஷியும் உண்டு. சந்தமாவது. அவ்வம்மந்திரத்தை உரிய முறையில் உச்சரிப்பதற்கான சுவரத்தை

உணர்த்துவதாகும். மந்திரத்தின் பொருள்காண, அதன் தேவதையைத் தியானிக்கவேண்டும். அவ்வாறு தேவதையைத் தியானித்து,—அம்மந்திரப் பொருளைச் சமாதிநிலையில் இருந்து கண்டவர் द्रष्टा (காண்போர்) அல்லது ருஷி எனப்படுவர். ऋषि, அவ்வம்மந்திரத்தை இயற்றியவரல்ல; அம்மந்திரத்தின் பொருளை உள்ளபடிகண்டு குறித்து வைத்தவராவர்.

வேதங்களைப் படிக்கலாகும் வழிகள் பல. வேதங்களை ருஷிகள், மந்திரங்கள் சிதைவுறாது நிலைத்திருப்பதற்காய், பல் வேறு முறைகளில் சீர்ப்படுத்தி வைத்துளர். ஒரு ரிஷி ஒரே தேவதையைக் கொண்ட மந்திரங்களை ஒருமித்துவைத்தால், மற்றொருவர், ஒரே சந்தத்திலமைந்தனவை ஒருமித்து வைத்துளார். ஒரே ரிஷியின் மந்திரங்களெல்லா வற்றையுமோ அல்லது ஒரே சுவரத்தில் சொல்லவேண்டியவற்றையோ ஒருமித்துச் சீர்ப்படுத்திவைத்தவரும் உண்டு. இவ்வாறாக, வேதங்களின் शाखे கள் உட்பிரிவுகள் பலவாயின. இவ்வகை இருவேறு பிரிவிற்பட்ட மந்திரங்களுள் குறிப்பிடத்தக்க வித்தியாசமேதுமே இராது. ஒரே மந்திரங்கள் முன்னும் பின்னுமாய் அமைந்திருக்கும். எனவே, ஒரு வேதத்தின் ஏதேனும் ஒரு பிரிவு (शाखा) கிடைத்தாலும், அதுகொண்டே வேத முழுமையும் பற்றி அறியலாகும். शाखाग्रन्थ ங்கள் சில காணாமற்போனதால் வேதநூல் மறைந்துவிடாது. வேத शाखे வேதநூலின் ஒரு பிரிவன்று; வெவ்வேறான முறையில் அமைக்கப்பட்ட வேதநூலேயாகும் இது.

ருக்வேதம் 21 शाखे கள் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அவற்றுள், பாஷ்கல (बाष्कल) சாகல (शाकल) शाखेகள் சுத்தரூபத்தில் கிடைத்துள. யஜுர்வேதம், சுக்லயஜுர்வேதம்-கிருஷ்ணயஜுர்வேதம் என இரு பிரிவுகளுள்ளது. முதற்பிரிவு 15ம், இரண்டாம் பிரிவு 85ம் शाखेகள் கொண்டதென்பர். இவற்றில் முதலாவதான சுக்ல யஜுர்வேதத்தின் माध्यन्दिनी शाखे கிடைத்துளது. கிருஷ்ண யஜுர்வேதத்தை தைத்திரீய சம்ஹிதை யென்றும் கூறுவர். இதன் 8 शाखेகள் கிடைத்துள. ஸாமவேதத்துக்கு ஆயிரம் शाखे களுள்ளதாகக் கூறப்படுகிறது. அவற்றுள், கிடைத்துள மூன்றில், कौथुमी शाखे ஒன்றுதான் எவரும் ஒப்புக்கொள்ளத் தக்கபடி சுத்தரூபத்தில் உள்ளது. அதர்வவேதத்தின் 9 शाखेகளுள் शौनक शाखे ஒன்றேகிடைத்துளது.

(தொடரும்)

சிதம்பர க்ஷேத்ர மாஹாத்மியம்

வ்யாகரணந்யாய வேதாந்தமீமாம்ஸா சிரோமணி

ஸோம. ஸேது தீக்ஷிதர்

க்ஷேத்திரம், தீர்த்தம், மூர்த்தி, பூஜை, பூஜகர்கள், என்னும் ஐந்து அங்கங்களுடன் கூடியது புண்யஸ்தலமாகும் என்கிற ஆன்றோர்களின் வாக்கின்படி இச்சிதம்பரத்தில் ஐந்தும் மிகவும் உயர்வாக அமைந்திருக்கின்றன. முன் மூன்றும் முன்பு விவரிக்கப்பட்டுள்ளன. பின்பு உள்ள பூஜை என்பது இச்சிதம்பரத்தில் மட்டும் வைதிக பூஜையைக் குறிக்கும். மஹாபாஷ்யகர்த்தாவான ஸ்ரீ பதஞ்சலி மஹரிஷி "பூஜா பாதஞ்சலம்" என்னும் க்ரந்தத்தில் ஸ்ரீ நடராஜரின் நித்ய, நைமித்திக, விசேஷ, உத்ஸவாதி, பூஜாகல்பங்களை தெளிவுர எழுதி உள்ளார். அதன்படியே இன்றளவும் சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு வைதீக பூஜை நடைபெற்று வருகிறது என்பது மற்றும் ஓர் உயர்வாகும். பூஜகர்களைபற்றிய உயர்வும் முன்பே விரிவாக கூறப்பட்டது. இவ்வித மஹாமஹிமை வாய்ந்த சிதம்பர க்ஷேத்திரத்தின் மஹிமையை விளக்கிக் கூறும் மாஹாத்மியங்கள் ஐந்து, ஊரின் பெயராலேயே ஏற்பட்டுள்ளன. அவையாவன:—சிதம்பர, புண்டரீகபுர, ஹேமஸபாநாத, வியாக்ரபுர, தில்வாரண்ய; என்னும் மாஹாத்மயங்களாகும். முன் இரண்டும் க்ரந்த அக்ஷரத்தில் வெளி வந்துள்ளன. மற்றவை ஹஸ்தலிகிதமாக இருக்கின்றன. இவைகளுக்கு முறையே தென்மொழியில் செய்யுள் வடிவில் உமாபதி சிவாசார்யரால் கோயில் புராணம் என்றும் (சிதம்பர மாஹாத்மியத்திற்கு) சைவ பரஞ்சோதி முனிவரால் சிதம்பர புராணம் (புண்டரீகபுரமாஹாத்மியத்திற்கு) சபாபதி நாவலரால் சிதம்பர ஸபாநாத புராணம் (ஹேமஸபாநாத மாஹாத்மியத்திற்கு) என்றும் இயற்றப் பட்டுள்ளன.

இவ்வித மஹிமை வாய்ந்த சிதம்பர தேவாலயத்தை செப்பனிட்டு, விரிவுபடுத்த யோக சாஸ்திர கர்த்தாவான ஸ்ரீ பதஞ்சலி முனிவர் சிதம்பர ரகசியம் அறிந்து அதனை விச்வகர்மாவிற்கு அனுக்ரஹிக்க, அவனும் அவர் ஆணையை சிரமேற்கொண்டு ஆலயம் அமைத்தனன். அதன் அமைப்பை சிறிதே காண்போம். ஓர் மஹாயோகியின் சரீரத்தை வடக்கே தலையையும்; தெற்கே பாதமுமாக வைத்து நோக்கின் அதுவும் இவ்வாலய அமைப்பும் ஒத்திருக்கும். இவ்வாலயத்தே உள்ள ஆயிரக்கால்

மண்டபம் = தலையின் புரத்தில் இருக்கும் ஆயிர இதழ் உள்ள கமலம் எனப்படும் மூளையையும், சிவகங்கை = அம் மூளையின் மேல் புரத்தில் உள்ள சந்திர புஷ்கரணி எனப்படும் அம்ருதவாபியையும், உபமானமாக பெற்றிருக்கின்றன. ஜாக்ரதவஸ்தையில் ஆத்மாவின் அறிவு மூளையிலே விளங்குவது இயல்பாதலால் தேவமானத்தில் விடியற்காலமும் ப்ரதோஷ காலமும் ஆகிய மார்கழி, ஆனி மாதங்களில் ஆயிரக்கால் மண்டபத்தில் ஸ்ரீ ஆனந்த நடராஜமூர்த்திக்கு மஹாபிஷேகம் நடந்து வருகின்றது. ஆயிரக்கால் மண்டபத்தின் தென்புறத்தே உமாம்பிகாசமேத ஸ்ரீ மூலநாதேச்வர ஸ்தானம். அதற்கும் தென்புரத்தில் ப்ரசித்த ஸ்வர்ண சபை விளங்குகிறது.

அதில் ப்ரஹ்ம, விஷ்ணு, ருத்ர, மஹேச்வர, ஸதாசிவம் என ஐந்து பீடங்கள் இருக்கின்றன. ப்ரஹ்ம பீடத்தில் உள்ள ஐந்து படிகளும் மந்த்ரோத்தமமான பஞ்சாக்ஷரங்கள்; பதினெட்டு ஸ்தம்பங்களும் ப்ராஹ்மம் முதலிய பதினென் புராணங்கள். விஷ்ணு பீடத்தில் உள்ள கதவு, அவித்யை, எனப்படும். 96 பலகணிகளும் = 96 தத்வ தாத்விகங்கள். 28 தூண்கள், காமிகம் முதலிய 28 ஆகமங்களாகும். ருத்ர பீடத்தில் உள்ள ஐந்து ஸ்தம்பங்கள், ப்ருதிவி முதலிய பஞ்ச பூதங்கள், ஈச்வர பீடத்தில் உள்ள் 6 ஸ்வர்ண ஸ்தம்பங்கள், வேதாந்தம் முதலிய 6 சாஸ்திரங்கள். ஸதாசிவ பீடத்தில் உள்ள 4 தங்கத் தூண்கள் ருக் முதலிய 4 வேதங்கள். இவைகளுள் அடங்கிய இடத்தை சுத்த வித்யை எனவும், ரக்சியம் முதல் ஸ்ரீ நடராஜமூர்த்தி வீற்றிருக்கும் இடம் வரையில் ப்ரணவ பீடம் எனவும் கூறப்படும். சித்சபையின் விமானத்தின் மேலே உள்ள 9 ஸ்வர்ண கும்பங்களும் வாமா முதலிய நவசக்திகள். அவ்விமானத்தில் உள்ள 64 கைமரங்களும் கீதம், வாத்யம் முதலிய 64 கலைகள். 21600 தங்க ஓடுகளும் மனிதனால் ஒவ்வொரு தினமும் விடப்படுகின்ற 21600 ச்வாசங்களையும் அதில் அடிக்கப்பட்டுள்ள 72000 ஆணிகளும் ச்வாச சஞ்சாரத்திற்கு ஆதாரமான 72000 நாடிகளையும் குறிக்கின்றன. பின்னும் இச்சித் சபை ஞான ரூபமானதினாலே ஸ்வர்ணம் என்கிறபதம் ஞான பர்யாயமாக உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டிருப்பதால் ஞானிகள் ஞானரூபமான இச்சித்சபையையே ஸ்வர்ண ஸபை என்றும் சொல்வதுண்டு. ஆனந்ததாண்டவ தரிசனம் ஆன பிறகு பதஞ்சலி, வியாக்ரபாதர் முதலிய ரிஷிகளால் தாண்டவ பூமிக்கு 4 புறத்திலும் தங்கப் பட்டங்களாலே கவசம் போட்டு அலங்காரம் செய்ததாகச் சொல்லப்பட்டிருப்பதாலும் இந்த சித்சபையை ஸ்வர்ண ஸபை என்று மனிதர்கள் சொல்வதாயும் இருக்கிறது. மேலும் இந்த சித்சபையையே ஸ்ரீ மன் நடராஜ மூர்த்திஸ்வரூபம் என்றும் மூர்த்திக்கும், ஸபைக்கும், சிறிது கூட பேதம் இல்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாறு மஹிமை வாய்ந்த சித்ஸபையின் நடுவில் வேத ஸ்தம்பங்கள் சூழ்ந்த வித்யாபவனமான ப்ரணவ பீடத்தில் பகவான் ஸகல ஸ்வரூபமான ஸ்ரீமதானந்த நடராஜ ராஜமூர்த்தி பிரகாசிக்கிறார். சிரஸில் கங்கையையும், சந்திரனையும், நெற்றியில் காலாக்னியையும், கழுத்தில், காலகூடத்தையும், மார்பில் ஸ்வர்ணப் பூநூலையும், கை, கால்களில் சர்பாபரணங்களையும், இடையில் புலித்தோலையும், கால்களில் தங்கச் சிலம்புகளையும், வலது கைகளில் டமருகத்தையும், அபய முத்ரையையும், இடது கைகளில் அக்னியையும், அனுக்ரஹ முத்ரையையும், தரித்துக் கொண்டும், வலது பாதத்தால் முசலகனை அடக்கிக் கொண்டும், பக்தர்களுக்கு முக்தி அளிக்கும் குஞ்சித சரணாரவிந்தத்தை அனுக்ரஹத்தால் காண்பவித்துக் கொண்டும், இடது புரம் உள்ள பார்வதி தேவியுடன் கூடிக்கொண்டும் இருபக்கங்களிலும், பானுகம்பன், பாணாசுரன், பதஞ்சலி, வ்யாக்ரபாதர், த்ரிஸஹஸ்ரமுனீச்வரர்கள் எனப்படும் தீக்ஷிதர்களால் சேவிக்கப்பட்டவராய்க் கொண்டும், டமருகம் தாங்கும் கையால் ச்ரிஷ்டியையும் அபயகரத்தால் ஸ்திதியையும், அக்னி ஹஸ்தத்தால் சம்ஹாரத்தையும், முசலகனை அடக்கும் வலது காலால் திரோதானத்தையும், குஞ்சித சரணாம்புஜத்தால் அனுக்ரஹத்தையும், பிரகாசிக்கச் செய்யும் பஞ்சக்ருத்ய பரமானந்த தாண்டவத்தை எப்பொழுதும், பக்தர்கள் உய்யச், செய்துகொண்டு விளங்கி வருகின்றார்.

இவ்வாறு மஹாமஹிமை பொருந்திய ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு மேற்புரத்தில் சகல நிஷ்கலமாகிய வ்யக்தாவியக்த தத்துவமான முகத்துடன் கூடிய லிங்கமும், அதற்கு வடபுரத்தில் மாயாயவனிகா (கருப்புத்திரை) அதன் பின் புறத்தில் ஞானிகளால் அறியத்தகுந்ததும், குண வரம்புக் கடந்ததும், சிதாகாசஸ்வரூபமாயும், நிஷ்கலமாயும், பரமரஹஸ்யமாயும், உள்ள ஸ்ரீ நடராஜமூர்த்தியின் அரூபஸ்தானம். இச்சிதாகாசவடிவினையே ஊனக் கண்ணாற் கண்டோர், ரகசியம் என்பர். ப்ரணவ பீடத்தில் சூக்ஷ்மமான ரத்னமயமான, ரத்னஸபாபதி மூர்த்தியும், சூக்ஷ்மதரமான ஸ்படிகலிங்கமயமான சந்திர மௌலீச்வர மூர்த்தியும், உள்ளன. ரகசியத்தை நிஷ்கலம் என்றும், முகலிங்கத்தை சகல நிஷ்கலம் என்றும். ஸ்ரீ மன் ஆனந்த நடராஜமூர்த்தியை சகல வடிவம் என்றும், சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. சித்ஸபையின் கீழ் புறத்தில் சடேச்வரஸ்தானத்தில் ப்ரஹ்மாவும், தென்புறத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ சகித ஸ்ரீ மஹா விஷ்ணுவும், மேற்புரத்தில் மஹா கணபதியும், லிங்கோத்பவரும், சுப்ரஹ்மண்யரும், வடபுறத்தில் போக நாயகி எனப்படும் ஸ்ரீ சிவானந்த நாயகியும், அதன் பக்கத்தில் பிக்ஷாடனரும், கீழ் புரத்தில் பைரவமூர்த்தி எனும் சம்ஹாரருத்ரரும், சந்திர, சூர்யர்களும் இருக்கின்றனர். இந்த

தேவாலயத்தில் பஞ்ச கோசப்ரதிநிதிகளான ஐந்து சபைகள் இருக்கின்றன. இராஜ சபை = அன்னமய கோசம், இதில் ஆனி, மார்கழி மாதங்களில் உத்தர திருவாதிரை நக்ஷத்திரங்களில் முறையே ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு மஹாபிஷேகம் நடைபெறுகிறது. இதுதான் ஆயிரக்கால் மண்டபம் என்பது. தேவசபை = ப்ராணமய கோசம். இதில் உத்ஸவமூர்த்திகள் உள. இதையே பேரம்பலம் என அழைப்பதும் உண்டு. நிருத்தஸபை = மனோமய கோசம். இதில் காளியுடன் வலதுகால் தூக்கி நர்த்தனம் செய்த ஊர்த்வ தாண்டவ மூர்த்தியும், நரஸிம்ஹரின் கர்வத்தை அடக்கிய சரபேச்வரரும், உளர். கனகசபை = விக்ஞானமய கோசம். இதில் ப்ரதி தினமும் ஸ்ரீ சந்திர மௌளீச்வரருக்கு ஆறுகால அபிஷேகமும், ஸ்ரீ ரத்தின சபாபதிக்கு மத்யான்னத்தில் இரண்டாவது காலத்தில் அபிஷேகமும், நடைபெறுகின்றது. இங்கையே ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கும், சிவகாம சுந்தரி அம்பாளுக்கும், சித்திரை ஆவணி, புரட்டாசி, மாசி, மாதங்களில் மஹாபிஷேகம் நடைபெறும். சித்ஸபை = ஆனந்தமயகோசம். இதில் தான் சிவகாம சுந்தரி அம்பாளுடன் ஸ்ரீ நடராஜமூர்த்தி விளங்குகிறார். மனிதருடைய சரீரத்தின் நடுவில் ஹ்ருதயம் இராமல் இடது புரத்தே விலகி இருத்தலால் இங்கும் ஆலயத்தின் சரி நடுவிற்கு சிறிது இடது புறத்தே கர்பக்ருஹம் அமைந்திருக்கிறது. ஹ்ருதயத்திலே இரத்தம் பிரவேசிக்கும் வழி நேரில் இன்றி பக்கங்களில் இருப்பதால் இங்கும் வழிகள் க்ர்ப்பக்ருஹத்தின் பக்கங்களில் அமைந்திருக்கின்றன. மேலும் இக்கோயிலில் ஐந்து ஆவரண மதில்களும் ஒரேவித அளவில் அமைந்துள. சரீரத்தை விட ப்ராணன் 12" அதிகம். "சரீராத3தி4க: ப்ராண: த்3வாத3சாங்கு3ல முன்னத:" என்கிற யோகசாஸ்திரப்ரமாணப்படி இரண்டாவது மதிலில் கோபுரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் மஹாமஹிமை வாய்ந்த தேவாலயத்தில் வீற்றிருக்கும் ஆனந்தநடராஜ ராஜமூர்த்தியை சாஸ்திர விதிப்படி மெய்யன்போடு தரிசனம் செய்யின் ஞானம் உண்டாகும், சம்சாரபந்தம் நீங்கும், ஆனந்தம் விளையும், ஆண்ம நிலை விளங்கும், அத்வைத முக்தி ஸித்திக்கும். நடராஜரின் வைபவத்தை நன்கு அறிய ஆவல் உள்ளவர்கள் சிதம்பரம் சாஸ்திராசார்ய ஆனந்த தாண்டவ தீக்ஷிதர், சாஸ்திராசார்ய ராஜா சோம சேகர - தீக்ஷிதர் இவர்களால் பக்தியுடன் எழுதப்பட்டுள்ள வடமொழியில் உள்ள நடேச ஸஹஸ்ரநாம பாஷ்யத்தை பார்க்கின் தெள்ளென விளங்கும்.

ஸ்ரீ மனுசே சுலோகங்கள்

ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸ ஸ்வாமிகள் அருளிச்செய்தவை

(மொழி பெயர்ப்பு)

முன் இதழ் தொடர்ச்சி

எவன் யௌவனப் பருவத்திலேயே வனவாஸம் செய்வானோ, எவன் பலவித கற்பனைகள் என்ற வலையில் சிக்க மாட்டானோ, நற்கார்யங்களிலுள்ள உறுதி எவனுடைய மனதை விட்டு ஒரு பொழுதும் விலகாதோ அப்படிபட்ட ஸர்வோத்தம ஸ்ரீ ராமதாஸனே தன்யன். (54)

எவனுடைய மனதிலிருந்து கெட்ட ஆசை அடியோடு ஒழிந்து ஹரி பஜனையில் உள்ள ஆசை அதிகமாக விருத்தி அடைகின்றதோ, எவனுடைய பக்திவிசேஷத்திற்கு உரியதை அளிக்க முடியாததால் தேவதேவன்கூட கடனாளியாகின்றானோ அப்படிப்பட்ட ஸர்வோத்தம ஸ்ரீ ராமதாஸனே தன்யன். (55)

எவன் ஏழைகளிடம் தயை உள்ளவனாகவும் இளகிய மனமுள்ளவனாகவும் எல்லாப் பிராணிகளிடமும் சிநேகமுள்ளவனாகவும் கிருபை உள்ளவனாகவும் அண்டியவர்களை ரக்ஷிப்பவனாகவும் கோப தாபமற்றவனாகவும் இருக்கின்றானோ அப்படிப்பட்ட ஸர்வோத்தம ஸ்ரீ ராமதாஸனே தன்யன் (56)

ஸ்ரீ ஹரிநாம கீர்த்தனம், உபாஸனம், நித்ய நியமம் முதலியவற்றால் அனைவரும் தன்யர்களாக ஆகவேண்டும். எதிலும் பற்றற்று இருத்தலே சிறந்தது. அதனால் சித்த விருத்தி சாந்தமடையும். (57)

ஏ மனமே! ஜன்மாந்தர கர்மவசத்தால் ஏற்படும் விஷய வாஸனைகளை விட்டு விட்டு நிஷ்காமமாக எப்பொழுதும் ஸ்ரீ ராமசந்திரனை தியானம் செய். சொற்ப விகல்பங்கூட உனக்கு வேண்டாம். (58)

கோடிக்கணக்கான கற்பனைகளை கற்பித்துக்கொண்டிருக்கும் மனிதன் ஒருபொழுதும் ஸ்ரீ ராமசந்திர பிரபுவை அடையவே மாட்டான். எவனுடைய மனதில் காமமே குடிகொண்டிருக்கிறதோ, ஸ்ரீ ராமன் வசிக்கவில்லையோ, அவனுக்கு ஸத்ஸங்கத்தில் விருப்பம் எப்படி உண்டாகும்? (59)

ஏ மனமே! ஸ்ரீ ராமசந்திரனே வேண்டியவற்றையெல்லாம் அளிக்கும், நிதி, காமதேனு, கல்பகவிருக்ஷம், சிந்தாமணி. எல்லா வஸ்துக்களிலுமே ஸாரமானவர் அவரே. இதுமட்டுமா! அவருடைய பிரேரணையால்தான் உலகில் ஸமஸ்தவியவஹாரங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (60)

கல்பகவிருக்ஷத்தை அண்டியும், எவன் துக்கத்தையே எண்ணுகின்றானோ, அவனுடைய மனதில் எப்பொழுதும் துக்கம்தான் குடிகொண்டிருக்கும். எவன் ஸஜ்ஜனஸங்கத்தில்கூட விவாதம் செய்வதிலேயே ஈடுபடுகின்றானோ, அவன் அளவுகடந்த தாபங்களைத்தான் பெறுவான். (61)

ஸ்ரீ ராமத்யானத்திலிருந்து விடுபட்டவனுக்கு சோகமும் தாபமும் தான் உண்டாகும். பிறரு அவனிடமுள்ள ஆனந்தத்தை இழந்து விடுவான். அதனால் அவ்வளவு நேரம் அவனிடமிருந்துவந்த மன உறுதியும் அகன்றுவிடும். (62)

ஸ்ரீ ராமத்தியானத்தை விட்டு விட்டு வேறு வாதத்தைச் செய்கின்றவன், கறக்கும் பசுவை வைத்துக்கொண்டு பிறரிடம் சென்று மோரை யாசிப்பவன் போல் ஆகின்றான். எல்லாவற்றையும் அளிக்கும் கையிலுள்ள சிந்தாமணியை கொடுத்துவிட்டு கிளிஞ்சலை யாகிக்கிறவனாகவும் கருதப்படுவான். (63)

மந்த புத்தியுள்ளவனுக்கு உறுதியான நிச்சயம் இராது. விஷயங்களில் ஆசையுள்ளவனுக்கு ஸ்ரீ ராமத்யானம் இராது. அதிக லோபம் உள்ளவனுக்கு துக்கந்தான் உண்டாகும். அதிக போகத்தில் ஈடுபட்டவன் மிகவும் தீனனாக ஆகிவிடுவான். (64)

ஹரிபக்தியற்ற வாழ்வு பிரயோஜனமற்றது. அது வேண்டவே வேண்டாம். அதிக மௌர்க்கயத்தால் துக்கத்துக்கு மேல் துக்கமே நேரிடும். ஆதலால் ஏ மனமே! ஸ்ரீ ராமசந்திரனிடம் ப்ரீதியுடன் இரு. வீட்டிலும், பொன்னிலும், மற்ற விஷயங்களிலும் உனக்கு ஒரு பொழுதும் ஆசை வேண்டவே வேண்டாம். (65)

ஏ மனமே! பிரபஞ்சததில் ஸாரம் எதுவுமில்லை. அதை நீயே சோதித்துப்பார். விஷத்தைத் தின்றால் சுகம் என்பது ஒரு பொழுதும் உண்டாகாது. ஆதலால் ஸ்ரீ ராமசந்திரனையே எப்பொழுதும் தியானம் செய்துகொண்டிரு. (66)

நீலமேக சியாமள வர்ணனையும், மிகவும் அழகு வாய்ந்தவனையும், காம்பீர்யம், தைர்யம், பிரதாபம் எல்லாம் நிறம்பியவனையும், தன் பக்தர்களுக்கு சங்கடங்கள் நேரிடுங்காலத்தில் அவர்கள் சமீபத்திலேயே இருந்து அவர்களை இரக்ஷிக்கின்றவனுமான ஸ்ரீ ராமனை பிரதிதினம் காலையில் தியானம் செய். (67)

அழகிய கோதண்டத்தை கையில் தரித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ ராமன் பலத்தில் நிகரற்றவன். மிகவும் பலிஷ்டனான யமன்கூட அவனைக்கண்டு நடுங்குகிறான். மற்ற அற்ப மனிதர்களைப்பற்றி கேட்பானேன். அப்படிப்பட்ட மஹாபலசாலியான ஸ்ரீ ராமனை பிரதிதினம் காலையில் தியானம் செய். (68)

எவன் சுகத்தையும் ஆனந்தத்தையும் அளித்து பயத்தையும் கெடுக்கின்றானோ அவனையே இவ்வுலகில் மிக ப்ரீதியுடன் ஸேவிக்க வேண்டும். இதை நன்கு ஆலோசித்துப் பார்த்து அஸுசார புத்தியை தள்ளிவிட்டு பிரதிதினம் காலையில் ஸ்ரீ ராமனை த்யானம் செய். (69)

ஏ மனமே! உன் காமங்களை எல்லாம் பூர்த்தி செய்யும் ஸ்ரீ ராம நாமத்தை எப்பொழுதும் கீர்த்தனம் செய். இதை நியமமாக வைத்துக் கொள். ஒரு பொழுதும் துன்பங்களால் நீ பாதிக்கப்பட மாட்டாய். மதத்தையும் சோம்பலையும் நீ விரைவில் ஒழித்துவிட்டு பிரதிதினம் காலையில் ஸ்ரீ ராமனை தியானம் செய். (70)

எவனுடைய நாமஸங்கீர்த்தனத்தால் மிகக் கொடிய பாவங்களெல்லாம் அழிகின்றனவோ, மனிதன் நற்கதியை அடைகின்றானோ, புண்ணியம் விருத்தி அடைகின்றதோ அப்படிப்பட்ட ஸ்ரீ ராமனை பிரதிதினம் காலையில் தியானம் செய். (71)

ஸ்ரீ ராமநாம உச்சாரணத்தால் பொருளுக்கு கொஞ்சம்கூட நஷ்டம் இல்லை. உடலுக்கும் எவ்வித கஷ்டமும் இல்லை. ஆதலால் ஸம்ஸாரம் என்ற கொடிய விரோதியை ஜயிப்பதின் பொருட்டு ஸ்ரீ ராமனை பிரதிதினம் காலையில் தியானம் செய். (72)

தேகத்தை கஷ்டப்படுத்தி பல காரியங்களை செய்வதால் மிகுந்த துக்கம் உண்டாகிறது. ஸம்ஸாரசிந்தை ஓர் ப்ரமமானதால் அதனால் உனக்கு ஆத்மானுபாவம் உண்டாகாது. ஸ்ரீ பரமசிவன்கூட தேவ தேவனை எந்த ராமனை த்யானம் செய்துகொண்டிருக்கிறாரோ அப்படிப்பட்டவரை தினந்தோறும் காலையில் நீ த்யானம் செய். (73)

தவம் முதலிய சாதனங்களில் தேகத்திற்கு கஷ்டம் உண்டாகும். தானம் விரதஉத்யாபனம் முதலியவை தனத்தால்தான் சாதிக்கப்பட வேண்டும். (ராம த்யானத்தில் தேக கஷ்டமும் இல்லை பொருள் நஷ்டமும் இல்லை. ஆதலால்) தீனர்களிடம் கிருபையுடன் இருக்கின்ற ஸ்ரீ ராமனை ஒவ்வொருநாளும் காலையில் த்யானம் செய். (74)

ஏ மனமே! சாதனங்களுள் இதுதான் மிகச் சிறந்தது. உனக்கு புலப்படாத போனால் விசாரம் செய்து இதைத் தீர்மானம் செய்துகொள். வீணான ஸம்சயத்தை அறவே ஒழித்துவிடு. ஒவ்வொரு நாளும் தவறாமல் காலையில் ஸ்ரீ ராமனை த்யானம் செய். (75)

ஸ்ரீ ராமனிடம் காமனை உள்ளவன் நிஷ்காமனாக ஆகிவிடுவான். ஸ்ரீ ராமஸ்வரூபத்தில் ஈடுபட்டவன் எல்லாப் பிராணிகளிடமும் ஸ்ரீ ராம ஸ்வரூபத்தையே அனுபவிக்கின்றான். மேலும் ஸ்ரீ ராமன் இஹபர க்ஷேமங்களை அளிக்கக்கூடியவன் என்ற திடவிச்வாஸத்துடன் ஸ்ரீ ராமநாம ஸங்கீர்த்தனத்தைச்செய்துவருகின்றவன், த்வந்த்வ ரஹிதனாக ஆகிவிடுகிறான். பசி, தாஹம் முதலிய பிணிகள் அற்றவனாக ஆகிவிடுகிறான். விரைவில் முக்தியைப் பெற்று விடுவான் என்பது கருத்து. (76)

எவனுக்கு ஸ்ரீ ராமனிடம் நம்பிக்கையில்லையோ, அந்த மூடன் எப்பொழுதும் துக்கங்களை அனுபவித்துக்கொண்டேதான் இருக்கவேண்டும். அந்தோ! மோக்ஷத்தையளிக்கும் ஸ்ரீ ராமசந்திரன் சமீபத்திலேயே இருக்கையில் வீணாக தன் சரீரத்தையும் பிரபஞ்சத்தையும் பற்றி ஏன் கவலைப்படவேண்டும். (77)

(தொடரும்)

வறுமை, வியாதி, கஷ்டங்கள், சிறைவாசம், மற்றும் உள்ள துன்பங்கள், எல்லாம் அவரவர்கள் செய்த பாபங்கள் என்ற மரத்தில் பழுக்கும் பழங்களாகும்.

(சாணக்யநீதி)

புயல் நிவாரண உதவி

(ஸாரங்கன்)

(டிஸம்பர் இதழ் தொடர்ச்சி)

“என்ன? மணி 4½ ஆகியும் காபியைக் காணுமே! போடுவதாக உத்தேசமில்லையோ” என இன்றுதான் ஒரு மாதம் கழித்து சிவகாமியிடம் மெள்ள பேச ஆரம்பித்தார் கர்ணய்யர்.

சிவகாமி :—போட உத்தேசமில்லாமல் என்ன! நான் உள்ளத்தைச் சொன்னதற்கு உங்களுக்கு கோபம் பிரமாதமாக வந்துவிட்டது. ஒரு மாதமாக என் முகத்தைப் பார்த்து பேசறதில்லேன்னுவைச்சுட்டேள். அப்படி-நான் என்ன குத்தம் பண்ணிவிட்டேன் என்று இன்னிக்கி தெரிஞ்சுக்கவேணும்னே இவ்வளவு நாழி காபி போடாமல் இருந்தேன்.

கர்ணய்யர் :—அதெல்லாம் இருக்கட்டும், சட்னு காபியைக் கொண்டா! தலையைவலி ஒடைக்கிறது. பிறகு பேசிக்கொள்ளுவோம்.

சிவகாமி :—இந்தாருங்கோ,மனதில் ஒன்னும் தாங்கல் இல்லாமல் திருப்தியா சாப்பிடுங்கோ.. மணி 4 ஆனதும் உங்களுக்கு காபி இல்லாதபோனால் தலைவலி பிளக்கிறது. புயலில் அடிப்பட்ட ஜனங்களுக்கு கஞ்சிகூட இல்லையாம், கஷ்டப்படறதாம். ரூ. 100-க்காவது ஒரு செக்கை இன்னிக்கி அனுப்பிச்சுடுங்கோ. மரத்தைப்போல் இருங்கோ. ரொம்ப புண்ணியமுண்டு, என்று ஏளனமாக சிரித்துக்கொண்டே பேசினாள்.

அறுபதாவது வயதில் இளையாளாக மணந்து கொள்ளப்பட்ட சிவகாமியுடன் எப்படியாவது பேசினால் போதுமென்று ஆகிவிட்டது கர்ணய்யருக்கு. வீட்டிலோ வேறு குழந்தைகள் இல்லை. அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் “இவர் கருமி யென்றும், சிடுமூஞ்சி யென்றும்” இவருடன் பேச வருவதே இல்லை. தப்பித் தவறி வந்து விட்டால் ஒரு டம்ளர் தீர்த்தமோ அல்லது ஒரு தாம்பூலமோ செலவு ஆகிவிடுமோ என்ற எண்ணத்துடன் அவசியமான நேரந் தவிர மற்ற வேளைகளில் வாயிற் கதவை கர்ணய்யரும் திறப்பதே இல்லை. சிவகாமியோடும் பேசாமல் இருந்தால் பொழுது தான் எப்படிப் போகும்? மரமா? மட்டையா?. ஆதலால், அவள் பேசும் வார்த்தைகளில் பிரியமில்லாதபோனாலும் பேசாமலிருக்க முடியவில்லை, ஏதோ பேசிவிட்டுப்போகட்டும் என்று விட்டுவிட்டார்.

சிவகாமி :—என்ள! ஒங்களத்தானே. மரம்போல் இருக்க பழகிங்கோ. வயது குட்டிச் சுவருக்குமேல் ஆகிவிட்டதே! இன்னும் மரம்போல் இருக்கத் தெரியல்லையே!

கர்ணய்யர் :—ரொம்ப ரொம்ப பரிகாசம் பண்ணுதே. அடிக்கடி “மரம், மரம்” என்கிருயே! உனக்கு என்ன தெரியும் மரத்தைப்பற்றி. நான் ஏதோ ஒருதடவை உன்னை மரத்தைப்போல் நிற்கிருயே என்று சொன்னதற்காக திருப்பித் திருப்பி மரம், மரம் என்று சொல்லுகிருய் போலிருக்கிறது.

சிவகாமி :—இல்லே, இல்லே. மரத்தைப்பற்றி எத்தனையோ விஷயங்களை நான் தெரிந்துகொண்டிருக்கேன். போனமாதம் அதைப்பத்தி ரொம்ப விரிவாகவும் சொல்லியிருக்கேன். ஆனால் அதெல்லாம் உங்களுக்கு ஞாபகமிராது, என்னால், உங்களுக்குப் பிரியமில்லாத விஷயத்தையல்லாவா மரம் குறிப்பிடுகிறது. அது எப்படியிருந்தாலும் மறுபடியும் ஒரு தடவை சுலோக பூர்வமாகவே சொல்லுகிறேன். கேளுங்கள். ஸ்ரீ கிருஷ்ணர் கோபாலர்களைப் பார்த்து அடியிற்கண்டவாறு கூறுகிறார்:

பச்யதைநாந் மஹாப4ாக3ாந் பரார்த்தை2காந்தஜீவிநாந் 1
வாதவர்ஷாதபஹிமாந் ஸஹந்தோ வாரயந்தி ந: 11

அஹோ ஏஷாம் வரம் ஜந்ம ஸர்வப்ராண்யுபஜீவனம் 1
ஸுஜநஸ்யேவ யேஷாம் வை விமுக2ா: யாந்தி நார்த்தி2ந: 11

பத்ரபுஷ்பப2லச்ச2யா மூலவல்கலதா3ருபி4:1
க3ந்த4நிர்யாஸப4 ஸ்மாஸ்தி2தோக்மை: காமாந் விதந்வதே 11

ஏதாவஜ்ஜந்மஸாப2ல்யம் தே3ஹிநாமிஹ தே3ஹிஷு1
ப்ராணை ரர்த்தை2ர்தி4யா வாசா ச்ரேயே ஏவா சரேந் ஸதா3 11

199867

இதன் பொருளை அன்று பாகவதர் பல உபகதைகளுடன் எடுத்துரைத்தார். அதைக் கேட்டுவிட்டு திரும்பி வீட்டுக்கு வரும்போது நம்பாத்து சாஸ்திரிகளும் அவர் நண்பர்களும் உங்களைப் பத்தி பேசிக்கொண்டிருந்த வார்த்தை ஒவ்வொன்றும் என் மனதை இன்னும் பிளந்துகொண்டே இருக்கிறது. ஆதலால் உங்களையும் மரம்போல் இருங்களேன் என்று திருப்பித் திருப்பி சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

கர்ணய்யர் :—சாஸ்திரிகளுக்கு வேறு வேலை என்ன? “கொடுத்தால் நல்லவன். இல்லையேல் கெட்டவன்” என்ற எண்ணங்கொண்டவர். அவர் சொல்லும் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு நீயும் உளர ஆரம்பித்து விட்டையாக்கும்.

சிவகாமி :—அப்படி இல்லேன்னு, கோச்சுக்காதேங்கோ. அவர் சொல்றதிலே தப்பு என்ன? ஏழைகளுக்கு நாம் ஏதாவது கொடுத்தாத்தானே உண்டு. நீங்கள் வக்கில் தொழில் பண்ணி வாழ்ந்தபொழுது கக்ஷிக்காரர்களிடம் கண்டித்துப்பேசி பணத்தைக் கறந்தீர்களே! அப்படிப்போல் ஏழைகளால் உங்களிடமிருந்து கறக்க முடியுமா! ஏதோ கெஞ்சிக் கேட்கிறார்கள். கொடுக்கத்தானே வேண்டும். எத்தனையோ கக்ஷிக்காரர்கள் மனம் நொந்து கொட்டிக்கொடுத்த பணத்திற்கு நல்ல வழியில் கொஞ்சம் செலவு இருந்தால்தானா போர வழிக்கு புண்ணியமுண்டு.

கர்ணய்யர் :—யாரைப் பார்த்து என்ன வார்த்தை சொல்லுகிறாய்? கக்ஷிக்காரர்கள் வயத்துவலி, பணத்தைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். அது என் மேல் குற்றமா என்ன?

சிவகாமி :—உங்கள் பேச்சுத் திறமையையோ, தொழிலில் ஒழுக்கத்தையோ, கைராசியையோ, கண்டு கக்ஷிக்காரர்கள் பணத்தை கட்டிக்கொடுத்தார்களாக்கும்? போதும், போதும், உங்கள் பெருமையை என்னிடத்திலேயெ பேசிக்கொள்ள வேண்டாம். அது எப்படியாவது போகட்டும். அதைப்பற்றி இப்போ என்ன? பொசல் அடிச்ச அன்னிக்கி சாலை தோப்பில் உள்ள புளிய மரங்கள் விழுந்துவிட்டனவாமே. வாஸ்தவம் தானே!

கர்ணய்யர் :—ஆமாம். அந்த வயத்தெரிச்சலை ஏன் கிளப்புகிறாய்?

சிவகாமி :—அவ்வளவு மரங்களுக்குள் நம்ப சாஸ்திரிகள் ஒரு கிளை விறகுக்காக கொடுங்கள் என்று கேட்டாராமே. நீங்கள் என்ன சொன்னேள்?

கர்ணய்யர் :—எல்லாவற்றையும் மொத்தமாக நல்ல விலைக்கு விற்கப்போகிறேன். கொடுக்க முடியாது என்றேன்.

சிவகாமி :—அதற்கு அவர் என்ன சொன்னார்?

கர்ணய்யர் :—சாலையில் போகின்றவர்கள் எல்லாம் இஷ்டப்படி வெட்டிக்கொண்டு போகிறார்கள். நானும் ஒரு கிளை எடுத்துக் கொள்ளலாமா! என்று கேட்டார். "கூடாது" எனக் கூறிவிட்டு ரம்பக்காரனைக் கூப்பிட்டு மரங்களை எல்லாம் அறுக்கச் சொன்னேன். அவன் சாதாரணமாக உள்ளக் கூலியைவிட ஐந்துமடங்கு அதிகமாகக் கேட்டான். மரங்களை ஏலம் போட்டுவிடலாம் என்று எண்ணி மறுநாள் காலையில் தோப்புக்குச் சென்று பார்க்கையில் மரங்கள் நின்ற இடங்கள் தான் காணப்பட்டன. மரங்களைக் காணோம். ஊர் அவ்வளவு மோசமாக இருக்கிறது. நாம் என்ன செய்யலாம்.

சிவகாமி :—அப்படித் திருடர்கள் கொண்டுபோனாலும் போகலாம். வேண்டிக் கொள்ளும் ஏழைகளுக்குக் கொடுக்கக்கூடாது. இது தானே உங்கள் எண்ணம்?

கர்ணய்யர் :—அது எப்படியிருந்தால் என்ன? அதைப் பற்றி சாஸ்திரிகளுக்கு என்ன பேச்சு?

சிவகாமி :—சாஸ்திரிகள் மட்டும் பேசல்லே. ஊர் முழுவதும் பேசறது. சிரிக்கிறது. உங்களைப் போன்றவர்கள் சிலர் நம் நாட்டை அலங்கரிப்பதால் தான் கம்யூனிஸ்டுகள் எலெக்ஷனில் வெற்றி பெற்றார்களாம். இதுபோகட்டும், சென்ற. அமாவாஸ்யையன்று சாஸ்திரிகளுக்கும் உங்களுக்கும் என்ன தகராறு?

கர்ணய்யர் :—தகராறு என்ன? அவருக்கு வரவர ஆசை அதிகமாகிவிட்டது. நம்பதாத்தா நாள் முதல் அமாவாஸ்யை என்றால் அரைக்கால் ரூபாய் திட்டம். முன்னோர்கள் வழக்கத்தை எப்படி மாத்தறது. இவர் என்னென்ன; அவாத்தில் ஒரு ரூபாய். இவாத்தில் எட்டணா என்றெல்லாம் கூறி, அணா நாலாவது கட்டாயம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார். "வழக்கத்தை மாத்தமுடியாதய்யா" என்று கடிந்தேன். உடனே இந்த கேவலம் தர்ப்பணம் செய்துவைக்கும் சாஸ்திரிகள் என்ன பேச்சு பேசினார் தெரியுமா? உங்கள் தாத்தா நாளில் நெல் கலம் 1 ரூபாய். ரூ 100-க்கு மாதம் ஒண்ணுக்கு வட்டி அணா 4 தான். இப்பொழுதும் அதே போல் கொடுத்து எனக்கு மட்டும் உதவிபுரியுங்களேன் என்று கேட்டார். என்ன துணிச்சல் பார்த்தாயா?

சிவகாமி :—துணிச்சல் என்ன? அவர் சொல்வது நியாயம் தானே? கொடுக்கும்போது வழக்கம் என்கிறேள். வாங்கும் போது காலத்தை அனுசரித்துப் போகவேண்டும் என்கிறேள். இது என்ன நியாயம்? சொத்தை நாமும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுக்காதபோனால் திருடர்கள் தான் கொண்டு போவார்களாம். உங்கள் புளியமர விஷயத்தில் அதை பிரத்யக்ஷமாகப் பார்த்துவிட்டோம். மேலும் சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக திருட்டு ஜாஸ்தியாகிவிட்டது என்று நீங்களே சொல்லுகிறீர்கள். அப்படியிருக்க நீங்களே முழு மனதுடன் உசிதமான காலங்களில் சிறந்த பாத்திரங்களை அறிந்து தானம் செய்யலாகாதா? உங்களுக்குப்போய் கர்ணனுடைய பெயரை வைத்தார்களே? அவர்களுடைய மேதையே மேதை என்றெல்லாம் ஊரில் பரிஹஸிக்கிறார்கள்.

கர்ணய்யர் .—சரி சரி இவ்வளவு வயதிற்குப் பின் உன்னிடத்திலும் ஊராரிடத்திலும் தான் உபதேசம் பெற்றுக் கொள்ள வேணுமோ? எனக்கூறிக் கொண்டே வெளியில் சென்றுவிட்டார்.

பாராட்டுக் கூட்டத்தில்

தமிழ் நாடகப் பேராசிரியர் ஸ்ரீ சம்பந்தமுதலியார் அவர்களின் 80-ம் ஆண்டு நிறைவு விழா பிப்ரவரி மீ 1 உ திருவல்லிக்கேணி கல மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்ற பலர் ஸ்ரீ முதலியார் அவர்களை மிகவும் பாராட்டிப் பேசினர். அ கூட்டத்தில் நடந்த விநோத சம்பவங்கள் பல தினசரிப் பத்திரிகைகளி வெளியாயிருக்கின்றன. அந்த ருசிகரமான சம்பவங்கள், "பொத வாக மனிதர்களின் உள்ளத்தில் ஊறும் உணர்ச்சிகளை அடக்குவதென் பது எளிதல்ல, காலம், தேசம், முதலியவற்றையெல்லாம் இலக்ஷியம் செய்யாமல் அவரவர்களின் உணர்ச்சிகள் முன் வந்து நிற்கும்" என் பதை வெளியிட்டன.

ஆரம்பத்தில் ஸ்ரீ ராஜாஜி அவர்கள் ஸ்ரீ முதலியார் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தினார். அப்பொழுது அவர் கூறியதாவது:— "ஸ்ரீ சம்பந்தமுதலியாருக்கு 80 வயதாகிவிட்டது. இது வரை அவ மக்கள் மறந்திருந்தார்கள். 81-வது வயது ஆரம்பத்திலாவது அவருக்கு கவுரவம் செய்யவேண்டுமென்று நமக்கெல்லாம் தோன்றிற்று. இ வரை ஏன் பேசாமலிருந்தோம்.? அவர்போய் விடுகிறாரா என்று பார் கலாம் என்றிருந்தோம். ஆனால் அவர் போகமாட்டேன் என்கிறா மருந்து சாப்பிடாமல் இத்தனை வயது அவர் இருந்திருக்கிறார். அதனா அவரை கவுரவிக்கவேண்டியது அவசியம்.

இன்னொரு பழைய நண்பர் ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாசய்யங்கார் இதே கீழே வீற்றிருக்கிறார். அவர் இப்பொழுது பக்தி மார்க்கத்தில் இறங் விட்டார். என்னைப்போல் அவரும் கெட்டுப் போய் விட்டார். பக் மார்க்கத்தில் முதன் முதலாக இறங்கியது அப்பெரியார். அவரை பார்த்து நானும் இப்பொழுது நடக்கிறேன்."

இந்த வார்த்தைகளில் அவர் உள்ளத்தில் உள்ள பல உணர்ச் கள் நன்கு பிரதி பலிக்கின்றன. பலதரப்பட்ட எண்ணங்கள் கொண் வர்களின் கூட்டத்தைக் கண்டதும் பாராட்டுக் கூட்டத்திற்கு அவசி மாக இருப்பினும் இல்லாத போனாலும் மேற்கண்ட உணர்ச்சிகளை வெளியிடும் வார்த்தைகள் தாமாகவே வெளிவந்திருப்பது குறிப்பிட தக்கது.

அதே கூட்டத்தில் நவாப் ராஜ மாணிக்கம் ஒரு வரவேற்புரையை வாசிக்க ஆரம்பிக்கையில் ஸ்ரீ முருகக்கடவுள், ஐயப்பன் இவர்களி பெயர்களை உரக்க உச்சரித்து வணங்கினாராம். அதைக் கண் கூட்டத்தின் ஒரு பகுதியினர் கைகொட்டி கலாட்டா செய் கையாண்டி செய்ததின் மூலம் அவர்கள் உள்ளத்தின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தினாராம். ஆனால் அவற்றை எல்லாம் நவாப் ரா மாணிக்கம் லக்ஷியம் செய்தாரா? இல்லை. அவர் இஷ்டம் போ வரவேற்புரையை வாசித்து முடித்தார்.

"18-வருஷங்கள் ஸம்ஸ்கிருதம் படித்தேன்"

பிறகு சம்பந்தமுதலியார் பதிலளிக்கையில் கூறியதாவது: "நான் நாடகக் கலைஞனாகவும், நடிகனாகவும் இப்போது திகழ்கிறே இதற்கு எனக்கு வழிகாட்டியாக இருந்து என்னை ஊக்குவித்த ஸ்ரீ வி. வி. ஸ்ரீனிவாஸ ஐயங்கார். அவர் எனது குரு. மேலு ஸம்ஸ்கிருதம் படிக்கும்படி தூண்டியது அவர்தான். நீங்கள் கோபித்

கொண்டாலும் சரி, நான் சொல்ல வேண்டியதைச் சொல்லித்தான் தீருவேன். ஸம்ஸ்கிருத நூல்களை பதினெட்டு வருஷங்களுக்கு ஒரு உபாத்தியாயரைக் கொண்டு படித்தேன். அப்படிப் படித்ததால் தான் தமிழில் என்னால் எழுதமுடிந்தது."

இந்த வார்த்தைகளை அங்கு கூடியிருந்த பல சுத்தத்தமிழ் அபிமானி கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதை அவர் அறிந் திருந்தும் அவர் உள்ளத்தில் தோன்றியவற்றை அவரால் மறைக்க முடியவில்லை.

பிரிவினை மனோபாவம் தவறு

ஸ்ரீ. ராஜா முத்தையா செட்டியார் அவர்கள் ஸ்ரீ. முதலியார் அவர்களை போற்றுவதற்காக ஆரம்பித்து சில வார்த்தைகளைக் கூறிய வுடன் அகில இந்திய ரேடியோமேல் ஒரு பாய்ச்சல் பாய்ந்தார். "அது தமிழருக்குத் தீங்கு செய்கிறதென்றும், தமிழ் நிகழ்ச்சிகளின் விகிதம் மிகவும் குறைக்கப் பட்டுவிட்டதென்றும் அதைத்திருத்தி யமைக்க வேண்டிய அவசியமென்றும், ராஜாஜி போன்றவர்கள் இங்கு இருப்பதால் அரசாங்கத்தின் கவனத்தை இழுக்கவே தாம் அதுபற்றிக் குறிப்பிடுவதாயும்" கூறினார். இப்படி அவர் பேசிக்கொண்டிருக்கும் போது ராஜாஜி "போதும். போதும்" என்று கூறினார். ஸ்ரீ முத்தையா செட்டியார் விடாமல், "போதும் போதும் என்று ராஜாஜி கூறுகிறார். ஆனால் நான் விடப்போவதில்லை. சொல்லியே தீர்ப்பேன்" என்றார்.

உடனே ராஜாஜி எழுந்து குறுக்கிட்டுப் பேசினார். அவர் கூறிய தாவது:—"நல்ல கூட்டத்தை சில்லறை விஷயங்களைச் சம்பந்தப் படுத்தி விரசமாக்கக்கூடாது. சம்பந்தப்படாத விஷயங்களைப்பேசி ருசியாக உள்ள ஒரு விஷயத்தை அருசியாக்க வேண்டாம். நாடகப் பெரியாரைப் பாராட்டுவதற்கு இக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. அரசியல் விஷயம், விவாத விஷயங்களுக்கெல்லாம் இப்போது அவசிய மில்லை. ஒரு கடவுளை வழிபடும்போது அல்லது பூஜை செய்யும் போது மற்ற கடவுளை வழிபடக் கூடாது. பூஜை செய்யக்கூடாது. ஒரே கடவுளைத்தான் ஒரு சமயத்தில் ஏகாக்ரசித்தனாய் பூஜை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் பயனடையலாம்.

பிரிவினை மனோபாவம் தவறானது. ராஜ்யத்தைப் பிரித்துப் பிரித்து குட்டிச்சுவராக்குவதில் பயனில்லை. ராஜாவுக்கும் இந்தப்பைத் தியம் பிடித்து விட்டதே? ஆச்சர்யம்!

இந்திய கலாசாரத்திற்கு அஸ்திவாரம் ஸம்ஸ்கிருதம்

"மத, வகுப்பு, பாஷா வேற்றுமைகளும் துவேஷங்களும் இந்நாட்டில் விளைத்துள்ள விஷமம் எல்லையற்றதென்றும், இவ்விதம் ஆபாசமான விதங்களில் வேற்றுமைகள் பாராட்டுவது அர்த்த மற்ற தென்றும், ஆரியர், திராவிடர் என்ற வித்தியாச மெல்லாம் உண்மை யில் ஒன்றும் கிடையாதென்றும், **இந்திய கலாசாரத்துக்கும் பாரமார்த்திகத் துறைக்கும் அஸ்திவாரம் ஸம்ஸ்கிருத பாஷைதான் என்பதில் சந்தேகமே கிடையாதென்றும்** பாலக்காடு முனிசிபல் சபை ஜனவரி 31-ஆம் தேதி தமிழ் ஆஸ்தான கவிஞர் ஸ்ரீ நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை அவர் களுக்கு வாசித்துக் கொடுத்த உபசார பத்திரத்துக்கு பதில் கூறுகையில் அவர் கூறினார்.

கோபப் பிரசாதம்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. தேவாரம், திருவாசகம், பெரிய புராணம் போன்றவை திருமுறைகளைச் சார்ந்தவையே. இந்த வரிசையில் பதினோராம் திருமுறை என்பது ஒரு தொகை நூல்; பல பெரியோர்கள் பாடிய பாடல்கள் இதனில் இருக்கின்றன. அவற்றுள் நக்கீரர் என்ற புலவர் பெருமான் பாடியருளிய கோபப் பிரசாதம் என்பது ஒன்று. பரமேசுவரனுடைய நிக்ரக அனுக்ரக வரலாறுகள் பலவற்றைக் கூறிப் பிறகு அவருக்குரிய பெருமைகளையும் அப் பாடல் விவரிக்கின்றது. மொத்தம் அதனிலுள்ள வரிகள் எண்பத்தேழே. இருந்தாலும் பாட்டு மிகுந்த அர்த்த புஷ்டிடியுள்ளதாக அமைந்திருக்கிறது.

இப்பாடலில் கூறப்பட்டபடி ஈசுவரனுடைய கோபத்துக்கு ஆளானவர்கள் பிரமன், காமன், யமன், திரிபுரர், யானை, இராவணன், சூரியன், தக்ஷன், அக்னி, சந்திரன், சலந்தரன், தாருகன், கருடன் ஆகியோர். அவருடைய அருளுக்குப் பாத்திரமானவர்கள் திருமால், கண்ணப்பன், சண்டேசுவரன், சாக்கியன், நந்தி, பிருங்கி, நந்திமாகாளன், பார்த்தன், மார்க்கண்டேயன், சிலந்தி, சனகாதி முனிவர் முதலியோர்.

இவ் வரலாறுகள் சிவபிரானுடைய நிக்ரக அனுக்ரகங்களை முழுவதும் அறுதியிட்டுக் கூறப்பட்டன அல்ல; அவருடைய செயல்களை முழுமையும் கூறுவதென்பது எவராலும் ஆகக்கூடியதுமன்று. ஆனால் நக்கீரர் கூறியருளிய ஜாப்தாவிலிருந்து ஈசுவரனுடைய கோபத்துக்கும் அருளுக்கும் பதவியோ, ஜாதியோ, தொழிலோ, பெருமை சிறுமைகளோ காரணமில்லை யென்பதும், அவருடைய சட்டத்தை மீறுகிறவர்கள் தண்டிக்கப்படுவதும், அதற்கு உட்படுகிறவர்கள் அனுக்ரகிக்கப்படுவதும் நிச்சயமென்பதுமான உண்மையையே நக்கீரர் நமக்குச் சொல்ல முற்பட்டார் என்பதை நாம் உணரவேண்டும். காமன், யமன், சூரியன், அக்னி, சந்திரன், கருடன் முதலிய தேவர்களும், திரிபுரம், இராவணன், சலந்தரன், தாருகன் போன்ற அசுரர்களும், யானை கருடன் ஆகிய பிராணி உருவினரும் அவருடைய கோபத்துக்குள்ளானார்கள். அதேமாதிரி அனுக்ரத்துக்குப் பாத்திரமானவர்களும் தேவர்கள்: அசுரர்கள், மனிதர், பிராணி முதலியோரும் உண்டு. 'திரு உருவத்தோடு செங்கண் ஏறும் அரி அனை திண்திறல் அசுரனுக்கு அருளியும்' (வரி 14) என்று ஓர் அசுரனுக்கு ஈசுவரன் இருஷப வாகனத்தையும் சாரூபத்தையும் கொடுத்தார், என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் அவருடைய கோபத்தின் கொடுமையையும், அருளின் பெருமையையும் இவ் வரலாறுகள் விளக்குகின்றன. பிரமன் சிரம் இழந்தான் ; மன்மதன் எரிந்து போனான் ; யமன் உயிர் இழந்தான் ; திரிபுரம் சாம்பலாயிற்று ; தக்ஷன் தலை இழந்தான் ; சூரியனுக்குப் பல் போயிற்று ; அக்னியின் கை ஒடிந்தது ; இன்னும் இவ்வாறே பிறவும்.

அதேமாதிரி அனுக்ரகத்தின் அளவுக்கும் எல்லை இல்லை. கண்ணப்பனை வேடனும், சண்டியான அந்தணனும் கணநாதர்கள் ஆயினர். கல்லால் அடித்த சாக்கியன் கண பதவியடைந்தான். நந்தி நெற்றியிற் கண்ணும் நீள்புயம் நான்கும் பெற்றான். அசுரன் அருள் பெற்ற கதை முன்பே சுட்டப்பட்டது; அவன் பெயர் புலப்படவில்லை. சிலந்தி கோச்செங்கணானாகி அரசு பெற்றது.

இவ்வாறு பிறப்போ பதவியோ காரணமாகாமல் ஈசுவரன் கோபிக்கவும் அருள்புரியவும் காரணத்தை நாம் காண வேண்டும். ஆகவே ஈசுவர சந்நிதியில் நல்லவர், கெட்டவர் என்ற வேற்றுமையைத் தவிர வேறெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சரீர தர்மத்தைக் கடைப் பிடிக்காமல் சிறிதளவேனும் தவறுவோமானால் அந்த அளவுக்கு வியாதி வாராமல் நிற்பதில்லையே. அதைப்போல் ஆத்ம தர்மத்திற்குச் சிறிது குற்றம் ஏற்பட்டாலும் ஈசுவர கோபம் வெளிப்படாமலிராது. சரீரப் பாதுகாவலுக்கு விதிவிலக்குகள் இருப்பனபோல், ஆத்மப் பாதுகாவல்களுக்கும் விதி விலக்குகள் இருக்கின்றன. எல்லாச் சரீரங்களுக்கும் பொதுவான சுகாதார விதிகளும், இளமை, முதுமை, ஆண், பெண், வாதம், பித்தம் முதலிய வெவ்வேறு தன்மைகளால் மாறுபட்ட சரீரங்களுக்கும், இடம், காலம் முதலிய வேற்றுமைகளுக்கும் விசேஷ விதிவிலக்குகளும் இருப்பதை நாம் அறிவோம். அதைப் போலவே, மானிடர் யாவருக்கும் பொதுவாகப் பல ஆத்ம தருமங்களும், அவரவர்களின் தகுதிக்கேற்ற விசேஷ ஆசாரங்களும் இருக்கின்றன. இவற்றை நாம் நூல்களிலிருந்தும், பெரியோர்களிடமிருந்தும், சம்பிரதாயங்களினின்றும் அறிந்துகொள்கிறோம். எவ்வெக்காலத்தில் தனி மனிதனோ, சமூகமோ, தேசமோ, அல்லது உலகம் முழுமையுமோ இந்தச் சாமானிய தருமங்களினின்றும், விசேஷ தருமங்களினின்றும் சிறிதேனும் மாறுபடுமானால் அதற்கேற்றபடி ஈசுவர தண்டனை உண்டாகிறது, இது தவறுவதே இல்லை. இதில் ஈசுவரனுக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்பது கிடையாது. தண்டனையும் பாபத்திற்குத் தகுந்தாற் போலக் கொடுமையாயிருக்கும். திரிபுரங்களென்ற மூன்று மகா பட்டணங்கள் ஒரு நொடியில் சாம்பலாயின. இதைவிடக் கொடிய கோபம் உண்டோ? அனுக்ரகமும் இப்படியேதான் ; கொடைக்கும் அளவில்லை.

இவ்வாறு இரண்டு பெரிய உண்மைகளை நமக்கு இப் பாடல் தெரிவிப்பதோடு, கோபப் பிரசாதம் என்னும் தொடர் மற்றொரு பொருளையும் காட்டி மூன்றாவதான ஒரு கருத்தையும் தெரிவிக்கிறது. அதாவது, ஈசுவரனுடைய கோபமே

பிரசாதம் ஆகும் என்பதாம். பரமேசுவரன் உலக பிதா; நாமெல்லோரும் அவருடைய குழந்தைகள். ஒரு தகப்பன் தன் குழந்தைகளுள் ஒன்று குற்றம் செய்யும்போது அதனைத் தண்டிப்பது இயல்பே; அவ்வாறு தண்டிக்கும்போது தகப்பன் அகங்காரத்தாலாவது, வெறுப்பாலாவது அவ்வாறு செய்வது அவனுடைய தோஷமாகும். பிள்ளையை நல்வழிப்படுத்த தண்டமே உற்றவழி என்று எண்ணி அவன் தண்டிப்பானானல், அவ்வாறு அவன் செய்வதைக் கருணை என்றுதான் சொல்ல வேண்டும். அதைப் போலவே, அகங்காரமோ வெறுப்போ இல்லாத ஈசுவரன் மக்களுக்கோ, சமூகத்துக்கோ, தேசத்திற்கோ பஞ்சம், பிணி, வறுமை, நோய் போன்ற தண்டனையைக் கொடுக்கும்போது, கருணையோடுதான் அவ்வாறு செய்கிறார் என்று நாம் நினைக்கவேண்டும். அப்படிக் கிடைக்கும் தண்டனைக்குக் காரணம் என்ன என்று அறிந்துகொள்ளவும், இனியாவது அப்படிப்பட்ட குற்றம் வராமல் பாதுகாத்துக் கொள்ள வழிகளை நாடவும் நாம் முயலவேண்டும். இதுவே புத்திசாலித்தனத்துக்கு அடையாளம்.

இப்பொழுது நம்மைச் சூழ்ந்து நாம் காண்பதென்ன? எரிமலையில் உட்கார்ந்திருப்பவர்கள் கூட நம்மைவிடக்கவலையற்றவர்களாக இருக்கக்கூடும். பணக்காரர்களுக்கும் கவலை; ஏழைகளுக்கும் கவலை ஒருவராவது மன நிம்மதியோடு இருப்பதாகக் காணவில்லை. அரசாங்கங்களுக்கு இருக்கும் கவலைகளுக்கு எல்லையில்லை. வியாபாரிகளுக்கும் நிம்மதியில்லை. எல்லோரும் பிறருக்குச் சீர்திருத்தம் செய்ய முற்படுகிறார்கள்; தம் நிலையைச் சீர்திருத்த எவரும் கவலைப்படுவதில்லை. பிறர் குற்றம் செய்பவர்களாகவே நம் கண்களுக்குப் படுகிறார்கள். நம் குற்றம் நம் கண்ணில் படுவதேயில்லை. இந்நிலைக்குக் காரணம் யாது? ஈசுவரனுடைய கோபத்துக்கு இன்று உலகம் ஆளாயிருக்கிறது என்பது கண்கூடு. அது நமக்குப் பலவித துன்பங்களை விளைவித்துக்கொண்டிருப்பதோடு நம்முடைய புத்தியையும் உண்மையைக் காணமுடியாதபடி மயக்கிக்கொண்டிருக்கிறது. ஈசுவரன் உலகத்தின்மீது இவ்வாறு கோபித்துக்கொண்டிருப்பது, நமக்கு அறிவைப் புகட்டி, நம் குற்றத்தை உணரச் செய்து, நல்வழியில் நம்மைச் செலுத்தவேதான் இருக்கவேண்டுமென்று நாம் உணரவேண்டும். அவர் நம்மை முற்றிலும் கைவிட்டு விடவில்லை யென்பதற்கு எத்தனையோ அத்தாக்ஷிகள் இருக்கின்றன. அவற்றையும் நாம் அறிந்துகொண்டு ஈசுவரனின் கருணையை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அப்படியும் நாம் அறிவு பெற்று நம்மைச் சீர்திருத்திக்கொண்டு, நாம் செல்லும் குற்ற வழிகளிலிருந்து விலகி நடக்க முயலாவிட்டால் தக்ஷன் பட்ட பாட்டையும், திரிபுரம் அடைந்த நிலையையும் இப்பாடல் நினைப்பூட்டுகின்றது. பெரியோர் வாக்கு பொய்யாகாது.

"காமகோடி"

சூரிய கிரணங்களும் நமது நாடிகளும்.

K. தியாகராஜ தீக்ஷிதர், B. A., L. T.

நல்வாழ்கைக்குக் கிரண-நாடிஸம்பந்த அறிவு அவச்யம்.

ஸூர்யவர்ணகிரணங்களுக்கும் அதேவர்ணமுள்ள ஹ்ருதயநாடிகளுக்கும் இடையே உள்ள அந்யோந்ய ஸம்பந்தத்தை சாந்தோக்யச்ருதி எடுத்துரைக்கிறது.

पताः आदित्यस्य रश्मयः ....
अमुष्मादादित्यात्प्रतायन्ते ताः आसु नाडीषु सृप्ताः ; आभ्यो नाडीभ्यः प्रतायन्ते- ते अमुष्मिन्नादित्ये सृप्ताः ॥ ஆதித்யனுடைய இந்த கிரணங்கள், இந்த ஆதித்ய மண்டலத்திலிருந்து எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கின்றன; அவை (அவ்வர்ண கிரணங்கள்) இந்த நாடிகளில் (ப்ராணிகளுடைய ஹ்ருதயத்திலிருந்து, ஸூர்ய கிரணங்கள்போல் இவ்வுடலில் எல்லா இடத்திலும் வியாபித்துள்ள அந்தந்த வர்ணநாடிகளில்) ஊடுருவி இருக்கின்றன; அவ்விதமே ப்ராணிகளின் நாடிகளிலிருந்து (ஸூக்ஷ்ம உஷ்ண கிரணங்கள்) வெளியுலகில் பரவியும், இந்த ஆதித்யனுடைய வர்ணகிரணங்களில் ஊடுருவிச்சென்றுமிருக்கின்றன (ஆதித்யனுடைய கிரணங்களுடன் ஒன்றுசேர்ந்து விடுகின்றன.) இந்த மந்த்ரத்திலிருந்தும் ப்ரச்நோபநிஷத்திலிருந்தும் பல ரஹஸ்யங்கள் (விஞ்ஞான ஆராய்ச்சியினால் கூட இன்னமும் கண்டுபிடிக்கப்படாத பல தத்வங்கள்) வெளியாகின்றன; அதாவது ஸூர்யனே ப்ராணிகளின் வெளிப்ராணன். அவருடைய உஷ்ணத்தால்தான், உஷ்ணத்தோடு கூடிய உயிர் (ப்ராணசக்தி) ப்ராணிகளின் உடலில் நிலைத்து நிற்கிறது. அவ்விதம் நிலைத்திருத்தல் எவ்விதமேற்படுகிறதென்று சாந்தோக்யம் வெளிப்படுத்துகிறது. ஸூர்யனுடைய வர்ண கிரணங்கள் மூலம், அந்தந்த வர்ணமுள்ள (ப்ராணிகளின்) ஹ்ருதயநாடிகள் தூண்டப்பட்டு, உயிர்நிலையான ஹ்ருதயம் (மனிதன் வசத்தில் உட்படாமல்) தானே தனித்து வேலைசெய்வதுபோல் நமக்குத் தோன்றிக்கொண்டு, ஆனால் ஸ்ரீஸூர்ய நாராயணனுடைய கவனிப்பிலும் ஆதரவிலும் இருந்து வருகிறது" என்று நாம் அறியவேண்டும்.

ப்ராணிகள் செய்யும் தர்மாதர்மங்களை ஸாக்ஷியாயிருந்து கவனிக்க வேண்டியவேலை தனக்கிருப்பதால் ஸூர்யன் ப்ராணிகளின் ஆயுளை தனது ஜ்யேஷ்ட குமாரனான சனைச்சரனிடம் ஒப்புவித்து, ஜ்யோதிச் சாஸ்த்ரம் ஒப்புக்கொண்டிருக்கிறபடி 'சனைச்சரக்ரஹத்தை ஆயுஷ்காரகனாக

அமர்த்தி இருக்கிறார். அவ்விதமே ப்ராணிகளின் ஆயுள்முடிவை அறிந்து உடலிலிருந்து உயிரைப்பிரிக்கும் வேலையை தன் கனிஷ்ட குமாரனை தர்மராஜனிடம் ஒப்புவித்திருக்கிறார். இவ்விதம் அம்மூவரும் ப்ராணிகளை தங்கள் வசத்தில் வைத்துவரும் தத்வம் சாஸ்த்ர ஆராய்ச்சியிலிருந்து புலப்படுமேயல்லாது, தனக்குத்தானே தோன்றக்கூடிய உண்மையல்ல. ஓர் ஸாரதி கடிவாளங்களைச் சுண்டிச்சுண்டி குதிரைகளைத் தூண்டுகிறவரையில் குதிரைகள் நிற்காமல் ஓடுவதுபோல், ப்ராணிகளின் கர்மவேகமிருக்கும் வரையில் இம்மூன்று உலகங்களின் நிகழ்ச்சிகளை அறிந்து நடத்திக்கொடுக்கும் ஆற்றலுள்ள ஸூர்யன், தன் கிரணங்கள் மூலம், இம்மூன்று உலகத்தையும் தன் வசத்தில்அமர்த்தி ஆண்டுவருகிறார். தாய்களுக்குத் தன் மக்களைப் பாதுகாப்பதில் எவ்வளவு கவலையோ, அவ்வளவு கவலையை ஸ்ரீஸூர்ய நாராயணன் தன் மண்டல கிரணங்கள் மூலம் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இவ்விதம் நம் வாழ்க்கைக்கு ஊன்று கோலான ஸந்த்யோபாஸனத்தை அர்க்ய-த்யான-ஜப-உபஸ்தான காலங்களில் மந்த்ரார்த்த அறிவுடன் ச்ரத்தையாய்ச் செய்வோருக்கு தீர்க்கஆயுளும்-ஆரோக்யமும்-ஸுகானுபவமும்-ஆத்மஞானமும்-ஆனந்தமும் திண்ணமாய் ஏற்படுமென்பதை சொல்லவும் வேண்டுமோ!

இவ்வளவு பயனும் தினந்தோறும்-காலந்தோறும் அனுஷ்டானத்தைச் செய்வோருக்கல்லவா கிடைக்கும். ஸந்த்யோபாஸனத்தையே விட்டுவிட்டு, ஸ்ரீஸூர்ய நாராயண த்யானமாகிற ரஸாயனத்தை உட்கொள்ளாமல், டானிக், டாக்டருதவி இவைகளின் மூலம், தன்னாயுள் விருத்தியடையுமென்று ஏவப்பணங்காணும் மூடர்களின் தனம் வ்யயமாகி, தாரித்ர்யமும்-வ்யாதிகளும் நித்யகடனைக் கொடுக்காமல் நித்யகடமையை மறந்தவர்களிடம் குடியிருக்க வந்துவிடும். 1000 ரூபாய்நோட்டை கலர்க்காகிதமென்று எண்ணி, "பற்பொடிகட்ட ஒருநாளுதவுமென்று", நல்லவேளையாய்க் கிழித்தெறிந்து விடாமல் வைத்திருந்தமூடன், அப்பொருளின் மதிப்பறிவில்லாத அறிவீனத்தால், எளியவனாகவே ஏமாந்து கடுஞ்ஜீவனம் செய்துவந்தான். தற்செயலாய் ஓர் ஆப்த ஸ்நேகிதன் மூலம், அதனுயர்வை அறிந்து-கஷ்டம்-விலகி-ஸுகஜீவனம் செய்யத்தொடங்கினான். ப்ரத்யக்ஷதெய்வமான ஸூர்யனை உபாஸித்தால் வறுமை பல ஜன்மங்களில்கூட அணுகாதென்று சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன! இந்த ரஹஸ்யத்தைக் காதால்கேட்ட பிறகாவது-ஹிதத்தையே போதிக்கும் பத்திரிகைகளை அகஸ்மாத்தாய் பார்த்தபிறகாவது சிலர் விழித்துக்கொண்டு ஸன்மார்க்கத்திற்குத் திரும்புவதுண்டு. அவ்வித விழிப்புக்கூட இல்லாத தூங்குமூஞ்ஜிகள் அடிக்கடி பிறந்து-சாகும் கொசுக்களாய்ப் பிறக்கும்படிநேரிடும்.

கிரண-நாடீஸம்பந்த அறிவின் உயர்பலன்.

மேற்கூறியுள்ள கிரண-நாடீ ஸம்பந்தத்தை உணர்ந்து ஸூர்யனை உபாஸிக்கும் யோகிகள் மாத்திரந்தான், மரணஸமயத்தில் ஸூர்ய கிரணங்களால் மண்டலத்திற்கு இழுக்கப்பட்டு உயர்ந்த புண்யலோகங்களின் த்வாரம் அவரால் திறந்துவிடப்படவே, ஸூர்ய மண்டலத்தைப் பிளந்துகொண்டு மறுபிறப்பில்லாத அம்ருத தத்வத்தை சாச்வதமாயளிக்கும் ப்ரம்ஹலோகம் போகிறார்களென்கிற, ஸூர்யோபாஸனையின் ஒப்பற்ற பலனையும் அந்த ஸந்தர்ப்பத்திலேயே சாந்தோக்யம் வெளியாக்கி இருக்கிறது. கிரண-நாடீ ஸம்பந்தம் எல்லா ப்ராணிகளுக்கும் ஸமானந்தான், ஆனால் நோட்டின் மதிப்பை அறிந்துவிட்டவனுக்கு துக்கநிவர்த்தியும் ஸுகஜீவனமும் ஏற்படுவதுபோல், கிரண-நாடீ ஸம்பந்தத்தை அறிந்திருந்தாலும், தினந்தோறும் உபாஸித்துப் பிரார்த்திக்காதவர்களுக்கு ப்ரம்ஹலோகம் கிடைப்பதில்லை ப்ரமோஷன் கிடைப்பதில் எல்லோருக்கும் ஆசைதான்; ஆனால் அது முயற்சிப்பாருக்கு மாத்திரமே கிடைக்கும்; இதரர் ஏமாந்தவர்கள்தான்; அதுபோல நாள்தோறும் குன்றாத ஊக்கத்தோடு அலசமின்றி வேதரிஷிகள்போல் தீர்க்ககாலம் ஸந்த்யோபாஸனத்தை எவர்கள் அனுஷ்டிக்கிறார்களோ அவர்களுக்குமாத்திரந்தான், மஹர்ஷிகளைப்போல் தீர்க்காயுள்ஸுகம்-புத்திகூர்மையும்-இஹலோகத்தில் புகழும்-அழிவற்ற புண்யலோகங்களும் இவ்வித எல்லா உயர்வும் எளிதில் கிடைக்கிறதென்று தர்மசாஸ்த்ரத்தின் ஆன்ஹிககாண்டம் கூறுகிறது. சாஸ்த்ரம் ரஹஸ்ய தத்வங்களை எவ்வளவு தூரமறிந்து நம்முடைய க்ஷேமத்தையும்-உயர்வையும் உத்தேசித்து உபதேசிக்கிறது பாருங்கள்!

கண் வர்ணத்திலிருந்து நாடீவர்ணத்தை ஊகிக்கலாம்.

"ஸூர்யனின் வர்ணகிரணங்கள்போல், ப்ராணிகளின் ஹ்ருதயநாடிகளுக்கு, வானவில்லின் ஏழுவர்ணங்கள் மாதிரி, பற்பல வர்ணங்களுண்டென்று நம்பத்தானே வேண்டியிருக்கிறது. அனுபவத்தில் பார்க்கமுடியாதே; என்கிற ஸந்தேஹம் வேண்டாம்; பார்க்கமுடியும் பக்ஷிகள்முதலிய விவித ப்ராணிகளின் கண்ணில் பற்பல வர்ணபேதங்களைப் பார்க்கிறோம். மனிதனின் ஒரு இனத்திலேயே விவித ஜாதிகளில் கருவிழி-நீலம்-பச்சை ஸ்வர்ணவர்ணம்-செந்தாமரை வர்ணங்கள் ஆங்காங்கு இயற்கையமைப்பில் காணப்படுகின்றன. கண்ணிலமைந்துள்ள நுண்ணிய நாடிகள் ஹ்ருதயத்திலிருந்து மேல்வரும் வர்ணநாடிகளேயாம். "வர்ணவரிசையை (Specto-scope-ன்) உதவியால், ஸூர்யமண்டலத்திலுள்ள எல்லா தாதுப்பொருள்களும் பூமியில் காணப்படுகின்றன என்கிற ஆராய்ச்சி அனுபவத்திலிருந்து

ஸூர்யமண்டலத்திலிருந்து சிதறிவந்துள்ள கோளங்களில் நம் பூமியும் ஒரு கோளமென்று விஞ்ஞானிகள் நிர்ணயித்திருக்கிறார்கள். எப்படி மண்ணே குடமாக மாறி இருக்கின்றதோ, தாயின் சரீரஸத்தே குழந்தையின் உடலோ, அவ்விதமே ஸூர்ய மண்டலத்தின் ஓரம்சமான இப்பூமிக்கு ஸூர்யமண்டலமே உபாதானகாரணமாகிறது. ஸூர்யனுடைய வர்ண கிரணங்களுக்கும் ப்ராணிகளின் கண்வர்ணத்திற்கும் கணவர்ணத்திலிருந்து ஊஹிக்கத்தக்க ப்ராணிகளின் ஹ்ருதய நாடிகளுக்கும் வர்ணத்தில் ஒற்றுமை யிருப்பதால் ஸூர்யமண்டலந்தான் அகில ப்ராணிகளின் உடல்களுக்கு இன்றியமையாத உபாதானகாரணமென்று ஊர்ஜிதப்படுகிறது. சாஸ்த்ரங்களில்

अभिन्ननिमित्तोपादानकारणत्वं ईश्वरत्वम्

என்று ஸகுணப்ரம்ஹமாகிற பரமேச்வரனுக்கு (ப்ரத்யக்ஷ கடவுளுக்கு) லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது; அதாவது குழந்தையின் உடலுக்குத் தகப்பன் தனிப்பட்ட நிமித்த காரணமாயும் தாயின்உடல் தனித்த உபாதான காரணம் போலல்லாமல் இவ்வுலகங்களுக்கு எவர் ஒருவரே பிரிவடையாத நிமித்த உபாதான இரு காரணங்களாய் அமைந்திருக்கிறாரோ, அவரொருவரேதான் ஸகுணக்கடவுளென்கிற பரமேச்வரன்! இரு காரணங்களும் பிரிக்கமுடியாதபடி எச்சக்தியில் ஒன்றுகூடி இருக்கின்றனவோ, அச்சக்திக்குத்தான் ஈச்வரனென்கிற பெயர்தகும். இரு காரணங்களின் இணையைப் பிரிக்கமுடியாத தன்மையே அவருக்குலக்ஷணம் (அடையாளம்) இவ்விணைப்பைத்தான் ப்ரம்ஹம்-மாயையென்றும், அர்த்தநாரீச்வரனென்றும், சக்தன் சக்தியென்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இவ்விரு காரணங்களில் உபாதானகாரணமாக அமைந்துள்ளவர் ஸூர்யனென்று ஸ்தாபித்திருக்கிறோம். அவரே நிமித்தகாரணமென்று ஸ்தாபிக்கப்போகிறோம். ஆகையால் நம்முலகத்திற்கும் நம்முடலுக்கும் ஸூர்யனொருவரே ப்ரத்யக்ஷ தெய்வமாக ப்ரத்யக்ஷக்கடவுளாக அமைந்திருக்கிறார். அப்படிப்பட்ட ப்ரத்யக்ஷ காரணரை நாம் உபாஸிக்கவேண்டியது நம் கடமையாகிறதல்லவா! இவ்விதம் ப்ராணிகளின் கண் வர்ணத்திலிருந்து, நம்முடைய ஞானக்கண்ணை திறந்துவிடக்கூடிய ஆற்றலமைந்த பரமேச்வரனை-ப்ரக்ருதி புருஷர்களை-ஸகுணக்கடவுளை ஒருவாறு அறிந்தோம்.

ஸூர்யனை அவமதித்தல் குருடுக்குக் காரணம்.

சிலர் பார்வைக்கு, குறிப்பிட்ட சிலவர்ணமுள்ள வஸ்துக்கள் புலப்படுவதில்லை. இவர்களை வர்ணக்குருடர்கள் (Colour blind) என்று சொல்லுவார்கள் சிலர் கண்ணுக்கு நேர்வஸ்துக்கள் கோணவாய்ப் புலப்

படும். மற்றும் சிலருக்கு ஒரு சந்த்ரமண்டலம் இரட்டையாய்த் தோன்றும். சிலமனிதர்கள் பிறவிக்குருடர்களாகவே காலந்தள்ளவேண்டி இருக்கிறது. இவ்விதக் கண்பார்வைக் குறைவுகளுக்கு ஸூர்ய நமஸ்காரத்தை விட்டதோஷமும் பலவித ஸூர்ய அபசாரங்களும் காரணம். ஸூர்யன் ப்ரத்யக்ஷ தெய்வமென்கிற அறிவை மறந்து, மண்டலமிருக்கும் திசையை நோக்கித்துப்புதல் ஆடையில்லாதபடி ஸூர்ய கிரணம் மேல் விழும்படி நிற்றல்-ஸூர்யதிக்கை நோக்கி அலக்ஷ்யமாய் காலை நீட்டிக் கொண்டு உட்காருதல், உறங்குதல், மலக்கழிவுகளை ஸூர்யனை நோக்கிச் செய்தல் இவ்வித அபசாரங்களே கண்ரோகங்களுக்குக் காரணம். கண் பார்வையை அனுக்ரஹித்திருப்பவர் ஸூர்யனல்லவா! அபசாரங்களை தர்மசாஸ்த்திரங்களிலிருந்து அறிந்து, அவைகளேற்படாதபடி நடந்து கொள்ளவேண்டும். அவ்வித நியமம் ஸூர்யன் ப்ரத்யக்ஷதெய்வமென்கிற ஞாபகத்தை மறக்காதிருக்கச்செய்யும். மறக்காது அவரை உபாஸித்து வருதலே அவரனுக்ரஹத்தைப் பெறும் முறையாகும்.

ஹ்ருதயநாடித்தொகுதிக்கு ஸமமான கிரணத்தொகுதி ப்ராணியை ஆட்டிவைக்கிறது

ஈச்வர ஸ்ருஷ்டியில் மனிதனுடைய உடலொன்றுதான் பூர்ண அமைப்புள்ளது. மனிதனுடைய ஹ்ருதயத்திலிருந்து 101 முக்கியநாடிகள் கிளம்பி, ஒவ்வொன்றும் 727209200 கிளைகளாகப் பிரிந்திருக்கிறதென்று ஸ்ரீ ஆநந்தகிரியால் ப்ரச்நோபநிஷத்தின் பாஷ்யடீகையில்கணக்கிடப்பட்டிருக்கிறது. இவ்வளவு நாடிகளையும் நாடிகளின் கிளைகளொவ்வொன்றையும் ஒவ்வொரு ஸூர்யகிரணம் தாண்டிவருகிறது. ஆகையால் ஒவ்வொரு ப்ராணிக்கும்-ஸ்தாவரத்திற்கும் அதனதன் ஹ்ருதயநாடிக்கணக்குக்குச்சமமான ஸூர்யகிரணத்தொகுதி ஆதிநாராயணஸகுணக்கடவுளால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எல்லாத்தொகுதிகளின் மொத்தம் மண்டலகிரணங்களிலமைந்திருக்கும்படி, அம்மண்டலம் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. நவக்ரஹங்களின் முக்கியரான ஸூர்யன், இதர எட்டுக்ரஹங்களின் ஒற்றுமைப்பால், அந்த எட்டுக்ரஹங்களுடன் சேர்ந்து ப்ராணிகளின் புண்யபாபத்திற்குத் தக்கபடி, அவையவைகளின் ஹ்ருதயநாடிகளின் மூலம், ரத்தஓட்டத்தைத் தன் வசத்தில் வைத்துக் கொண்டு, ஆரோக்யத்தையோ-வியாதியையோ, நல்ல உணவையோ கெட்ட உணவையோ, நற்புத்தியையோ-துர்புத்தியையோ, நன்னடத்தையையோ, கெட்டசெயலில் நோக்கத்தையோ, காலச்சக்ரம்-ஜ்யோதிஸ் சக்ரம் இவைகளின் பிறளுதலை அனுஸரித்து, ஸுக-துக்கங்களைக் கொடுத்து வருகிறார்.

ஆதிநாராயணனின் கட்டளையால் நம் ஸூர்யநாராயணருக்கு, த்ரிலோகப்ராணிகளின் பூர்வகர்ம அறிவு-அக்கர்மங்களுக்கிசைந்த ஸுக துக்கங்களைக் கொடுக்கும் சக்தி-இவ்விஷயங்களில் தவறுதலேற்படாத ஞானசக்தி, ஆகிய இவ்வறிவுகள், ஸ்வயமாகவே அவருக்கு அமையும்படி அளிக்கப்பட்டிருக்கின்றன. ஸூர்யமண்டலத்தில் கோடிக்கணக்கான ப்ராணிகளின் கோடிக்கணக்கான கிரணத்தொகுதிகள் பொருத்தப்பட்டிருப்பதால் தான், ஸூர்யன் ஸஹஸ்ராம்சு: (ஆயிரக்கணக்கான கிரணங்களோடு கூடியவர்) என்கிற ஐந்தாவது பெயரை அடைந்திருக்கிறார். எந்த மஹாயோகீ தன் பூர்வ ஜன்மத்தில், 'தான் ஸூர்யனாக ப்ரகாசிக்கவேண்டுமென்று தவம் செய்திருந்தாரோ, அந்த யோகியைப் பார்த்து ப்ரஹ்மாவானவர், தான் மண்டலத்தை ஸ்ருஷ்டிக்குங்கால், பின் வருமாறு எச்சரிக்கிறார். "ஹே! யோகிவர்ய! உம்முடைய வசத்தில் நான் விடப்போகிற ப்ராணிகளை, அவையவைகளின் காலக்ரமப்படி, ஆக்கி-அளித்து-அமர்த்தும் மூன்று தொழில்களையும் நீர் தவறுதலின்றி செய்யும் பொருட்டும், ப்ராணிகளின் கிரணத்தொகுதிகள் உம்முடைய மண்டலத்தில் அமரும் பொருட்டும், உமக்கு த்ரிலோகவிஷயமான ஞானசக்தி அத்யாவச்யம். அவ்வபார அறிவை நீர் தவத்தினால் அடையும். நான் உம்மை பூர்ணமாய் அனுக்ரஹிக்கிறேன். ஹே! ஸூர்யநாராயண! இம் மண்டலத்தில் அமரும், ஸஹஸ்ராம்சு: என்கிற நாமதேயத்துடன் த்ரிலோகபூஜ்யராய் விளங்கிவாரும்" என்று ப்ரம்ஹா அவரை உஜார்செய்தார். உடலை ஸ்ருஷ்டிப்பவர் ப்ரம்ஹா; பிறகு ஜிவன் உட்புகும்!

தன் கிரணத்தொகுதியை முற்றிலும் ஹிதகரத்தொகுதியாக செய்துகொள்ளும் முறை.

பகுத்தறிவு- முயற்சியில் ஸ்வதந்த்ரம் இவ்விரண்டு மில்லாத ப்ராணி வர்க்கங்கள் ஸூர்யனால் கொடுக்கப்படும் ஸுக- துக்கங்களை, ஸ்வவசமற்றவர்களாய், அனுபவித்து மாத்திரம் போகிறார்கள். ஆகவே ஸமஸ்த ப்ராணிகளின உடல்களனைத்தும் போகபூமிகளாகின்றன. ஆனால் மனிதனுக்கு மாத்திரம் கடவுள் பகுத்தறிவையும்-தன் மன உறுதியால் (Will Power) தானேமுயற்சிக்கும் ஸ்வாதந்த்ர்யத்தையும் அருளி இருக்கிறார். ஆகையால் புத்திமானான புருஷன், தனக்கேற்பட்டுள்ள கிரணத்தொகுதியின் கெடுதலான அம்சத்தை தனக்கு ஹிதமான அம்சமாக மாற்றிக்கொள்ள, அவ்விரு அருள் சக்திகளையும், தர்மம்-உபாஸனை-பக்தி-ப்ரார்த்தனை-தவம்-த்யானம் இவைகளிலேயே ஊன்றி மனது நிற்கும்படி உபயோகித்து முயற்சித்து வந்தால் ஸூர்யபகவானும் உதவி புரிவார். ஏனெனில் அவர் நம்முள்ளத்தை அறியும் அந்தராத்மாவாக ஹ்ருதயத்திலும் அமர்ந்திருக்கிறார்.

सूर्य आत्मा जगतस्तस्थुषश्च

என்று உபஸ்தானத்தில் போற்றப்படுகிறார்; இதன் அர்த்தம் யாதெனில், 'இடம்விட்டு இடம் நகரக்கூடிய ப்ராணிகளாகிற ஜங்கமங்களுக்கும் ஒரே இடத்தில் நிற்கின்ற ஸ்தாவரங்களுக்கும் ஸூர்யன் உயிர்நிலையான அந்தராத்மாவென்பதாம்'. பகுத்தறிவற்ற ப்ராணிகளுக்கே இவர் ஆத்மாவென்றால், உபாஸகனின் ப்ரார்த்தனையை எளிதில் அறியக்கூடிய கிருபாளுவான ஸூர்யநாராயணன் நமக்கென்று ஏற்பட்டுள்ள கிரணத்தொகுதியை முற்றிலும் ஹிதத்தொகுதியாய் மாற்றி உதவுவாரென்பது திண்ணம்! அனுஷ்டானமாகிற முயற்சி மாத்திரம் அவச்யமானது! இத்துடன் நாடிவசமும் தேவை. நாடிகளை ப்ராணாயாமத்தால் தன்வசத்தில் எவரும் கொண்டு வந்துவிடலாம். நாடீஜயத்தால் கிரணத்தொகுதியை ஹிதகரத்தொகுதியாய் எம்மானிடனும் மாற்றிக்கொள்ளமுடியும். சாஸ்த்ர ரஹஸ்யோபதேசங்களில் நம்பிக்கைவேண்டும். ஆகவே மானிடனின் உடலொன்று மாத்திரந்தான் போக பூமியாகவும் (முயற்சிக்கும் ஸாமர்த்யம் வாய்ந்த) கர்மபூமியாகவும் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறது! 'முயற்சியுடையார் (கர்மானுஷ்டானம் செய்பவர்) இகழ்ச்சியடையார் (ப்ராணி ஜன்மங்களுக்குத் தள்ளப்பட மாட்டார்கள்; தேவதா ஜன்மங்களையே அடைவார்கள்.)

இனிஸூர்யபகவானின் ஆறுவதுநாம.

षष्ठंचैव त्रिलोचनः

த்ரிலோசனனென்பதே ஆறுவது நாம. த்ரிலோசனனென்றால் முக்கண்படைத்த ஸாம்பபரமேச்வரனென்று அர்த்தம். மறுபடியும் ப்ரம்ஹா கூறினதாவது, "ஹே! யோகிச்ரேஷ்ட! நீர் ஸஹஸ்ராம்சுவாக மாத்திரமிருந்தால் போதாது. எந்த த்ரிலோசனன் ஸர்வவித்யைகளுக்கும் இருப்பிடமோ எவர் உலக ஆசையை முக்கண்ணால் பொசுக்கினவரோ எவர் ஜடை-விபூதி-புலித்தோல் முதலிய த்ருடவைராக்யவேஷம் பூண்டவரோ-எவர் ஒரு க்ஷணத்தில் கோபத்தை அடக்கி பரம சாந்தமூர்த்தியான தக்ஷிணாமூர்த்தியாய் அமர்ந்தாரோ-எவருடைய சின்முத்ரையை தர்சனம் செய்பவர்களுக்கு ஜீவனும்-ப்ரம்ஹமும் ஒன்று என்கிற அபேதப்ரஹ்மஞானம் உடனே மனதில் உதிக்குமோ, ஆகவே எவரை அண்டினால் ஸம்ஸாரபந்தபயம் நிவர்த்தியாகுமோ, எவர் தன்மூன்றாவது ஞானக்கண்ணால் ப்ராணிகளின் கர்மாக்களை ஸாக்ஷியாக மாத்திரமிருந்து பார்த்துவருகிறாரோ, அந்தத்ரிலோசனனைப்போல் நீரும் உம்முடைய உபாஸகர்களிடம் அனுக்ரஹிப்பவராய் க்ருபாநிதியாய் இருந்துகொண்டு, அவர்களுக்கு நீர் மாற்றியளிக்கும் ஹிதகரகிரணத்தொகுதி மூலம் ப்ரம்ஹஞானம் இம்

மானிட உடலிலேயே ஏற்படும்படி அனுக்ரஹித்துவாரும். அப்பொழுது தான் "ஸம்ஸார வ்யாதிக்கு மருந்தாகவும் நீலகண்டராகவும் (ப்ராணிகள் செய்யும் பாபமாகிற விஷத்தை தன் நெஞ்சில் அமர்த்தி, உடனே தண்டிக்காமல் பொருமையோடு காத்திருக்கும் தயாளுவாகவும்) முக்கண்ணராகவும் அழிவற்ற மங்கள மூர்த்தியென்றும் பராசக்தியாகிற அம்பையோடு (தாயோடு) கூடிவிளக்கும் ஸாம்ப பரமேச்வனென்றும், உபாஸிக்கப்படும் ஸதாசிவன் உம்முடைய மண்டலத்தின் மத்தியில் வீற்றிருக்கிறார்," என்று உம்மண்டலத்தை உலகம்போற்றி நமஸ்கரிக்கும்.

ஸூர்யன் ப்ராணி கர்மாவைப் பதிவுசெய்து கொள்வார்.

த்ரிலோசனரான ஸாம்ப பரமேச்வரனுடைய ப்ரத்யக்ஷ ரூபான ஸூர்யன் ஜகத்விலக்ஷணர், அதாவது உலகமக்களைவிட அறிவிற்சிறப்புள்ளவர்! எப்படியெனில் இருகண்படைத்த உலகமக்கள் இருகண்களாலும் உருவமுள்ள ஒருவஸ்துவை மாத்திரந்தான் ஒரு ஸமயத்தில் உற்றுபார்க்க வல்லவர்கள். ஆனால் ப்ரத்யக்ஷமுக்கண்ணரான ஸூர்யன் வெளியுருவமற்ற வாயுவை ப்ராணதேவதையாக ஆட்டிவைப்பதோடு நம்மெண்ணங்களையும் ரஹஸ்யச் செய்கைகளையுங்கூட அறியக்கூடிய அறிவுள்ளவர்! இவ்வறிவே ஸூர்யனுடைய மூன்றாவது ஞானக்கண்ணும். த்ரிலோசனரைப்போல் ஸூர்யனும் ப்ராணி கர்மாவின் ஸாக்ஷியாயினும் ஹ்ருதயாகாசத்தில் உடனே ஏற்படும் கர்மப்பதிவை சித்ரகுப்தர் தன்புஸ்தகத்தில் பதிவுசெய்து கொள்ளும்படி ஆக்ஞை செய்கிறார்.

அறிவிப்பு.

சந்தாதாரர்களுள் பலர் மணியார்டர் கூப்பனிலும், கடிதங்களிலும் சந்தா நம்பரை எழுதத்தவறி விடுகிறார்கள். அதனால் கடிதங்களையோ மணியார்டர்களையோ உடனே கவனித்து ஆவன செய்ய இயலாமல் தாமதமேற்படுகிறது. ஆதலால் தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சந்தா முடிவடைந்த விபரம் தெரிந்தவுடன் சந்தா தொகையை அனுப்பாதவர்களுக்கு ஹிதபாஷிணி வி. பி. யில் அனுப்பப்படும். அதைத் தாமதமின்றி பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளப் படுகிறார்கள்.

மானேஜர், 'ஹிதபாஷிணி'

சிஷ்யன்:- ஐயா! ஸம்ஸ்கிருத பாடத்தை ஏன் கொஞ்ச நாளாகக் கற்பிப்பதில்லை?

குரு:- எனக்கு முறைப்படி கொஞ்சம் கொஞ்சமாக கற்பித்து வரவேண்டுமென்றுதான் எண்ணம். ஆனால் சில சப்தங்களை மனப்பாடம் செய் என்று நான் சொன்னபொழுது நீ முகத்தை சிணுக்கிக்கொண்டாய். அதிலிருந்து உனக்கு அதில் அவ்வளவாகப் பிரியமில்லை எனத்தெரியவந்தது. ஆதலால் நானும் அதைப்பற்றி கவனிக்காமல் இருந்துவிட்டேன்.

சி:- நான் செய்ததுதவறு, மன்னிக்கவேணும். இப்பொழுது சப்தங்கள் முழுவதையும் மனப்பாடம் செய்துவிட்டேன். இதற்கு மேல் தாங்கள் பாடத்தை ஆரம்பித்து நடத்தவேணும். 'கர்த்தா, கர்ம, கரணம்' என்றெல்லாம் கூறுகிறார்களே, அதைப்பற்றி கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்கள்.

கு:- அடியிற்கண்ட வாக்கியங்களை கவனி.

ईश्वरः जगत् सृजति । ஈச்வரன் ஜகத்தை சிருஷ்டிக்கிறார். இங்கு பிரதமாந்தமான 'ஈச்வர:' என்ற சொல் சிருஷ்டி கர்த்தாவான கடவுளை குறிப்பிடுகின்றது. **ईश्वरेण जगत् सृज्यते** ஈச்வரனால் உலகம் சிருஷ்டிக்கப்படுகிறது. இங்கு "ஈச்வரேண" என்ற திருதீயாந்தமான சொல் கர்த்தாவான கடவுளைக் குறிப்பிடுகின்றது. இதிலிருந்து பிரதமாவிபக்தியும், திருதீயாவிபக்தியும் கர்த்தாவைக்குறிப்பிடும் என்று ஏற்படுகிறது.

भक्तः ईश्वरं स्तौति பக்தன் ஈச்வரனை துதிக்கின்றான். இங்கு "ஈச்வரம்" என்ற த்விதீயாந்தமான சொல் துதியில் கர்மாவான ஈச்வரனைக் குறிப்பிடுகின்றது. **भक्तेन ईश्वरः स्तूयते** பக்தனால் ஈச்வரன் துதிக்கப்படுகிறான். இங்கு "ஈச்வர:" என்ற பிரதமாந்தமான சொல் கர்மாவான ஈச்வரனைக் குறிப்பிடுகின்றது. இதிலிருந்து கர்த்தா பிரதமாந்தமாக இருந்தால் கர்மா த்விதீயாந்தமாக இருக்கும். கர்த்தா திருதீயாந்தமாக இருந்தால் கர்மா பிரதமாந்தமாக இருக்கும்என்றுஒருவாறு அறிந்துகொள்ளலாம். இதைமனதில்வைத்துக்கொண்டுஉன்பாடங்களில்வரும்வாக்கியங்களைகவனி

रामः बाणेन वालिनं जघान இராமர் பாணத்தால் வாலியைக்கொன்றார். இங்கு "பாணேந" என்ற சொல் திருதீயாந்தமாக இருந்தபோதிலும் அது கர்த்தாவைக் குறிப்பிடவில்லை. ஆனால் கொல்லுதல் என்ற கிரியைக்கு பாணம் சாதனமாக இருப்பதால் அச்சொல் 'சாதனம்' அல்லது 'கரணமா'க இருக்கும் பாணத்தைக்குறிப்பிடுகிறது. ஆக திருதீயாவிபக்தி கர்த்தா, கரணம் என்ற இரு காரகங்களையும் குறிக்கும். மற்ற விபக்திகளைப் பற்றிபின்பு.

संस्कृतसंभाषणम् ॥

चैत्रः — मैत्र कुत्र प्रस्थितोसि ?

मैत्रः — पश्चिमवीथ्यां संस्कृतपाठशाला वर्तते किल ! तां प्रति प्रस्थितोस्मि -

चै — किमद्य संस्कृतपण्डितः प्रत्यहं तव पार्थक्येन संस्कृत शिक्षणं न करोति ?

मै — संस्कृतपण्डितस्य संस्कृतशिक्षापेक्षया लघुना केनचित् उपायेन संस्कृत पाठयिष्यामः इति दैनन्दिनपत्रिकायां प्रकाशितमासीत्

चै — आम् मयापि दृष्टं तत् । तन्मोहेन संस्कृतपण्डितस्य श्रमो मास्तु इति त्वया अभिहितम् वा?

मै — न तथा स्पष्टमुक्तम् । मासद्वयानन्तरं संस्कृतशिक्षणाय आगच्छन्तु भवन्त इति सविनयमेव निवेदितम् ।

चै — इदानीं उभयोः शिक्षणप्रकारयोः कतरो लघीयानिति तवाभिप्रायः ।

मै — नाहमिदानीं तस्मिन् विषये अभिप्रायमाविष्कर्तुं समर्थः मासषट्कानन्तरमेव किमपि वक्तुम् शक्यते ॥ परन्तु भाषायां प्रावीण्यसंपादने यावान् यत्न अपेक्षितः तावान् उभयोरपि पक्षयो तुल्य एव स्यादिति मन्ये ।

चै — तदस्तु नाम । अपिनाम प्राचीनानां संस्कृतशिक्षणरीतिः भवते रोचते ।

मै — रोचत एव । न केवलंरोचते, तयैवरीत्या सस्कृते दृढतमं ज्ञानमुपजायेऽत्यपि मे भाति

चै — इमां नवीनामपि रीतिं सम्यगवधारय ।

मै — तदर्थमेव प्रतिदिनं तत्र गच्छन्नस्मि ॥

चै — नवीना रीतिरित्यनेनैव कारणेन नास्माकं तत्र प्रद्वेषः । प्राचीनेत्येतावतापि न तत्रास्माकमधिका प्रीतिः । या नामरीतिर्वस्तुतः समीचीना सैवादर्तव्या ।

ஸம்ஸ்கிருத ஸம்பாஷணம்.

சைத்ரன்:- மைத்ர! எங்கு புறப்பட்டாய்?

மைத்ரன்:- மேலவீதியில் ஸம்ஸ்கிருதபாடசாலை இருக்கின்றதல்லவா! அதைகுறித்துப் புறப்பட்டேன்.

சை:- இப்பொழுது ஸம்ஸ்கிருதபண்டிதர் பிரதிதினம் உனக்குத் தனியாக ஸம்ஸ்கிருதத்தைக் கற்பிக்கவில்லையா என்ன?

மை:- "ஸம்ஸ்கிருதபண்டிதர் ஸம்ஸ்கிருதம் கற்பிப்பதைவிட இலகுவான ஓர் உபாயத்தால் ஸம்ஸ்கிருதத்தைக் கற்பிக்கப் போகின்றோம்" என்று தினசரிப் பத்திரிகையில் வெளியிடப் பட்டிருந்தது.

சை:- ஆம். என்னாலும் அது பார்க்கப்பட்டது. அதில் உள்ள மோஹத்தால் "ஸம்ஸ்கிருதபண்டிதருக்கு சிரமம் வேண்டாம்" என்று உன்னால் உரைக்கப்பட்டதா!

மை:- அவ்விதம் ஸ்பஷ்டமாகக் கூறப்படவில்லை. இரண்டு மாதங்களுக்குப்பின் "தாங்கள் ஸம்ஸ்கிருதத்தைக் கற்பிப்பதற்காக வாருங்கள்" என்று மிகவணக்கத்துடனேதான் தெரிவிக்கப்பட்டது.

சை:- இப்பொழுது இவ்விருபோதனமுறைகளுள் எது இலகுவானது என உன் அபிப்ராயம்?

மை:- நான் தற்காலம் அவ்விஷயத்தில் அபிப்ராயத்தை வெளியிடத் தகுதியுள்ளவனாக இல்லை. ஆறுமாதங்களுக்குப்பின் தான் எதையும் சொல்லமுடியும். ஆனால் பாஷையில் திறமையை ஸம்பாதிக்க எவ்வளவு முயற்சி தேவையோ, அவ்வளவு இருமுறைகளிலும் சமமாகத்தான் இருக்கும் என்று எண்ணுகிறேன்.

சை,- அது இருக்கட்டும். நமது முன்னோர்களுடைய ஸம்ஸ்கிருத போதனமுறை உனக்குப் பிடித்திருக்கிறதா?

மை:- பிடித்துதான் இருக்கிறது. பிடித்திருக்கிறது மட்டுமல்ல. அந்த முறையால் தான் ஸம்ஸ்கிருதத்தில் ஆழ்ந்த அறிவு உண்டாகும் என்றும் எனக்குத் தோன்றுகிறது.

சை:- இந்த நவீன முறையையும் நன்று கவனித்துப்பார்.

மை:- அதற்காகத்தான்பிரதிதினம்அங்குசென்றுகொண்டிருக்கிறேன்.

சை:- நவீன முறை என்ற காரணத்தாலேயே நமக்கு அதில் த்வேஷமில்லை. பிராசீனம் என்ற காரணத்தால் மட்டும் நமக்கு அதில் அதிகப் பிரீதியுமில்லை. எந்தமுறை உண்மையில் நன்றாக இருக்கின்றதோ, அதுவே ஆதரிக்கப்படவேண்டும்.

தைத்திரீயோபனிஷ்காரிகா.

முகவுரை

இது காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய ஸ்ரீலக்ஷ்மண ஸூரிகள் அவர்களால் எழுதப்பட்டது. ஸ்ரீஸூரிகள் அவர்களைப்பற்றி அவர்கள் எழுதிய பிரசித்திபெற்ற பாரதஸங்கிரஹம், ராமாயண ஸங்கிரஹம், பகவத் பாதாப்யுதயம் முதலிய பலநூல்களிலிருந்து நாம் நன்கு அறிவோம். அந்த மஹானுடைய ஜீவியசரித்திரத்தையே கூடியசீக்கிரம் நமது ஹிதபாஷிணியில் பிரசுரம் செய்வதாக உத்தேசித்திருப்பதால் தற்காலம் அவர்களைப் பற்றி அதிகம் எழுதப்படவில்லை.

அவர்கள் எழுதிவைத்த பல் கிரந்தங்கள் அச்சிடப்படாமல் அவர்களுடைய ஸத்புத்திரர்களான கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீ T. L. வெங்கிட்ட ராமய்யர் அவர்களால் இரக்ஷிக்கப் பட்டுவருகின்றன. அவற்றுள் இந்த "தைத்திரீயோ பனிஷத்காரிகா" என்ற சிறந்த நூலும் ஒன்றாகும். இதை நமது வேண்டுகோளுக்கிணங்கி நமது ஹிதபாஷிணியில் பிரசுரம் செய்வதற்காகக் கொடுத்து உதவிய ஜஸ்டிஸ் ஸ்ரீ T.L. வெங்கிட்டராமய்யர் அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இந்த நூலில் மொத்தம் 1185 அநுஷ்டுப்விருத்தத்தில் உள்ள சுலோகங்கள் காணப்படுகின்றன. இதில் "சிக்ஷாவல்லீ, ஆனந்தவல்லீ, பிருகுவல்லீ" என்ற மூன்று வல்லிகளின் கருத்துக்களும் ஸ்ரீ சாங்கர பாஷ்யத்தைத் தழுவி மிகத்தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. இச் சிறந்த நூல் தமிழ்மொழி பெயர்ப்புடன் தொடர்ச்சியாக நமது ஹிதபாஷிணியில் வெளிவரும். தனிப்புத்தகமாக பைண்டுசெய்து கொள்ளுவதற்காக தனிப்பக்கஎண்களுடன் அச்சிடப்படுவதை வாசகர்கள் கவனிக்க வேண்டும்.

6வது அனுவாகம் வரை ஹிதபாஷிணி 5வது தொகுதியில் தமிழ் உரையுடன் வெளிவந்தது வாசகர்களுக்கு ஞாபமிருக்கலாம். இந்த காரிகையையும் சேர்த்துப் பிரசுரம் செய்ய வேண்டியதற்காகவே அந்தத் தமிழ் உரை அதற்குமேல் பிரசுரம் செய்யப்படவில்லை. இனி அந்தத்தமிழ் உரை மட்டும் தனியாகப் பிரசுரம் செய்யவேண்டிய அவசியமில்லை.

இப்பொழுது, மேலே உபனிஷத்வாக்யம், கீழே அந்த வாக்கியத்தின் பொருளை விளக்கும் 'காரிகை' அதற்குக்கீழ் சில முக்கிய குறிப்புகள் என்ற முறையில் இந்த "தைத்திரீயோபனிஷத்காரிகா" பிரசுரம் செய்யப்படும்.

உபனிஷத்தின் கருத்தை அறிந்து அதை மனனம் செய்வதற்கு இந்த காரிகை மிகப்பயன்படும். தைத்திரீயோபனிஷத்பாஷ்யத்திற்கு ஸ்ரீ ஸுரேச்வராசாரியர் அவர்களால் எழுதப்பட்ட வார்த்திகம், (சுலோக ரூபமானவிரிவுரை) அச்சிடப்படிருப்பினும், இந்தகாரிகை எளிய நடையிலிருப்பதாலும், தமிழ் உரையுடன் வெளியிடப்படுவதாலும், இதனால் பலர் பயனடையக்கூடுமென்று நம்புகிறோம்.

ॐ नमः परमात्मने ॥

॥ तैत्तिरीयोपनिषत्कारिका ॥

शिक्षावल्ली ॥

प्रथमोनुवाकः ।

மங்களம்.

सर्वत्र स्वयमाभाति प्रमया च भ्रमेण च ।
अहमित्यात्मभूतत्वाद्यस्तमद्वयमाश्रये ॥ 1

எது எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பதால், பிரமை (உண்மை) யாகவும், பிரமமாகவும் (பொய்யாகவும்) "அஹம்" "அஹம்", என்று தாமாகவே எங்கும் தோன்றுகின்றதோ அப்படிப்பட்ட அத்விதீய ஆத்மஸ்வரூபத்தை ஆச்ரயிக்கின்றேன். (1)

"உபனிஷ்" என்ற சப்தத்தின் பொருள்

गर्भजन्मजरादीनां शातनाद्वावसादनात् ।
ब्रह्मणो वोपगमना दस्यामुपनिषीदति ॥ 2

परमं श्रेय इति वा विद्योपनिषदुच्यते ।
तद्ग्रन्थोपि तदर्थत्वात्ख्यातोपनिषदाख्यया ॥ 3

கர்ப்பவாஸம் பிறவி, கிழத்தன்மை முதலியவற்றை அகற்றுவதாலோ, அல்லது அறவே அழித்துவிடுவதாலோ, அல்லது பிருஹ்மத்தை அடைவிப்பதாலோ, அல்லது பரமசிரேயஸ் என்ற பரப்பிருஹ்மம் சமீபித்துவிடுகிறது, (அதாவது ஆத்மஸ்வரூபமாக அநுபவிக்கப்படுகிறது) என்ற காரணத்தாலோ ஆத்மவித்யையே உபனிஷத் என்ற சொல்லால் கூறப்படுகிறது. அந்தவித்யையைப் புகட்டுவதற்காக உபனிஷத்கிரந்தம் ஏற்பட்டிருக்கின்றபடியால் கிரந்தமும் உபனிஷத் என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

பிரதிஜ்ஞை.

तैत्तिरीयोपनिषदस्तत्र वल्लीत्रयेण यः ।
प्रकाशितोर्थस्तं वच्मि भाष्यकारप्रसादतः ॥ 4

அந்த உபனிஷத்துக்களுள் தைத்திரீயோபனிஷத்தின் மூன்று வல்லிகளாலும் எந்தப்பொருள் வெளியிடப்பட்டதோ, அதை பாஷ்யகாரர்களுடைய அநுக்கிரஹத்தால் எடுத்துரைக்கின்றேன்.

முதல் அனுவாக அவதாரிகை

आध्यात्मिकस्य प्राणादेः स्वस्थत्वे श्रवणादिकम् ।
सुखं सिद्ध्येत्तच्च तत्तधिदेवप्रसादतः ॥ 5
भवेदिति विचिन्त्याथ तत्प्रसादस्य लिप्सया ।
प्रथमेनानुवाकेन शिष्यः प्रार्थयते स तान् ॥ 6

உடலைச்சேர்ந்த பிராணன் முதலியவைகள் சுகமாக இருந்தால்தான் வேதாந்தசிரவணம் முதலியவை சுகமாகசித்திக்கும். பிராணன் முதலியவற்றின் ஸௌக்கியமும் அவற்றின் அபிமானி தேவதைகளின் அருளால் ஏற்படக்கூடும் எனக்கருதி, அந்த தேவதைகளின் அருளைப் பெறுவதன் பொருட்டு, சிஷ்யன் இந்த முதல் அநுவாகத்தால் அந்ததேவதைகளைப் பிரார்த்திக்கின்றான்.

(उ) ॐ । शन्नो मित्रः शं वरुणः । शन्नो भवत्वर्यमा ।
शन्न इन्द्रो बृहस्पतिः । शन्नोविष्णुरुरुक्रमः ॥

सुखं भवतु नो मित्रो देवतात्मा ऽभिमानवान् ।
अह्नश्च प्राणवृत्तेश्च तथा शं वरुणोपि नः ॥ 7
भवत्वपानवृत्तेश्च रात्रेरप्यभिमानवान् ।
अहोरात्राभिमानित्वं मित्रावरुणयोः क्रमात् ॥ 8
विस्पष्टं वै तज्जननान्न वा इदमिति श्रुतौ ।
तथा बलाभिमानीन्द्रो, वाग्बुद्ध्योरभिमानवान् ॥ 9
बृहस्पतिश्च, पादाभिमानवानुरुविक्रमः ।
विष्णुश्च नः शं भवन्तु तत्तत्स्वास्थ्यप्रदानतः ॥ 10
अध्यात्मदेवताः स्वस्वविषयेषु प्रसादतः ।
विद्यायाः श्रवणाद्यर्थमाविष्कुर्वन्तु नः सुखम् ॥ 11

பகலுக்கும் பிராணனுக்கும் அபிமானி தேவதையான மித்திரன் நமக்கு சுகத்தை அளிப்பவனாக ஆகட்டும். அவ்விதமே அபானனுக்கும் இரவிற்கும் அபிமானிதேவதையான வருணனும்

நமக்கு சுகத்தை அளிப்பவனாக இருக்கட்டும். மித்திரன் வருணன் இருவர்களும், பகல், இரவு இவ்விரண்டிற்கும் முறையே அபிமானி தேவதைகள் என்பது, "நவா இதம்" என்ற சுருதியில் (தைத்திரீய ஸம்ஹிதை 6-வது காண்டம், A-வது பிரச்னம் 8-வது அநுவாகம், 3-வது பஞ்சாசத்) மேற்படி இரு தேவதைகளும் இரவு பகல் இவ்விரண்டையும் உற்பத்தி செய்தார்கள் என்று கூறப்பட்டிருப்பதால் ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. அவ்விதமே பலத்திற்கு அபிமானியான பிருஹஸ்பதியும், பாதங்களுக்கு அபிமானியான எங்கும் வியாபித்த விஷ்ணுவும், அந்தந்த இந்திரியங்களுக்கு ஸௌக்கியத்தை அளிப்பதால் நமக்கும் சுகத்தைத் தருகின்றவர்களாக ஆகட்டும். இவ்விதம் அத்யாத்மதேவதைகள் அவரவர்களுக்கு விஷயமான உருப்புகளுக்கு அருள்புரிந்து, நமக்கு உபனிஷத் சிரவணம் முதலியவற்றைச் செய்வதற்கு வேண்டியஸௌகரியத்தை அளிக்கட்டும்.

सम्प्रार्थ्यैवमथ स्तौति प्रह्वत्वनमनादिना ।
वायुं ब्रह्मतया सर्वक्रियाणां फलदायकम् ॥ 12

இவ்வாறு பிரார்த்தனை செய்துவிட்டு, பிறகு, எல்லாக்கிரியைகளுக்கும் பயனை அளிக்கின்ற வாயுவை, வணக்கம், நமஸ்காரம் முதலியவற்றைச்செய்து பிரஹ்மமாக துதிக்கின்றார்.

உடலில் வாயு சரியாக இருந்தால்தான் சிரவணம் முதலியவற்றை இடையூறுகள் அன்றி செய்யமுடியும். ஆதலால் வாயுவை வணங்கி துதிக்கின்றார் என்பது கருத்து.

यथैव स्तूयते कार्यसिषाधयिषयाऽऽत्मनः ।
द्वास्थस्त्वमेव राजेति पुंसा राजदिदृक्षुणा ॥ 13
स्तुत्या तस्मिन् प्रसन्ने स्यात्सुकरं राजदर्शनम् ।
यथैवं हृदयांभोजे परंब्रह्म व्यवस्थितम् ॥ 14
दिदृक्षुस्तत्समीपस्थं प्राणाख्यं द्वारपालवत् ।
वायुं ब्रह्मतया स्तौति तदनुग्रहकाम्यया ॥ 15

அரசனைக்காண விரும்பும் மனிதன், தன்காரியத்தை சாதித்துக்கொள்ளுவதற்காக, அரண்மனையின் வாயிற்படியில் நிற்கும் சேவகனை "நீயே அரசன்" என்று எவ்விதம் துதிக்கின்றானோ, அந்தத்துதியால் அவன் திருப்தியடைந்ததும் இராஜதர்சனமும் எப்படி சுலபமாகக் கிடைக்கின்றதோ, அவ்விதமே, ஹிருதயக

மலத்தில் உள்ள பரப்பிருஹ்மத்தைப் பார்க்க விரும்புகின்றவன், த்வாரபாலகனைப்போல் அதற்கு சமீபத்தில் இருக்கும் பிராணன் என்ற வாயுவையே பிருஹ்மம் என்று துதிக்கின்றான், அதன் அநுக்கிரஹத்தைப் பெறவேண்டுமென்ற விருப்பத்தால்.

(उ) नमो ब्रह्मणे । नमस्ते वायो ।

सूत्रात्मना परोक्षाय ब्रह्मणे भवते नमः ।
अपरोक्षाय च प्राणात्मना वायो नमोस्तु ते ॥ 16

வாயு, ஸூத்ராத்மாவாக இருக்கையில் ப்ரத்யக்ஷமாக இல்லாததால், பரோக்ஷபிருஹ்மமாக இருக்கின்றது. ஆதலால் "ஏவாயோ! அப்படிப்பட்ட பரோக்ஷ பிருஹ்மரூபமான உனக்கு நமஸ்காரம்" என்று "நமோபிருஹ்மணே என்ற சுருதியின் தாத்பர்யம்.

அதேவாயு பிராணஸ்வரூபமாக இருக்கையில் ப்ரத்யக்ஷமாக இருக்கின்றது. ஆதலால் "ஏவாயோ! பிராணரூபமாக ப்ரத்யக்ஷமாக இருக்கும் உனக்கு நமஸ்காரம்" என்று "நமஸ்தேவாயோ" என்ற சுருதியின் தாத்பர்யம்.

(उ) त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि ।
त्वमेव प्रत्यक्षं ब्रह्म वदिष्यामि ॥

अपेक्ष्य चक्षुरादीनि बाह्यानि त्वं यदान्तरः ।
साक्षिवेद्यतया साक्षात्प्राण प्रत्यक्षता तव ॥ 17
बृंहणाच्च शरीरादेः क्षुत्तर्षश्वसनादिना ।
ब्रह्मासि प्राण तस्मात्वं प्रत्यक्षं ब्रह्म कथ्यसे ॥ 18
अतस्त्वामेव वक्ष्यामि ब्रह्म प्रत्यक्षमित्यहम् ।

கண் காது முதலியவைகள் நேரிடையாக அறியத்தகுந்தவை அல்ல. ரூபம், சப்தம் முதலியவற்றை அறிந்தபின் அநுமானப் பிரமாணத்தால் அறியத்தகுந்தவை. ஆதலால் அவை பாஹ்யங்கள் என்றும் வ்யவஹிதங்கள் என்றும் கருதப்படுகின்றன. அவைகளைக் குறித்து ஏ பிராணவாயோ! நீ ஆந்தரன். உள்ளே இருப்பவன். ஸாக்ஷியால் நேரிடையாக அறியத்தகுந்தவன். ஆதலால் உனக்கு ப்ரத்யக்ஷத்வம் சித்திக்கின்றது.

பசி, தாஹம், ச்வாஸம் முதலியவற்றால் சரீரம் முதலியவற்றை அபிவிருத்திசெய்வதால், ஏ பிராணவாயோ! நீ பிருஹ்மமாகவும் இருக்கின்றாய். (பிராணவாயுவின் வியாபாரத்தால் தான் பசி தாஹம் முதலியவை ஏற்படுகின்றன. அதனால் ஆஹாரத்தை உட்கொள்ளுகிறான். அதனால் உடல் வளர்கின்றது. ஆக பிராணவாயு சரீரம் முதலியவற்றின் விருத்திக்குக்காரணம்) மேற்கூறிய காரணங்களால் நீ ப்ரத்யக்ஷமென்றும், பிருஹ்மம் என்றும் கூறப்படுகிறாய். ஆதலால் நானும் உன்னையே ப்ரத்யக்ஷபிருஹ்மம் என்று கூறப்போகிறேன்.

(उ) ऋतं वदिष्यामि । सत्यं वदिष्यामि ।

ऋतं तदाहुः शास्त्रेण यत्कर्तव्यतया स्थितम् ॥ 19
तदेव सत्यं शास्त्रीयं वाक्कायाभ्यामनुष्ठितम् ।
त्वदधीनतया प्राण तयोर्वाकृतसत्ययोः ॥ 20
त्वमेवर्तं च सत्यं चेत्यभिधास्याम्यभेदतः ।

சாஸ்திரங்களால் தீர்மானிக்கப்பட்டிருப்பதை "ரிதம்" எனக் கூறுகின்றனர். அவ்விதம் சாஸ்திரங்களால் தீர்மானிக்கப்பட்டதே வாக்காலும் சொல்லப்பட்டு, உடலாலும் அநுஷ்டிக்கப்பட்டால் "ஸத்ய"மாகும். ஏ பிராணவாயோ! அந்த "ரிதம்" "ஸத்யம்" இவ்விரண்டும், உனக்கு அதீனமாக இருப்பதால், அதாவது, உன் பலத்தாலேயே மேற்கூறிய இரண்டும் சித்திக்க வேண்டியிருக்கின்றபடியால் உன்னையே "ரிதம்" என்றும் "ஸத்யம்" என்றும் அபேதமாகக் கூறப்போகிறேன்.

(उ) तन्मामवतु । तद्वक्तारमवतु । अवतु माम् । अवतु वक्तारम् ।

इत्येवं तन्मया ब्रह्म प्राणवाय्वभिधं स्तुतम् ॥ 21
विद्यार्थिनं मामवतु निर्विघ्नं तत्प्रदानतः ।
तथैव तस्या वक्तृत्वशक्तिसंयोजनेन मे ॥ 22
उपदेष्टारमाचार्यं तदेव ब्रह्म रक्षतु ।
आत्मनश्च गुरोश्चैवं द्विः प्रार्थयत रक्षणम् ॥ 23

இம்மாதிரி என்னால் துதிக்கப்பட்ட பிராணவாயு என்ற அந்த பிருஹ்மம், வித்யையை விரும்பும் என்னை, இடையூறுகளின்றி அந்தவித்யையை அளித்து இரக்ஷிக்கட்டும். அவ்விதமே அந்த பிருஹ்மம், அந்த வித்யையை எடுத்துரைக்கும் திறமையை

அளித்து உபதேசம் செய்யும் ஆசார்யனையும் இரக்ஷிக்கட்டும். இவ்வாறு தன்னையும் குருவையும் இரக்ஷிக்கவேண்டுமென்று சிஷ்யன் இருமுறை வேண்டிக்கொள்ளுகிறான்.

(उ) ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

आधिर्व्याधिश्च शारीर स्ताप आध्यात्मिको मतः ।
सर्पव्याघ्रादिजन्यो यः स तापस्त्वाधिभौतिकः ॥ 24
वर्षाशन्यादिजस्ताप आधिदैविक ईरितः ।
तेषां त्रयाणां विघ्नोपसर्गाणामुपशान्तये ॥ 25
शान्तिः शान्तिः शान्तिरिति पठ्यते त्रिर्मुमुक्षुणा ॥

உடலில் உண்டாகும் வியாதியும், கவலையும், "ஆத்யாத்மிக தாபம்" எனப்படும். பாம்பு, புலி முதலிய பிராணிகளால் உண்டாகும் துன்பங்கள் "ஆதிபௌதிகதாபம்" என வழங்கப்படும். மழை இடி முதலியவற்றால் விளையும் கஷ்டங்கள் "ஆதிதைவிகதாபம்" எனக்கூறப்படும். வித்யைக்கு இடையூறுகளான அந்த மூன்றுவித தாபங்களும் சாந்தியடைவதன் பொருட்டு "சாந்தி:, சாந்தி:, சாந்தி:" என்று மூன்றுதடவை மோக்ஷத்தைவிரும்புகின்றவனால் படிக்கப்படுகின்றது.

इति प्रथमोनुवाकः ।

இவ்வாறு முதல் அநுவாகம் முற்றிற்று.

अथ द्वितीयोनुवाकः ।

இரண்டாவது அநுவாகம்.

அவதாரிகை

अर्थज्ञानप्रधानोपनिषत्त्वेन प्रसज्यते ।
ग्रन्थपाठे प्रयत्नोपरमस्तन्मा स भूदिति ॥ 1
द्वितीयानुवाकेन तच्छिक्षाविधिरुच्यते ।
वर्णस्वरादिकाः सम्यक्शिक्षणीयाः प्रयत्नतः ॥ 2
नोचेद्विवक्षितार्थो नस्यादनर्थश्च जायते ।
स्वाहेन्द्रशत्रुरित्यत्र स्वरव्यत्यसनं यथा ॥ 3

त्वष्टारं तत्प्रयोक्तारं वृङ्क्ते सैवं स्वरादिकम् ।
व्यत्यस्तं नाशयेत्तस्माद्यत्नः कार्योऽस्य शिक्षणे ॥ 4

உபனிஷத்திற்கு அர்த்தஞானமே முக்கியமானதால் உபனிஷத்கிரந்த பாடத்தில் முயற்சியின் குறைவு ஏற்படக்கூடும். அது கூடாது என்பதற்காக இரண்டாவது அநுவாகத்தால் சிக்ஷாவிதி கூறப்படுகிறது. வர்ணங்கள் ஸ்வரங்கள் முதலியவற்றை மிகுந்த முயற்சியுடன் நன்றாக கற்றுக்கொள்ளவேண்டும். இல்லையேல் வாக்கியங்களிலிருந்து விவக்ஷிதமான அர்த்தம், அதாவது குறிப்பிடவிரும்பியபொருள் சித்திக்காது, அனர்த்தமும் (விபரீதமும்) உண்டாகும். "ஸ்வாஹேந்த்ரசத்ரு:" என்ற இடத்தில் ஸ்வர வித்தியாசம் ஏற்பட்டு விட்டதால் அந்த மந்திரத்தை பிரயோகம் செய்த த்வஷ்டாவிற்கே அது தீங்காக விளைந்துவிட்டது. ஆதலால் ஸ்வரம் முதலியவற்றின் சிக்ஷையில் மிகுந்த முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

த்வஷ்டா என்பவர் இந்திரனை வதம் செய்ய ஓர்புத்திரன் வேண்டுமெனக்கருதி "இந்த்ரசத்ரு:" என்ற சொல்லை உச்சரித்தான். இச்சொல்லின் அந்தத்தில் உதாத்தஸ்வரம் உச்சரிக்கப் பட்டால் "இந்திரனுக்குச்சத்ரு" என்ற பொருள் கிடைக்கும். ஆதியில் உச்சரிக்கப்பட்டால் 'இந்திரனைச் சத்ருவாகவுடையவன்' என்ற பொருள் கிடைக்கும். அந்தோதாத்தமாகச் சொல்ல வேண்டியிருக்க தவறி ஆதி உதாத்தமாகச் சொல்லி விட்டதால் பிறந்த பிள்ளைக்கு இந்திரன் சத்ருவாக (கொல்லுகின்றவனாக) ஆகி விட்டான்.

(उ) शीक्षां व्याख्यास्यामः ।

अतस्तदर्था या शिक्षा विस्पष्टार्थतयैव ताम् ।
आसमन्ताद्वदिष्यामस्तदुच्चारणलक्षणाम् ॥ 5

ஆதலால் அதன் பொருட்டு, வர்ணோச்சாரணம் முதலியவற்றை விளக்கிக்கூறும் யாதொருசிக்ஷையுண்டோ, அதை தெளிவாக முழுவதிலும் எடுத்துரைக்கப் போகின்றோம்.

वि + आ + ख्यास्यामः = व्याख्यास्यामः ॥

(उ) वर्ण स्वरः । मात्रा बलम् - सामसन्तानः ।

अकारादिर्हकारान्तः स्वरस्पर्शादिभेदवान् ।
इहाक्षरसमाम्नायो वर्ण इत्यभिधीयते ॥ 6
उदात्तश्चानुदात्तश्च स्वरितश्च त्रयः स्वराः ।
ह्रस्वोदीर्घः प्लुतश्चेति मात्राश्च त्रिप्रकारकाः ॥ 7
बलमत्र प्रयत्नं बाह्याभ्यन्तरसंज्ञकम् ।
साम वर्णोच्चारणं स्याद्वृत्त्या मध्यमया समम् ॥ 8
तेषामव्यवधानेन भवेदुच्चारणं तु यत् ।
सततं तैलधारावत् स सन्तान इतीर्यते ॥ 9

ஸ்வரம், ஸ்பர்சம், முதலிய பேதங்களையுடைய அகாரம் முதல் ஹகாரம் வரையில் உள்ள அக்ஷரஸமுதாயமே இங்கு வர்ணம் எனக்கூறப்படுகிறது. "உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம்" என்று ஸ்வரங்கள் மூன்று. "ஹ்ரஸ்வம், தீர்க்கம், ப்லுதம் என்று மாத்ரைகளும் மூவகைப்படும்.

"பாஹ்யம்," "ஆப்யந்தரம்" என்ற பிரயத்நமே இங்கு பலம் எனப்படும். நடுத்தரமான முறையில் (அதிகவேகமு மில்லாமல் அதிகதாமதமுமில்லாமல்) சமமாக எழுத்துக்களை உச்சரித்தலே 'ஸாம" எனப்படும்.

அந்த எழுத்துக்களை இடைவெளியில்லாமல், தைலதாரை போல் தொடர்ச்சியாக உச்சரித்தல் என்பதே ஸந்தானம் எனக் கூறப்படுகிறது.

(उ) इत्युक्तः शीक्षाध्यायः ।

एतावान् शिक्षणीयोऽर्थः आवर्णादाच सन्ततेः ।
शिक्षापरोयमध्याय इत्येष प्रतिपादितः ॥ 10

வர்ணம் முதல் ஸந்தானம் வரை உள்ள விஷயங்களே கற்றுக்கொள்ளப்படவேண்டியவை. இவ்வாறு இந்த "சிக்ஷாத்யாயம்" என்பது நிரூபணம் செய்யப்பட்டது.

इति द्वितीयोऽनुवाकः ।

இவ்வாறு இரண்டாவது அநுவாகம் முற்றிற்று.

நாகப்படலம்

இந்நோய் கண்களில் தோன்றினால் அப்பிணியாளன் சிறிதேனும் சொத்துடையவனாக இருப்பான். ஏனெனில் ராஜ சின்னங்களில் ஒன்றான "செவ்வரி" என்ற இனத்தைச் சேர்ந்தது இது.

கடைக்கண் ணிருபுறத்தில் காணவேசிவப்புத் தோன்றில்
துடைசதை போலேவந்து சோதியைத் தின்னுநாளில்
அடைந்திடும் விழிகள் தன்னில் அதிகநீர்த் தினவுமுண்டாம்
நடைபடி குணங்க ளெல்லாம் நாகமாம் படலமாமே.

(இ-ள்)

கடைக்கண் என்பது மூக்கின் பக்கத்திலுள்ள சந்திப்பிற்கும் காதுப் பக்கத்தில் காணப்படும் சந்திப்பிற்கும் பெயர்களாகும். ஆகவே "கடைக்கண்ணிருபுறத்தில்" எனக் கூறினர். மேற்படி பக்கங்கள் ஏதேனும் ஓரிடத்திலிருந்து சதை முளைத்தெழுந்து முளைத்த இடம் சிறுத்து பின்பு அகலமாக ஆகி வெள்விழியைக் கடந்து கருவிழியில் பாய்ந்து கருவிழியின் மத்தியிலுள்ள பாவையைச் சமீபித்துவிட்டால் எப்பொருளைப் பார்த்தாலும் பிணியாளிக்கு ஒன்று இரண்டாகத் தோன்றும். வெயிலில் அலைந்தாலும், பசியினால் வருந்தினாலும் கண்களில் சிவப்பு அதிகரிக்கும். இது பாவையில் பாய்ந்துவிட்டால் பாவையிலுள்ள நீரைத்தின்று கண்களைக் குருடாக்கும். கண்களில் அரிப்பும் தோன்றும். நீர்ப்பாய்ச்சலும் உண்டாகும். இவ்வாறு படர்ந்திருக்கும் சிவப்புசதையானது பனையின் நாறுபோல் மிக அழுத்தமாயிருக்கும். இதை ஊசியினால் தூக்கினால் கண்களைவிட்டுப் பெயர்ந்து வரும். இந்த ரோகத்திற்குச் சஸ்திரப் பிரயோகம் செய்வதுண்டு. சிலர் ஊசியினால் இலகுவாய் கொத்தி இழுத்துக்கொண்டு கத்தரியினால் கத்தரித்து விடுவார்கள். சிலர் மூக்கினடியில் கத்தியைச் செலுத்தி சஸ்திரப் பிரயோகம் செய்வதும் உண்டு. சிலர் போதுமானவரை கத்தரித்துவிட்டு மீதியுள்ளதை சிரஸின் ரோமத்தினால் கட்டிவிடுவதும் உண்டு. மேலும் அது வளர வளரக் கத்தரித்து விடுவார்கள். தலை மயிர் எந்நாளும் கண்ணீரினால் மடிக்காது. இத்தகைய துன்பங்கள் வேண்டாம். படலாதி மாத்திரைஎன்ற மருந்தை கண்களில் தீட்டிவர அது வெகு எளிதில் நாறு போன்ற சதையைத் தின்றுவிடும். தாமிராதி மாத்திரையும் நல்லது. படல பஸ்பத்தையும் இடலாம். ஆனால் படலபஸ்பம் இட்டால் சிறிது உறுத்தலுண்டாகும். அது எம்மிடம் அனுபவப்பட்டிருப்பினும் அதை இடுவதில்லை. ஆகவே மாத்திரைகளைப் பிள்ளைப்பாலில் இழைத்துத் தீட்டிவர இந்நோய் ஒழியும்.

வெள்ளைப் படலம்

கண்ணினில் வெள்ளைதன்னில் கலந்தோர் பாலினடை
உண்ணியே விழிக்கும்போது உறுத்திடும் உரத்துவைத்து

நண்ணிய பளிங்குபோல நலமயிர் புகைந்துகாட்டும்
வெண்ணிய மதிமுகத்தாய் வெள்ளையாம் படலமாமே.

(இ-ள்)

பாலைக்காய்ச்சி உரைக்குத்தி வைத்தால் அதன் மேலே உண்டாகும் ஆடையைப்போலக் கண்களில் சதை வளர்ந்து கண்களை மூடித்திறக்கையில் உறுத்தும். சிலருக்குப் பளிங்கைப்போல் வெண்மை நிறமாகவும் சிலருக்கு மயிரைப்போல் கறுத்துமிருக்கும். பார்வை குறைவடையும். இத்தகைய குறிகள் காணப்படில் இது "வெள்ளைப்படலம்" ஆகும். இந்நோய் நாகபடலத்தைப்போல் அவ்வளவு கொடுமையானதல்ல. ஏனெனில் இது சதையினாலான ஆடையைப்போல் படர்ந்திருக்குமேயல்லாது நாகபடலத்தில் காணப்படுவதுபோல் நாறு போன்ற வளர்ச்சியல்ல. நாகபடலம் கரைவதற்கு மிகநாட் செல்லும். வெள்விழிப்படலம் வெகு எளிதில் கரைந்து பார்வை மந்தத்தையும் நீர்ப்பொழிதலையும் நீக்கி விடும்.

சிகித்ஸை :—படலாதி அல்லது தாமிராதி மாத்திரையை முலைப்பாலில் இழைத்துக் கண்களில் இடவும். வியாதியின் கொடுமைக்கேற்றபடி நாள் பேதங்களில் கரைந்துவிடும். சந்தேகமில்லை. சௌக்யமானபின் அல்லது சிகித்ஸை ஆரம்பத்திலோ பிருங்காமலகத் தைலத்தைத் தேய்த்து மூழ்கிவரக் கண்ணிலிடு மருந்திற்கு மிக்க உதவியாயிருக்கும். இதிலோர் சங்கையுண்டு. அதாவது வெற்றிலையும் பாக்கும் மட்டும் தின்றால் சிவக்காது. பாக்கும் சுண்ணாம்பும் சிவக்காது. எப்படி இம்மூன்றும் ஒன்று சேர்ந்தால்தான் சிவப்பு நிறம் உண்டாகின்றதோ, அதைப்போல் மருந்திலிருக்கும் சில சரக்குகளின் வேகமும் தைலத்தின் குளுர்ச்சியும் ஒன்று சேர்ந்தால்தான் ரோகம் மடியும். இப்பெரு நோய்களெல்லாம் சீக்கிரத்தில் சௌக்யமாகவேண்டுமென்றால் அது இயலாது. அவைகளுக்கான நாட்கள் சென்ற பின்னர்தான் குற்றமற நீங்கும். காசு சிலவிற்குக் கசந்தாலும் முடியாது.

இரத்தப்படலம்

கருத்திடுங் குமுறுங்காற்றால் கனத்திடும் பீளைபாயும்
எரித்திடுங் கண்களிரண்டும் இரத்தமே வீழ்ந்துகாட்டும்
நெரித்திடும் பிடரிஉச்சி நீங்கிடாக் குத்துகாணும்
இரத்தமாம் படலமென்று இயம்பினர் இனிதுமாதோ.

(இ-ள்) சரீரம் கருத்திருக்கும். வாயுவினால் சரீரத்தில் பாரமேற்படும். கண்களில் பீளைசாறும். எரிச்சலுண்டாகும். கண்களில் இரத்தம் இறங்கிச் சிவக்கும். பிடரி, உச்சி, தலை முதலான இடங்களில் தாங்கமுடியாத வலியேற்படும். மேற்கூறிய செய்யுளில் இந்த நோயின் விபரம் கூறப்பட்டிருப்பினும் எமது அனுபவத்தில் கண்ட குணங்களை

யிங்கு கூறுவோம். சிறு பிள்ளைகளுக்கு வரும் கக்குவான் இருமல் ரோகமுள்ள குழந்தைகட்குத்தான் இது அதிகமாகக் காணும். கருவிழிக்குக் கீழே சிவப்பு நிறமுள்ள ஒரு கோடுபோல் தோன்றி நாளடைவில் அது விசாலித்து வந்து வெள்விழி முழுவதும் பரவி உயர்ந்து சிவப்பு நிறமாகி நாட்கள் செல்லச் செல்லக் கறுத்துவரும். மேலும் குழந்தையானது விழி பிதுங்கும்படி ரொம்பவும் கடுமையாக இருமும்போது கண்களிலுள்ள வலைபோல் பின்னப்பட்ட இரத்தக் குழாயிலுள்ள இரத்தம் வெளியே பிதுங்கி வெளிப்பட்டு "சிருங்கை" என்ற வெள்ளைச் சவ்வுக்குள் (Sclera) அடங்கி வெளிப்படாமல் நின்று சிவந்து காட்டுகின்றது. இதற்குக் கண் மருந்து மாத்திரம் போதாது. உள்ளுக்கும் அவசியமாக மருந்து கொடுத்தல் வேண்டும்.

சிகித்ஸை :—கறுப்பு மிளகு, அரிசித்திப்பிலி, கொட்டைப்பாக்கின் மெல்லிய சீவல் இம்மூன்றையும் சமனெடையெடுத்துத் தனித்தனியே கரியாகும் வண்ணம் வறுத்துக்கொண்டு மூன்றையுஞ் சேர்த்து அம்மியிலோ அல்லது கல்வத்திலோ மயமாகத் தூளாக்கி வடிக்கட்டிக் கொள்ளவும். பழய தேய்ந்த செருப்பு ஒன்றை எடுத்து அடித்தோலை அறுத்து ஓர் ஓட்டில் வைத்து 10 வரளியில் புடமிடவும். அதையெடுத்துக் குழியம்மியில் வைத்து நுணுக்கச் சிவப்பாகும். இதை வஸ்திரகாயஞ் செய்தெடுத்து, முற்கூறிய சரக்குகளுக்குச் சமயெடை நிறுத்துக்கொண்டு கல்வத்தில் எல்லாவற்றையும் இட்டு ஒன்றுக்கி, மூவிரல் கொண்ட அளவெடுத்துத் தேனுடன் குழைத்துத் தினம் காலையிலும் மாலையிலும் கொடுக்கவும்.

பத்தியம் :— வாயுபதார்த்தம், நீர்ப்பண்டம், முறிவு பதார்த்தங்கள் முதலியவைகளை நீக்கிவிடவும். நெய் கூட்டிக் கொள்ளவும்.

மற்றொரு மருந்து :— வில்வம் 21 தளமெடுத்துக்கொண்டு அவைகளின் காம்பை நீக்கிவிடவும். 21 தளத்தில் 63 இலைகளாயின. அதன் நிறைக்குச்சமம் துளசிதளமும், வேப்பங் கொழுந்தும் சேர்த்துக்கொண்டு தண்ணீரில் போட்டுக் கசக்கி, பூச்சிகள் போக அலசிவிடவும். பின்பு அம்மியைச் சுத்தமாகக் கழுவி அதில் வைத்து நன்கு மைபோலரைத்துப் பசுவின் பாலில் குழப்பிக் காலையில் ஒரு வேளை மட்டும் கொடுக்கவும். மேலே சொன்ன மருந்தைத் தேனில் குழைத்துச் சாப்பிட்டபின் இப்பாலையும் கொடுக்கலாம். சாயங்காலம் செந்தூர மருந்து மட்டும் கொடுத்தால் போதுமானது. இவைகளால் கக்குவான் குறையும். இது குறையவே சூரிய சந்திரர்களைப் பிடித்த ராகு கேதுகள் எவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாக விட்டு விலகுகின்றனரோ அதேபோல் சரீர சீதோஷ்ணத்திற்குத் தக்கப்படி வியாதியும் சிறுகச் சிறுகக் குறைவடைந்து இரத்தப்படலம் நீங்கி ஒள்ளிய கண்களாகும். பார்வை குன்றாது. கண்ணிலிடு மருந்தோவெனில் "காசகுளிகை."

யாகும். ஒரு சொட்டுத்தேனைச் சந்தனக் கல்லிலிட்டு அதிலிழைத்துப் பின்னர் கண்களில் பிரயோகிக்கவும். வழவழப்பான கல்லில் இழைக்க இழுதுவராது.

பில்லம்

பில்லம் மூவகைப்படும். இதில் அநேக வகையிருப்பினும் அவைகள் எல்லாவற்றையும் இங்கு கூறுவது அவசியமில்லை. ஏனெனில் அவைகளைத் தெரிந்துகொள்ள அகஸ்தியர் நயன விதி-500 என்ற புத்தகத்தைப் பார்க்கவும்.

பில்லம் என்பது வடமொழிச் சொல்லாகும். மூவகைப் பில்லங்களாவன (1) சதைப் பில்லம் (2) நீர்ப்பில்லம்' (3) வரள் பில்லம்

சதைப் பில்லம்

இமையைக்கடுத்து மேல்கனத்து இடுக்கி நீரும் பீளையிடும்
குமையைச் சிவந்து வெளுப்புண்டாம் கூசிவிழியும் கீழ்நோக்கும்
சமையத் திரண்டு புருவம்கீழ் சதையும் வளர்ந்து உறுத்துவிக்கும்
நிமையத் திறக்கில் சதைமூடும் நீர்ப்பில்லம் ஈதெனலாம்.

(இ-ள்) இமைகளில் கடுப்புண்டாகித் தடித்துக் கண்கள் சுருக்கங் கொண்டு கண்ணீரும் பீளையும் அதிகமாகும். ஒருவேளை ஒரு பிரயோகமும் செய்யாமல் போனாலும் தனக்குத்தானே வெளுப்புண்டாகிவிடும். விழிகளில் கூச்சம் அதிகமாவதால் நிமிர்ந்து பார்க்க இயலாது. மேலிமையைப் புரட்டிப் பார்க்கும்போது உள்ளே அமரத்திற்கு எவ்வாறு சதை வளர்ந்திருக்குமோ அவ்வாறு வளர்ந்திருக்கும். இந்த ரோகத்திற்கும் "சரவணவிதிப்" பிரயோகம் செய்யலாம். செய்யுள் முடிவில் நீர்ப்பில்லம் என்றிருப்பது ஏதோ தவருக எழுதப்பட்டிருக்கிறதென்று தீர்மானிக்கிறேன்.

சிகித்ஸை:—இவ்வியாதி மூலத்தில் கனலேறி அவ்வனல் கண்களில் தாக்கி உண்டாகிறது என்பது திண்ணம். இதற்கு முதல் சிகித்ஸையாக உஷ்ணத்தை தணித்துக் கொள்ளவேண்டும். எவ்வாறெனில் பவழம், சிருங்கி இவைகளின் பற்பத்தை ஓரளவாய் சேர்த்துத் திரிகடிப் பிரமாணம் எடுத்துக் காலையில் வெண்ணெயிலும் சாயுங்காலம் நெய்யிலும் கூட்டி வரவேண்டும். "பிருங்காமலகத்தைலம்" தேய்த்து மூழ்கவும். கண்களிலிடும் மருந்தோ "தாம்ராதி மாத்திரை" யாகும். இதைப் பிள்ளைப்பாலிலிழைத்துக் காலையிலும் மாலையிலும் பயறளவெடுத்துக் கண்களுள் இடவேண்டும். காலையில் சூரியோதயத்திற்குப் பின்புதான் இடுதல் நலம்.

நீர்ப்பில்லம்

கருகிய இமையினுள்ளே கதித்ததுர் மாமிசம்போல்
அருவியே யுறுத்தி நொந்து அதிகமாய் சிவந்து கூசும்
மருவிய பூவுந்தோன்றும் மாறுதே பீளைபாயும்
பெருகிய நீருமுண்டாம் பில்லமா மென்றுசொல்லே.

(இ-ள்) மேலிமையைப் புரட்டிப் பார்க்கத் தடித்த சதை வளர்ந்திருப்பதால் தூசி விழுந்ததுபோல் கண்களை அருவியும், உருத்தலுடன் நோக்காடடைந்தும் சிவப்புடன் கூச்சத்தையுண்டுபண்ணும். கருவிழியின் மேல் சிறு புள்ளிபோல் பூவும் காணும். ஓயாமல் பீளை கட்டும். ஏராளமாகக் கண்ணீர் வடியும். இவை "நீர்ப்பில்ல" ரோகத்தின் இலட்சணங்களாம். இதற்கும் சதைப் பில்லத்திற்குச் சொல்லியவாறு சிகித்ஸைகளைச் செய்யவேண்டும்,

வரள் பில்லம்

இந்நோய் தேகத்தில் அளவிற்கு மேற்பட்ட உஷ்ணமேறிக் கண்களைத்தாக்கி உண்டாகும். கண்களின் இமைகளைப் புறட்டிப் பார்க்கையில் வரகரிசியைப்போல் சிறு சிறு கொப்புளங்கள் காணும். அதனால் கண்ணில் உறுத்தல், சிவப்பு, நீர்வடிதல், பீளைசேரல் முதலிய துன்பங்களுண்டாகும். இந்நோய்க்கு ஆங்கிலத்தில் **"Granulated lids or Trochoma"** எனப்பெயர்;

சிகித்ஸை:—தாமிராதி மாத்திரையைப் பிள்ளைப்பாலிலிழைத்து இமைகளைப் புறட்டி மருந்து கண்களில் பரவும்படி தீட்டிவந்தால் சதை, நீர்ப்பில்லங்களைப்போல் நாட்கள் நீடிக்காமல் வெகு எளிதில் இதுவும் குணமாகும். இதற்கும் முற்கூறிய "தைலம்" மிக முக்கியம் என்பதை அறிக. எனது அனுபவத்தில் இக் கொடிய நோய் பிராமண ஸ்திரீ புருஷர்களுக்கும், மகம்மதிய ஸ்திரீகளுக்குமே அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிகிறது. பிராமணர்கள் அதிகமாக ஹோமாதிகளில் ஈடுபட்டிருப்பதாலும், நீரில் முழுகுவதனாலும் ஏற்படுகிறது என்று தெரிகிறது. ஸ்திரீகளுக்கோவெனில் அதிகமாகப் பட்டாடை உடுத்துவதாலும், ஈரமான புடவை கட்டிக்கொள்வதனாலும் ஏற்படுகிறதோ என்பது என் ஐயம். மகமதியர்களோ அதிகமாக மீனிறைச்சி, மாம்ஸம் முதலானவைகளைச் சாப்பிடுவதால் ஏற்படுகின்றது என்று தீர்மானிக்கிறோம்.

அறுபது அல்லது எழுபது வருடங்களுக்கு முன் தக்ஷிண தேசத்துத் தமிழ் பிராமணர்கள் வீட்டில் குழந்தைகள் பிறந்தால் பெண் குழந்தைகளின் நஞ்சுக் கொடியை அறுத்தான பின் ஊசியைப் பழுக்கச் செய்து இரு புருவங்களின் மேலும் சுட்டு விடுவார்கள். ஆண் குழந்தையாயிருப்பின் வயிற்றில் தொப்புளுக்கு மேல் 3 கோடாகச் சுட்டுவிடுவார்கள்.

இவைகளுக்குக் காரணம் என்னவென்றால் பெண்களுக்குச் சுடுவதனால் பில்லரோகம் வராது என்றும் ஆண்களுக்கு வயிற்று நோய்கள் வராது என்றும் கூறுவார்கள். சில சமயங்களில் ஆண்களுக்கு முழங் காலுக்குக் கீழும், கணுக்காலுக்கு 4 விரற்கடை யளவில் இரு கால்களி லும் சுட்டு விடுவதும் உண்டு. இம்மாதிரி கிரியைகளுக்கு "அறுகு வைத்தல்" என்று பெயர். முன்னோர்கள் சூட்டுக் கோல் என்ற இரும் பாயுதத்தைக் கொண்டு நெருப்பில் பழுக்க வைத்துச் சுட்டு விடுவது வழக்கம். எமது நாளிலோ அதை ஒழித்து விட்டு நரம்புஸ்தானங்களைக் கண்டு பிடித்து மஞ்சள் தூறினால் சுட்டு விடும் வழக்கத்தை 3 தலை முறைகளாக ஏற்படுத்திக்கொண்டோம். சிலர் புண் மருந்துகளைக் கொண்டு புண்ணாகும்படி செய்து ஆற்றி விடுவதும் உண்டு. இதனால் வியாதி முற்றிலும் எடுபடுவதில்லை.

நாட்பட்ட பில்ல ரோகங்களுக்கு "ஐபதி சூரணம்" என்ற சிவனை வேர்ச் சூரணத்தை 15 நாட்களுக்கு ஒரு முறை பேதிக்குச் கொடுக்க வேண்டும்.

புழு வெட்டு

நீட்டிய தினவுங் கூச்சம் நீர்வரு மிமையும் வீக்கம்
கூட்டிடும் பீளைசேரும் பருமூளை போலத் தோன்றும்
நாட்டியே மயிருதிர்ந்து நற்சந்த ரக்தம் வீழும்
காட்டிது மயிர்புழு வெட்டு கண்டவ ருரைத்தவாறே.

(இ-ள்) கண்களின் இமைகளில் அரிப்பும், கூச்சமும், கண்ணீர் வடிதலும், இமைகளில் வீக்கமும், பீளைகட்டுதலும், சிறு சிறு கொப் புளங்கள் போலும் பற்பல குறிகள் தோன்றும். இமை ரோமங்க ளுதிர்ந்து சதை வளர்ந்து இரத்தம் பொழியும். இதற்கு ஆங்கிலத்தில் "absence of eye lashes" எனப் பெயர்.

சிகிச்சை:—இதற்கான ஒரு மையைச் செய்து பிரயோகிக்க இந் நோய் சுத்தமாக நீங்கி விடும். மை செய்யும் முறையை ஔஷதப் பிர கரணத்தில் காண்க.

நேத்திர சூலை

நயனத்தில் வாயுநின்று நவில்புரு வத்திற்குத்தி
செயல்கெட விரணமுண்டாய்த் திரண்டுநீர் மூக்கில்விழும்
இயல்பினை யறிந்துகொண்டு இவ்வலி ரோகமாற்ற
அயனுரை செய்தவுண்மை மருந்துநீ யறிந்து செய்யே (1)

தீருமே வாதநோவு சிவப்புண்டாய் கனத்துக்கண்ணைச்
சேருமே பறிக்குமாப்போல் தினவுடன் வலியுமுண்டாகும்
நீருமே நனைத்துப் போட்டால் நின்விரல் உலர்ந்து காணும்
சாருமே யிரவில் நோவு தானது மிகவுண்டாமே (2)

நேத்திர வாயுநின்று நெருங்கிய இடியுண்டாக்கி
மாத்திரக் கண்சிவந்து வலித்திடுஞ் சிரஸில் குத்தும்
கேத்திர கேதஞ் சூகம் தம்பவம் கீசமுற்றி
நீத்திலா காசம்போல நின்விழி குருடதாமே (3)

(இ-ள்) கண்களில் வாயுதங்கி புருவத்தில் குத்துவலி யேற்படும். கண்களில் விரணம் ஏற்பட்டிருப்பது போன்ற பிரமையுண்டாகும். மூக்கில் நீர் சுரந்து வடியும். கண்கள் சிவந்து, கண்களை வெளியே பிடுங்குவது போன்ற வலியும் அரிப்பும் உண்டாகும். கண்களில் நீர் பொழியும். அதை விரலால் தொட்டால் வெகு சீக்கிரத்தில் உலர்ந்து விடும். இரவில் வலி அதிகரிக்கும். கண்களில் சிவப்புடன் தலைவலி யும் ஏற்படும். கேத்திரம், கேதம், சூகம், தம்பவம், கீசம் முதலான நிலைமைகளையடைந்து கண்கள் குருடாகும். இந் நோய் மிகக் கொடிய நோய்களில் ஒன்றாகும். நோயின் ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்தால் தான் குணமுண்டாகும். நாட்கள் செல்லச் செல்ல இந்நோய் கண்களை மறைத்துக் குருடாகும். கிரந்த கர்த்தா, கேத்திரம், சூகம், தம்பவம், கீசம் இவை போன்ற வ்யாதிகள் கண்களை மறைப்பது போல் மறைத்து விடும் என்கிறார். இப் பெயர்களை மதுரையையாண்ட வீரபாண்டியன் என்னும் அரசர் செய்திருக்கும் நூலில் காண்க. இவைகள் தற்போது வழங்குவதில்லை. கண்களிருண்ட பின்னர் இந் நோயை ஆங்கில வைத்தியர்கள் "glaucoma" என வழங்குவர். அதன் அர்த்தம் "கண்விழி கல்லைப் போன்றிருத்தல்" என்பது. நேத்திர சூலையிலும் அவ்வாறே இருக்கும்.

சிகிச்சை:—நோய் ஆரம்பமாயிருந்தால் தலையில் வலியிருக்கும் போது நெற்றியைக் கவனித்துப் பார்க்கில் நெற்றி நரம்புகள் புடைத்துக் காணும். வலியில்லாத சமயத்திலோ சுழுத்தில் துணியைச் சுற்றி முருக்கி ஹிம்ஸை இல்லாதபடி பிடித்தால் தான் நெற்றி நரம்பு கள் புடைக்கும். அச்சமயம் மூக்கிற்கு மேல் நெற்றியில் 2 விரற் கடையளவு இடம் ஈச்வரனின் இருப்பிடமானதால் அதை விட்டு விட்டு வலப்புறம் 3 இடங்களிலும் இடதுபுறம் 3 இடங்களிலும் சுட்டு விடவும். வளைவில்லாமல் நேராகவுள்ள கறிமஞ்சள் கொம்பைத் தீபத்தில் பிடித்துக் கருக்கைத் தரையில் தேய்த்து விட்டு, பின் புறத்தில் வேறொருவனை இறுத்தி நோயாளியின் கையைப் பிடித்துக் கொள்ளச் சொல்லியும் தீபத்திற் பிடித்த மஞ்சளை நரம்பின் மேல் வைத்திருக்கும் சுண்ணாம்புக்குறியின் பேரில் 2 நிமிஷம் வைத்து எடுத்து விடவும். இப் படியாக ஒரு குறிக்கு 2 தடவை சுடவேண்டும். கைச்சுருக்காகச் செய் யவும். பின்பு நோயாளிக்குச் சிறிது ஆகாரமும் பானமும் கொடுக் கவும். நெற்றியில் கட்டுவதற்கு மேலே ஒரு பட்டியும் உள் பட்டி யொன்றும் தயார் செய்து வைத்துக்கொள்ளவும். ஒரு வெற்றிலை யைக் காலணா அளவுள்ளதாகக் கத்தரித்துக்கொண்டு, அந்த இலையினுட்

புறத்தில் முந்திரி எண்ணெய் ஒரு சொட்டுவைத்துச் சுட்ட இடத்தில்கட்டி விடவும், இவ்வாறு 6 இலைகளையும் ஆறு புண்களுக்கும் இட்டு உள் பட்டியை மேலே வைத்து நழுவாமலும் புருவத்திற்கும் மேலே இருக்கும் படியாக வைத்து, அதன் மேல் மேல் பட்டியை வைத்து இழுத்துப் பின் புறம் ஒன்றரை முடிச்சு இடவும். மறு நாள் வரச்சொல்லிக் கட்டுகளை யவிழ்த்து இலைகளை யெடுத்து விட்டு மறுபடியும் புது இலைகளைக் கத்தரித்து ஷை புண் தைலத்தை அதே விதம் வைத்து வேறு துணிகொண்டு இறுகக் கட்டிவிடவும். சில தேகிகளுக்கு 2 அல்லது 3 நாட்கள் சென்றபின்னர் சீழ் பிடித்து விடும். பின்னர் புண்கள் அது ஆறுவதற்கு முலாம் தடவி ஒட்டவும். சீழ் எதேஷ்டமாக வெளிவரும். இப்படியாகச் செய்து வர 10 அல்லது 12 நாட்களுள் இரணம் முற்றிலும் ஆறிவிடும். முலாம் செய்யும் விதத்தை ஔஷதப் பிரகரணத்தில் காண்க.

உள்ளுக்கு மருந்து:—வெட்டை, புண், கிரந்தி, சூலை முதலியவைகளைக் கண்டிக்கும் மருந்துகளுடன் "வாதகாச" தைலத்தையும் முழுகுவதற்குக் கொடுக்கவும். கண்களுக்குத் தாமிராதி மாத்திரை இடவும். சிலருக்கு வெள்ளையினால் மட்டும் இந்த நேத்திர சூலை ஏற்படும். அதற்குக் "கண்டுபற்பத்தைக்" கண்களிலிட நோய் அறவே நீங்கி ஒளி உண்டாகும்.

நந்தைப்படுவன்

இந்நோய் எமது அனுபவத்தில் 5 வயதிற்கு மேல் 19 வயதிற்குள் பட்ட பிள்ளைகளுக்குத் தான் உண்டாகிறது.

குறிகுணங்கள்:—கண்ணீர் விடாமல் பொசியும். கடைக்கண்களில் குத்துவலி யேற்படும். மேல், கீழ் இமைகள் வீங்கும். சீழ் போல் பீளை சதா வெளிவரும். கண்களில் உறுத்தலும், சிவப்பும் அதிகரிக்கும். கண்களை விழிக்க இயலாது.

சிகிச்சை:—ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்ய வேண்டும், அது முற்றிப் பழுத்து உடைந்து சீழ் வெளிப்படுமே யானால் கண்களின் பார்வைக்கு ஆதாரமான இடங்கள் கெட்டுப் போய்விட்டதென்ற தீர்மானம். சௌக்யமானாலும் பார்வை வராது. ஆரம்ப நிலையிலே நோயிருந்தால் பார்வை கெடாது. "இரணசிங்கி மாத்திரை"யைப் பிள்ளைப் பாலில் இழைத்து இமையின் மேல் பற்றுகப் போடவும். 2 அல்லது 3 நாட்களுள் குழந்தை கண்களைத் தானே திறக்கும். திறந்த பின் இம்மாத்திரையைச் சுத்த ஜலத்திலிழைத்துப் பயறளவு கண்களுக்குள்ளிடவும். ஒரு மாதத்திற்குள் சுத்தமாகி விடும். பழுத்து உடைந்த கண்களுக்கோ இம்மருந்தை பற்றுக இட்டுவர இமைத்[illegible] ளும் திறக்கும். ஆனல் பார்வை இராது. உடைந்த கண்களில் [illegible] விடுவதால் பார்வை கெடும்.

199867
SL
Rm 21153,N47
N52:6:5-6

ஹிதபாஷிணி

1953 மார்ச்சு௴ முதல் விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம் தடவை 1க்கு	ரூ	20-0-0
அரைப்பக்கம் ,,	ரூ	10-0-0
கால் பக்கம் ,,	ரூ	6-0-0

நீண்டகால விளம்பரங்களுக்குவிசேஷ சலுகைகள் உண்டு விளம்பர விகிதத்தை முன்னதாகவே அனுப்பிவிட வேண்டும்.

சந்தா விபரம்.

வருடச்சந்தா	ரூ	3-0-0
தனிப்பிரதி		0-8-0

நவம்பர்௴ முதல் வருஷ ஆரம்பம் சந்தாத்தொகையை முன்னதாகவே அனுப்பி வைக்க வேண்டும்.

ஹிதபாஷிணி 5வது தொகுதி பைண்டு செய்தது ரூ 3-4-0

மானேஜர்:- ஹிதபாஷிணி, மேலவீதி, தஞ்சை.

STUTI KUSUMA MALA.

Review of "THE HINDU" Dated 8-2-53

Thirteen stotras for parayana are given in this book with Tamil transliterations and Tamil translations. They are taken from Harivamsa, skanda purana, Devi Mahatmya and other sources. Three of them are attributed to Sri Sankara Bhagavatpada, one, Devinavaratna Malastotra is attributed to Kalidasa. The Totaka Saranagate was sung by Totakacharya on Sri Sankara. The Mahamaya Ashtaka is a poem by Panganadu Mahamahopadhyaya Ganapathi Sastrigal. The Saptarishi Ramayana is the story of the seven kandas narrated in brief by the seven Rishis each contributing one verse. The Daridrya Duhkha Dahanashtaka with more than one alternative title is attributed variously to Sri Sankara and to Vasishtha. It was obtained from the Tanjore Saraswathi Mahal Library. The collection will be welcomed by religiousminded people.

உங்கள் தேவைக்கு

நம்பிக்கையும், நாணயமும் உள்ள

எங்கள் கடை

1812-ல் ஸ்தாபிக்கப்பட்டது

தகுதியான இடம்:-

B.S. ஜோஷி & பிரதர்ஸ்

மேலராஜவீதி, தஞ்சாவூர்.

உயர்ந்த ரக பட்டு, நூல் ஜவுளி ஏராளமாக

ஸ்டாக் செய்திருக்கிறோம்.

Edited and published by Sri R. Muthukrishna Sastrigal, 1835.3 west main street, Tanjore, and printed at the Mannargudi Press Ltd, Manargudi, by Sri V. Rajagopalan B. A, B. L.